www.alhasanath.lk

Desgn: Sinan

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 40 இதழ்: 06 ஜூன்: 2014 ஷஃபான்: 1435



## வருகிறது ரமழான்... வரவேற்க நீங்கள் தயாரா?

## 'இஸ்லாம்' அல்லாஹ்வினுடையது; 'இஸ்லாமியப் பணி' மனிதர்களுடையது



## மோடியின் வெற்றியும்

### சிறுபான்மையினரின் எதிர்காலமும்

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல்

60/-


ESOFT
Shaping Lives, Creating Futures.
METRO CAMPUS KANDY
LONDON metropolitan university
3 Year Degrees
B.Sc. (Hons) in Computing
B.Eng. (Hons) in Software Engineering
B.A. (Hons) in Business Administration
Course fee
Rs. 750, 000/-
flexible payment structure
September INTAKE
Enroll NOW
LONDON metropolitan university
ESOFT METRO CAMPUS
Exclusive Partner of London Metropolitan University in Sri Lanka
*condition apply
077 37 852 98 | No. 447, Peradeniya Road, Kandy.

بسم الله الرحمن الرحيم

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.


அல்குர்ஆன் விளக்கம் 4-6
**இரவுகள் கூறும் இறை செய்தி!**
மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

அல்ஹதீஸ் விளக்கம் 7-10
**கடன் பளுவுடன் கூடிய நிழல் வாழ்க்கை தேவைதானா?**
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

தஃவா களம் 11-14
**'இஸ்லாம்' அல்லாஹ்வினுடையது; 'இஸ்லாமியப் பணி' மனிதர்களுடையது**
உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்



"நகரும் இரவின் மீது சத்தியமாக! அறிவுடையோருக்கு இனியும் சத்தியம் தேவையா?"

(ஸூரதுல் பஜ்ர்: 4, 5)


மலர்: 40 இதழ்: 06


2014 ஜூன் | ஷஃபான்: 1435

ISSN : 1391 - 460X


**15-16 ஆபிரிக்கா**

**17-19 மோடி**


வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

தொடர்புகளுக்கு:
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி :(011) 2689324,
தொலைநகல் :(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.lk



அந்நிஸா
20-23 **மகளிர் மட்டும் வாசிக்கவும்!**

அல்இஸ்ராவும் பைத்துல் மக்திஸும் 32-33
வருகிறது ரமழான்... வரவேற்க நீங்கள் தயாரா? 34-35
ஜம்இய்யா 40-41
ஸீரதுந் நபி 47-48
அருள் மழையில் 49
இஸ்லாம் 50-52

**அநீதி** 38-39


**விலை விபரம்:**

உள்நாடு: தனிப் பிரதி: ரூபா 60.00 | வருட சந்தா: ரூபா 1050.00 | ஆறு மாதம்: ரூபா 525.00

வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா: 2550.00 | மத்திய கிழக்கு நாடுகள்: 2600.00 | அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3300.00 | இங்கிலாந்து, நியூசிலாந்து: 4000.00 | ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4700.00

# Teacher Training Program in Kandy

## தகைமை வாய்ந்த ஆசிரியராவதற்கான பாடநெறி

**DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)**
**DIPLOMA IN PRE-SCHOOL TEACHER TRAINING**
**DIPLOMA IN TRAINING SKILLS**
**DIPLOMA IN CHILD PSYCHOLOGY**
**ENGLISH**

AMI | TVEC | City & Guilds

6 மாதம் (Week Ends)

பாடநெறி முடிவில் 2 சர்வதேச சான்றிதழ்கள் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## DIPLOMA IN NETWORKING

02 வார முழுநேர வதிவிட/வதிவிடமற்ற பாடநெறி

100% Practical Oriented

Duration:
02 weeks (Full Time)
02 months (Part Time)

சிறந்த ஒரு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

## INTERNATIONAL DIPLOMA IN BUSINESS MANAGEMENT

**Management** துறையில் சிறந்த ஒரு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

- Human Resource Management
- Marketing Management
- Business Communication
- Management Information Systems
- Organization Behavior
- Project Management
- Financial Management
- Business Law

Duration:
01 Month - Full Time
06 Months - Week End

Target Group
- Students after OL/AL
- Job seekers
- Executives
- Personal assistants

பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச்சான்றிதழ் வழங்கப்படும்

தொழில் தகைமையொன்றை பெற்றுத்தரக்கூடிய

## REAL ACCESS PROGRAM

இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்

1) Dip in English
2) Dip in Computer Studies
3) Dip in Graphic Designing
4) Dip in Web Designing
5) Dip in Hardware

3 மாதம் Weekly 05 Days 8:30 to 4:30

02 சர்வதேச ISO தரச் சான்றிதழ்கள் உட்பட 05 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்

## DIPLOMA IN AIRLINE

Specialized in Air Ticketing

- Airline Ticketing
- Air Fare Calculation
- Airline Geography
- Operation of a Travel Agency
- Airline & Travel Terminology
- Reservation Procedures
- IATA International Regulations
- Basics of GDS & Cargo

Duration: 02 Months

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதி

## AUTO CAD


Full Time/Part Time

Diploma in AUTO CAD | Diploma in AUTO CAD 3D | Advanced Diploma in AUTO CAD

# GOLDEN COLLEGE

548, Peradeniya Road, Kandy. 0812 20 55 44

மேலதிக விபரங்களுக்கு
0777 44 62 52
0777 222 529



# முஸ்லிம்களின் நிலைமைக்கு விடிவு?

முஸ்லிம்களாகிய நாம் ஒரு சிறுபான்மை சமூகமாக இலங்கையில் வாழ்ந்து வருகிறோம். எங்கே பெரும்பான்மைச் சமூகம் எம்மை இறாய்ஞ்சிச் சென்றுவிடுமோ எனும் அச்சம் அண்மைக் காலமாக உருவாக்கப்பட்டு வருகின்றது.

யூத சமூகத்தினரும் இவ்வுலகில் இரண்டாயிரம் வருடங்களாக அகதிகளாகவே வாழ்ந்து வந்தவர்கள். இது இறைவனால் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்தது. எனினும், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அவர்களின் சிந்தனாவாதிகள் ஒன்றுசேர்ந்து ஒரு பாரிய திட்டத்தை வகுத்தார்கள். அதுதான் தமக்கென ஒரு நாட்டைப் பெற்றுக் கொள்வதும் உலகளாவிய ஆட்சியமைப்பொன்றை அமைத்து, அதன் சிம்மாசனத்தில் தாம் அமர்ந்து கொள்ள வேண்டும் என்பதுமாகும்.

பிற சமூகங்களால் பல இன்னல்களுக்கு உட்பட்டிருந்தவேளை, யூத சமூகம் பல பாடங்களைக் கற்றுக் கொண்டது. அவற்றைப் பயன்படுத்தி, இன்று அவர்கள் தமது கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; பிற சமூகங்களைப் பழிவாங்கிக் கொண்டுமிருக்கிறார்கள்.

“அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகம் யூத சமூகம்தான். ஏனைய அனைத்து சமூகங்களும் தமக்குச் சேவகம் செய்ய வேண்டியவை” என்ற உணர்வை யூதர்களின் உள்ளங்களில் விதைத்து, உள்ளங்களைத் திடப்படுத்தினார்கள். பிற சமூகங்களைச் சீரழிப்பதற்காக “குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்” என்ற தத்துவத்தை விதைத்தார்கள். உலகளாவிய நாகரிகமாக கிரேக்கர்களின் Hedonism எனும் உலக இன்பங்களில் மூழ்கி வாழும் பழக்கத்தை ஏற்படுத்தினார்கள். ஆட்சிக்கான வழிமுறையாக பிர்அவ்னிஸத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களின் கைவந்த கலையான வட்டியை உலகளாவிய பொருளாதார அமைப்பாக மாற்றினார்கள்.

“ஒரு பொய்யைத் தொடர்ந்து மீட்டிக் கொண்டிருந்தால் அதனை உண்மையென உலகம் ஏற்றுக் கொள்ளும்” என அவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையை வைத்து உலகளாவிய மீடியாவை உருவாக்கி தம் கைகளில் வைத்துக் கொண்டார்கள். சினிமா ஒரு பாரிய சமூக ஊடகம் என்பதை உணர்ந்து, உலகில் அராஜகத்தையும் ஆண்-பெண் அசிங்கங்களையும் அரங்கேற்றுவதற்காக ஹொலிவூட்டை உருவாக்கினார்கள். அவர்களைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் பொலிவூட், கொலிவூட் என்ற பெயர்களில் தத்தமது சினிமாத் துறையை உருவாக்க உதவி, உலகளாவிய சமூக சீரழிவுக்கு வித்திட்டார்கள். இவ்வாறு சகல வழிகளிலும் தமது சிந்தனைக்கு ஏற்பான தத்துவங்களை வகுத்து, இன்று உலகை அழிவை நோக்கி வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லாஹுத் தஆலா நபிமார்களைத் தொடர்ச்சியாக அனுப்பி யூத இனத்தை உலகில் மேன்மைப்படுத்தி வைத்திருந்தான். எனினும், ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன், இத்தலைமைத்துவம் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உம்மத்துக்கு வழங்கப்பட்டது.

ஆனால், இன்று முஸ்லிம் சமூகம் இதனை உணர்ந்து கொள்ளாத சமூகமாக, சிந்தனையே இல்லாத சமூகமாக, திட்டங்களே இல்லாத சமூகமாக வாழ்ந்து வருகிறது. இல்லா விட்டால் சஊதி அரசு எகிப்தில் உருவாகவிருந்த இஸ்லாமிய ஆட்சியை அழிக்க முன்நிற்குமா? துருக்கியின் தலைவரை ‘பாஸிக்’ எனவும் கிலாபத்துக்குத் தகுதியற்றவர்களாகவும் பத்வா வழங்குமா? முஸ்லிம்களே முஸ்லிம்களை அழித்தொழிக்கும்போது உலகளாவிய தலைமைத்துவத்தை எவ்வாறு அல்லாஹுத் தஆலா அவர்களுக்கு வழங்குவான்?

நமது நாட்டு முஸ்லிம்களின் நிலையும் இவ்வாறே அமைந்துள்ளதனால்தான் எதிரிகளின் சூழ்ச்சிகளை உணர்ந்து, அவற்றுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது.

ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டு, ஒத்த சிந்தனையை வளர்த்தெடுத்து, உருப்படியான, உறுதியான திட்டங்களின் அடிப்படையில் நாம் செயல்பட முன்வராத வரை, நாம் இழந்த உலகளாவிய தலைமைத்துவத்தை மீண்டும் அடைந்து கொள்ள முடியாது.

தெளிவான சிந்தனை, சமூக ஒருமைப்பாடு, பொறுமை, சீரிய திட்டம், தகுதிவாய்ந்த தலைமைத்தும் இவை என்று நாம் அடைந்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேவைகளாகும்.



# இரவுகள் கூறும் இறை செய்தி!

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர், அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

*"நகரும் இரவின் மீது சத்தியமாக! அறிவுடையோருக்கு இனியும் சத்தியம் தேவையா?"*

*(ஸூரதுல் பஜ்ர்: 4, 5)*

அல்குர்ஆனின் 89ஆவது அத்தியாயமாகிய ஸூரதுல் பஜ்ரின் ஒளியில் இரவு மற்றும் இரவின் மகத்துவம் குறித்து கருத்தாட விரும்புகின்றோம். தர்பிய்யாவுக்கும் தஃவாவுக்குமான பதினான்கு முறைமைகளை முன்வைக்கும் இந்த ஸூராவின் இன்னுமொரு தனி மனித பயிற்றுவிப்புக்கான முறைமை இங்கு பகிரப்படுகிறது.

பஜ்ரின் தோற்றத்தோடு ஆரம்பித்த புதிய ஒரு நாளின் முதல் பகுதி (பகல்) சூரிய அஸ்த்தமனத்துடன் முடிவுற்று இரண்டாம் பகுதி (இரவு) தோற்றம் பெறுகிறது. புவிப்பந்தில் ஏற்படும் இவ்விரண்டு தொடர்ந்தேர்ச்சையான பௌதிக மாற்றம் வெறும் ஒளியும் இருளும் என்பதற்கப்பால் மனித உணர்வில், சிந்தனையில், நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

ஒரு முஸ்லிம் தனது புதிய நாளின் முதல் பகுதிக்குள் பஜ்ர் தொழுகை மற்றும் பஜ்ரின் பிரார்த்தனைகளுடன் பிரவேசிப்பது போல், அதன் இரண்டாம் பகுதிக்குள் அலாதியான தயார்படுத்தல்களுடன் பிரவேசிக்கின்றான்.

"இறைவா, உனது இரவு முன்னோக்கிக் கொண்டிருக்கிறது. உனது பகல் பின்னோக்கிச் செல்கிறது. இது உனது அழைப்பின் சத்தம். என்னை மன்னித்துக் கொள்வாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! நீ தான் மன்னிக்க கூடியவனும் அன்பு காட்டக்கூடியவனுமாவாய்" எனத் தொடங்கி பல்வேறுபட்ட ஆத்மிக அரவணைப்புக் கோஷங்களுடன் இரவுக்குள் பிரவேசிக்க இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

அல்லாஹ்வின் கட்டளையுடன் இரவு நகர்கிறது. அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இருப்பினும் இரவுப் பொழுதுகளை இறை வழிபாட்டில், இறை தியானத்தில், இறை உவப்பைப் பெற்றுத் தரும் ஏனைய காரியங்களில் ஈடுபடவும் இரவின் இனிய பொழுதுகளை வீணாக்கி விடவும் மனிதனால் முடியும். அல்குர்ஆன் கையாண்டுள்ள "அல்லைல்" (இரவு) என்ற சொற்பிரயோகத்தினூடாக ஒரு முஃமினின் நம்பிக்கைக் கோட்பாட்டில் ஈமானிய, செயல் ரீதியான அர்த்தங்களை நிலைபெறச் செய்கிறது. இரவு, பகலை மாறி மாறி வரச் செய்வதுவும் பகலுக்குள் இரவை வரச் செய்வதும் பகலை

**இவை அனைத்துமே அல்லாஹ்வோடு வேறொரு கடவுளில்லை, இபாதத்தில், எண்ணங்களில், வெளிப்படுதலில், அன்பு வைத்தலில், பிரார்த்திப்பதில், நேர்ச்சைகள் செய்வதில், அறுத்துப் பலியிடுவதில் வாழ்க்கைக்கான சட்ட ஒழுங்குகளை வழங்குவதில், தவக்குல் வைத்தலில் அவனை மாத்திரமே சார்ந்து நில்லுங்கள் என்கிறது. இரவுக் காட்சிகளின் வாசிப்பு ஈமானில் ஊட்டத்தை வழங்கி புதிய செயல்களின்பால் தூண்டி நல்லடியார்களுக்கிடையே அல்லாஹ்வை நோக்கிய போட்டி நிலையைத் தோற்றுவிக்கின்றது.**

இரவால் மூடுவதும் இரவின் நேரத்தை வரையறுப்பதுவும் அல்லாஹ்வின் அதிகாரத்தையும் நாட்டத்தையும் ஞானத்தையும் சார்ந்ததாகும். அல்குர்ஆன் கூறும் இரவுகளை நான்கு கண்ணோட்டங்களில் அவதானிக்க முடியும்.

**01. ஏகத்துவத்திற்கு சான்று கூறும் இரவுகள்**

“வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோர்களுக்கு நிச்சயமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன.” (ஆலுஇம்றான்: 190)

“அவனே இரவைச் சுருட்டி பகலை (விரிக்கின்றான்). அவனே பகலைச் சுருட்டி இரவை (விரிக்கின்றான்). சூரியனையும் சந்திரனையும் அடக்கி வைத்திருக்கின்றான்.” (அஸ்ஸுமர்: 5)

“நிச்சயமாக அல்லாஹ் இரவை பகலிலும் பகலை இரவிலும் நுழைய வைக்க ஆற்றலுடையவனாக இருக்கின்றான்.” (அல்ஹஜ்: 61)

“இரவையும் பகலையும் நாம் இரு அத்தாட்சிகளாக்கினோம். இரவின் அத்தாட்சியை மங்கச் செய்தோம்.” (அல்இஸ்ரா: 12)

புவியோட்டின் மீது வாழும் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், கடலின் மேற்பரப்பில் அடியின் ஆழத்தில் வாழ்பவை அனைத்தும் இரவின் இருளுக்குள் இன்னுமொரு பௌதிக மானுசீக மாற்றத்தை நோக்கி நகர ஆரம்பிக்கின்றது. இந்த சமாந்தர, சமநிலைத் தன்மையை தொடர்ந்தேர்ச்சியாக நிருவகித்துக் கொண்டிருப்பவன் யார்? சூரிய அஸ்த்தமனத்துடன் குளிர்ச்சியுடன் கூடிய ஒளியைத் தரும் பிறை நிலா பல படித்தரங்களையும் தரிப்பிடங்களையும் கடந்து பூரண நிலையை எய்தி பின்னர் மெல்லத் தேய்ந்து “உர்ஜூனுல் கதீம்” (பழைய பேரீச்சங் குலையின் பாழையைப் போல்) நோக்கிச் செல்லும் அந்தக் காட்சியைக் காண்கின்றோம். இவை அனைத்துமே அல்லாஹ்வோடு வேறொரு கடவுளில்லை, இபாதத்தில், எண்ணங்களில், வெளிப்படுதலில், அன்பு வைத்தலில், பிரார்த்திப்பதில், நேர்ச்சைகள் செய்வதில், அறுத்துப் பலியிடுவதில் வாழ்க்கைக்கான சட்ட ஒழுங்குகளை வழங்குவதில், தவக்குல் வைத்தலில் அவனை மாத்திரமே சார்ந்து நில்லுங்கள் என்கிறது. இரவுக் காட்சிகளின் வாசிப்பு ஈமானில் ஊட்டத்தை வழங்கி புதிய செயல்களின்பால் தூண்டி நல்லடியார்களுக்கிடையே அல்லாஹ்வை நோக்கிய போட்டி நிலையைத் தோற்றுவிக்கின்றது.

**02. இறை நேசர்களின் இனிய இரவுகள்**

“(அல்லாஹ்வுக்கு இணை வைப்பவன் சிறந்தவனா?) அல்லது எவர் மறுமையைப் பயந்து தன் இறைவனின் அருளை எதிர்பார்த்து இரவு காலங்களில் நின்றவனாகவும் சிரம் பணிந்தவனாகவும் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருக்கின்றாரோ அவரா?...” (அஸ்ஸுமர்: 09)

**அல்லாஹ்வின் பெயரால் எழுந்து நின்று தனது பகற் பொழுதின் அனைத்து விவகாரங்களிலும் இஸ்லாத்திற்கு சான்று பகர்ந்து நின்ற முஸ்லிம்கள் இரவின் இனிய பொழுதுகளில் ஆத்மிக இன்பம் காண காத்திருக்கின்றார்கள். நீண்ட நேர வாசிப்பு, ஆய்வு முயற்சிகள், எழுத்தாக்கங்கள், தஃவா மற்றும் கல்வியில் கலந்துரையாடல்கள், பிந்திய இரவுப் பொழுதில் இஸ்திஃபார், திலாவத், திக்ர், தஸ்பீஹ், தஹஜ்ஜுத், பிரார்த்தனைகள் என இரவுப் பாடசாலையின் மாணவர்களாய் இறைவனுக்கு முன்னால் தனித்தனியே காட்சியளிக்கின்றார்கள்.**

“இரவின் ஒரு பாகத்திலும் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னாலும் அவனைத் துதி செய்வீராக!” (காப்: 40)

“இரவு காலங்களிலும் பகலின் இரு முனைகளிலும் இறைவனைப் புகழ்ந்து துதி செய்து கொண்டிருங்கள். இதனால் நீங்கள் திருப்தி அடையலாம்.” (தாஹா: 130)

“இரவிலும் அவனுக்கு சிரம் பணிந்து வணங்கி, இரவின் நெடு நேரம் அவனைத் துதி செய்து கொண்டிருப்பீராக!” (அல்இன்ஸான்: 26)

“எவர்கள் தங்கள் பொருளை (பிறருக்கு உதவிடும் நோக்கில் இரவிலும் பகலிலும் இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்குரிய கூலி இறைவனிடம் அவர்களுக்கு உண்டு.” (அல்பகறா: 274)

“அவர்கள் இரவுக் காலங்களில் அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதி நின்று, சிரம் பணிந்து வணங்குகின்றனர்.” (ஆலு இம்றான்: 113)

“பகலின் இரு முனை (களாகிய காலை, மாலை) களிலும் இரவின் ஒரு பாகத்திலும் நீங்கள் (தவறாது) தொழுது வாருங்கள். நிச்சயமாக நன்மைகள் பாவங்களைப் போக்கி விடும். இறைவனைத் துதி செய்து புகழ்பவர்களுக்கு இது

ஒரு நினைவூட்டலாகும்." (ஸூரதுல் ஹூத்)

அல்லாஹ்வின் பெயரால் எழுந்து நின்று தனது பகற் பொழுதின் அனைத்து விவகாரங்களிலும் இஸ்லாத்திற்கு சான்று பகர்ந்து நின்ற முஸ்லிம்கள் இரவின் இனிய பொழுதுகளில் ஆத்மிக இன்பம் காண காத்திருக்கின்றார்கள். நீண்ட நேர வாசிப்பு, ஆய்வு முயற்சிகள், எழுத்தாக்கங்கள், தஃவா மற்றும் கல்வியில் கலந்துரையாடல்கள், பிந்திய இரவுப் பொழுதில் இஸ்திஃபார், திலாவத், திக்ர், தஸ்பீஹ், தஹஜ்ஜுத், பிரார்த்தனைகள் என இரவுப் பாடசாலையின் மாணவர்களாய் இறைவனுக்கு முன்னால் தனித்தனியே காட்சியளிக்கின்றார்கள்.

அல்குர்ஆனிய கவிஞர் அல்லாமா இக்பால் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் வார்த்தைகளில் இப்படிச் சொல்வோம்.

"இரவின் புருஷர்களே! முயலுங்கள்!

எத்தனையோ சப்தங்கள் மறுதலிக்கப்படுவதில்லை

யாரிடம் உறுதியும் முயற்சியும் உண்டோ

அவர் இரவுத் தொழுகைக்காக துயிலெழுவார்"

**03. இறை நேசர்களின் ஓய்விற்கும் தூக்கத்திற்குமான இரவுகள்**

"அவனே சுகம் அடைவதற்காக இரவை ஆக்கினான்." (அல்அன்ஆம்: 96)

"இரவில் நீங்கள் நித்திரை செய்து இளைப்பாறிக் கொள்வதும் பகலின் அவனுடைய அருளைத் தேடிக் கொள்வதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்." (அர்ரூம்:23)

"நபியே, நீங்கள் கேளுங்கள் பகலை கியாம நாள் வரையில் நீடிக்கும்படி, அல்லாஹ் செய்து விட்டால், நீங்கள் இளைப்பாறக் கூடிய இரவை உங்களுக்கு கொண்டு வரக் கூடிய இறைவன் அல்லாஹ்வையன்றி வேறொருவன் இருக்கின்றானா? (அல்கஸஸ்: 72)

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும், வாழ்வாதார தேவைகளை நிறைவு செய்வதற்காக ஹலாலான சம்பாத்தியத்திலும், அழைப்புப் பணியிலும், அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டும் பன்முகச் செயற்பாடுகளிலும், மனித சமூகத்தின் பல்வேறு நலன்களைக் கவனிப்பதிலும் தமது பகல் பொழுதில் ஓய்வில்லாது உழைத்தவர்கள் இரவின் அமைதிக்குள் ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள். இரவுத் தூக்கத்திற்காக உடல், உளச் சுத்தத்துடன் படைத்தவனை துதி செய்து அன்றைய பொழுது குறித்த சுய விசாரணையுடன் அல்லாஹ்வைப் புகழ்ந்தவர்களாகவும் பாவ மன்னிப்புக் கோரியவர்களாகவும் தூங்குகிறார்கள்.

**04. இறை நேசர்களின் இல்லறப் பொழுதுகள்**

"நோன்பின் இரவுகளில் நீங்கள் உங்கள் மனைவிகளுடன் வீடு கூடுவது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்." (அல்பகறா: 187)

"நாமே இரவை (உங்களுக்கு)ப் போர்வையாக்கினோம்." (அந்நபஉ: 112)

இறை நெறியின் வாழ்வொழுங்கை சகல விவகாரங்களிலும் பேணி நாகரிகமாக, கண்ணியமாக வாழும் தம்பதிகள் தமது இயல்பூக்கத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான பொழுது இரவு. அதன் மூலம் கருணை மிக்க இரட்சகனின் திருப்தியையும் அவனது கூலியையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

**குறிப்பு: கலாநிதி ஸலாஹ் சுல்தான் அவர்களின் ஸூரா பஜ்ருக்கான விளக்கத்தை தழுவி எழுதப்பட்டது.**

## ஷஃபானில் அதிகம் நோன்பு நோற்கும்படி பணிக்கப்பட்டதன் இரகசியம்

உஸாமா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! ஷஃபான் மாதத்தில் நீங்கள் நோன்பு நோற்பதைப் போன்று ஏனைய மாதங்களில் நீங்கள் நோன்பு நோற்பதை நான் காணவில்லையே!" என்று கேட்டேன். அதற்கவர்கள், அது ரஜபுக்கும் ரமழானுக்குமிடையில் வரும் மாதமாகும். இம்மாதம் பற்றி மக்கள் கவனயீனமாக இருக்கின்றார்கள். அது எப்படிப்பட்ட மாதம் எனில், அகிலத்தாரின் அதிபதியாகிய அல்லாஹ்வின்பால் வணக்க வழிபாடுகள் உயர்த்தப்படக்கூடிய மாதமாகும். எனது வணக்க வழிபாடுகள் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உயர்த்தப்பட வேண்டுமென விரும்புகிறேன்" எனக் கூறினார்கள். (நஸாஈ, அஹ்மத்)

ஷஃபான் மாதம் சிறப்பு மிக்கது. அடியார்கள் செய்யும் அமல்கள் அம்மாதத்தில் அல்லாஹ்விடம் எடுத்துக் காட்டப்படுகின்றன. அமல்கள் எடுத்துக் காட்டப்படும்பொழுது, நோன்பும் கூட இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்!

# கடன் பளுவுடன் கூடிய நிழல் வாழ்க்கை தேவைதானா?

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"எவன் மக்களின் பணத்தை (அல்லது பொருட்களைத்) திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன் வாங்கினானோ அவன் சார்பாக அல்லாஹ்வே அதனைத் திருப்பிச் செலுத்தி விடுவான். எவன் திருப்பிச் செலுத்தும் எண்ணம் இன்றி அதை (ஏமாற்றி) அழித்துவிடும் எண்ணத்துடன் கடன் வாங்கினானோ அல்லாஹ் அவனை அழித்து விடுவான்."

(ஸஹீஹுல் புகாரி)

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அடுத்தவரின் உதவி ஒத்தாசை இன்றி வாழ்வது சிரம சாத்தியமானதாகும். மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் கஷ்ட நஷ்டமும் இயல்பானவை. இவற்றிலிருந்து முழுமையாக விடுபட்டு நிம்மதியானதும் சௌபாக்கியமிக்கதுமான ஒரு வாழ்வை நோக்கி மனிதன் பயணப்படுகின்றபோது கடன் கொடுக்கல்- வாங்கலில் அவன் ஈடுபடுவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடுகின்றது. இதன்போது கடனாளிகளின் மனோபாவம் எவ்வாறு இருக்கும் என்பதை மேற்படி ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடனாளிகளை வகைப்படுத்திப் பேசுகின்றார்கள். முதல் வகையினர் கடனை எப்படியாவது திருப்பி ஒப்படைத்து விட வேண்டுமென்று முழுமையான முயற்சியை முன்னெடுப்பவர்கள். இவர்கள் கடனாக தாம் பெற்று வந்த பணத்தை அல்லது பொருட்களை அமானிதமாக கருதுகின்றவர்கள். கடன் தந்தவரின் நிலையை எண்ணிப் பார்த்து அவரை அசௌகரியப்படுத்த விரும்பாதவர்கள். தமது கையில் பணம் இருந்தால் அதனை துரிதமாக திருப்பி ஒப்படைத்து விட முனைபவர்கள். தமது கடன் குறித்த ஆழ்ந்த கவலையுடனும் மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும் என்ற தக்வா உணர்வுடனும் வாழுகின்றவர்கள். இவர்களுடன் அல்லாஹ் இருக்கின்றான். மேலும் அல்லாஹுத் தஆலா கடனை அடைப்பதற்கான பல்வேறு வழிகளை இவர்களுக்காகத் திறந்து விடுகின்றான்.

"எவர் ஒருவர் அல்லாஹ்வுக்குப் பயந்து வாழுகின்றாரோ அவருக்கு அல்லாஹ் கஷ்டத்திலிருந்து விடிவைக் கொடுக்கின்றான். அவர் நினைத்துப் பார்க்காத வகையில் அவருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகின்றான்." (ஸூரா அத்தலாக்: 2-3)

கடனாளிகளில் அடுத்த சாரார் கடனை திருப்பிச் செலுத்தும் எண்ணம் இல்லாதவர்கள். இவர்கள் கடன் வழங்கியவரை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்து அதல பாதாளத்தில் தள்ளி அழித்து விடும் நோக்கில் கடன் வாங்குதலைப் பழக்க வழக்கமாகவும், சம்பாத்தியத்திற்கான வழிமுறையாகவும் மாற்றிக் கொண்டவர்கள். இவர்களை அல்லாஹ் அழித்து விடுவான். அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வருகின்ற அழிவு தொடர்பில் இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி (ரஹிமஹுல்லாஹ்) இவ்வாறு கருத்துத் தெரிவிக்கின்றார்கள்:

"அந்த அழிவு உலகில் அவருக்கு ஏற்படும். அதாவது அவரது வாழ்விலும் ஆன்மாவிலும் அந்த அழிவு ஏற்படும்." (பத்ஹுல் பாரி ஷர்ஹு ஸஹீஹுல் புகாரி பாகம்: 5 பக்: 68 ) இரண்டாவது வகையான கடனாளியின் அழிவு என்பது அவரை அல்லாஹ் திடீரென மரணிக்கச் செய்வதில்லை. மாறாக, கடனாளியின் ஆன்மா கெட்டு விடும். பொய்யும் வாக்குறுதிக்கு மாறு செய்யும் இழிகுணமும் வளர்ந்து விடும். அவரை பிறர் நம்ப மாட்டார்கள். கையறு நிலையில்கூட எவரும் உதவ அவருக்கு முன்வர மாட்டார்கள். அவரை நெருங்கிப் பேச மாட்டார்கள். அவரைப் பற்றிய கெட்ட அபிப்பிராயத்தை அவரது சமூகச் சூழலில் பரப்பி விடுவார்கள். ஈற்றில் அவர் நடைப்பிணமாக வாழ நேரிடும் அல்லது தலைமறைவாகி விட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம். இதுவே அவரை

அவரை பிறர் நம்ப மாட்டார்கள். கையறு நிலையில்கூட எவரும் உதவ அவருக்கு முன்வர மாட்டார்கள். அவரை நெருங்கிப் பேச மாட்டார்கள். அவரைப் பற்றிய கெட்ட அபிப்பிராயத்தை அவரது சமூகச் சூழலில் பரப்பி விடுவார்கள். ஈற்றில் அவர் நடைப்பிணமாக வாழ நேரிடும் அல்லது தலைமறைவாகி விட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம். இதுவே அவரை அல்லாஹ் உலகில் அழிப்பதாகும்.

அல்லாஹ் உலகில் அழிப்பதாகும்.

இரண்டாவது வகையான கடனாளிக்கு வருகின்ற அழிவு மறுஉலக வேதனையைக் குறிக்கின்றது என்ற கருத்தும் பத்ஹுல் பாரி என்ற கிரந்தத்தில் பதிவாகியுள்ளது. இமாம் இப்னு பத்தால் (ரஹிமஹுல்லாஹ்) பின்வருமாறு இந்த ஹதீஸை விளக்குகின்றார்கள்:

“மனிதர்களின் சொத்து செல்வங்களை விழுங்குவதை விட்டு விடுமாறு ஊக்குவிப்பதாகவும், கடன் கொடுக்கல் வாங்கலின்போது அழகிய முறையில் அதனைத் திருப்பி ஒப்படைப்பதை ஆர்வமூட்டுவதாகவும் இந்த ஹதீஸ் அமைகின்றது. மேலும் செயலுக்கேற்ற கூலியே ஒவ் வொருவருக்கும் உண்டு.” (பத்ஹுல்பாரி பாகம்: 5 பக்: 69)

**ஊருக்கும் உலகத்திற்கும் அரசியல் விமோசனத்தை வாங்குவதற்காக அரசியல் போராட்டத்தை முன்னெடுப்போரில் சிலர் பெருத்த கடனாளிகளாக இருப்பதோடு, குடும்ப வாழ்விலும் தோல்வியைத் தழுவி நிற்கின்றனர். இதுவே நிழல் வாழ்க்கை இந்த வாழ்வை அல்லாஹ்வும் அவனது தூதரும் அவர்கள் வழங்கிய இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டமும் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை.**

நாம் வாழும் வாழ்க்கை நிஜமானதாக அமைய வேண்டும். அது நிழல் வாழ்க்கையாக அமைந்துவிடக் கூடாது. அதாவது வெளியுலகத்திற்கு ஒருவர் நல்லவரும்தான் வல்லவரும்தான் ஆனால், அவரது அந்தரங்க வாழ்வில் அவரை விட படுமோசமான ஒருவரை நாம் காண முடியாது. கடன்காரர்களின் வாழ்வு நிழல் வாழ்க்கையாகவே இருக்கின்றது. ஆன்மிகக் கோலத்தில் நடமாடும் இவர்கள் மார்க்கப் பணியிலும் சமூகப் பணியிலும் முன்னின்று உழைப்பார்கள். ஆனால், அவர்களது அன்றாட வாழ்வில் கடன் பளுவை சுமந்து இழிவுடன் காலம் தள்ளுவார்கள். ஊருக்கும் உலகத்திற்கும் அரசியல் விமோசனத்தை வாங்குவதற்காக அரசியல் போராட்டத்தை முன்னெடுப்போரில் சிலர் பெருத்த கடனாளிகளாக இருப்பதோடு, குடும்ப வாழ்விலும் தோல்வியைத் தழுவி நிற்கின்றனர். இதுவே நிழல் வாழ்க்கை இந்த வாழ்வை அல்லாஹ்வும் அவனது தூதரும் அவர்கள் வழங்கிய இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டமும் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. இந்த நிழல் வாழ்வு அரசியல் ராஜதந்திரமாக பார்க்கப்பட்டாலும்கூட உண்மையில், இது இரட்டை நிலைப்பாட்டுடன்கூடிய நயவஞ்சகத்தனமான வாழ்வு என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எம்மை விட பன்மடங்கு மார்க்கப் பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டவர்கள். காத்திரமான முன்னுதாரணமிக்க அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள். அவர்களது வாழ்வை நிஜமே அலங்கரித்திருந்தது. அவர்கள் அந்தரங்கத்தில் வேறொரு வாழ்வு வாழ்ந்ததாக சரித்திரமே கிடையாது. அவர்களும்கூட கடன்பட்டிருக்கின்றார்கள். ஆனால், அதனைத் திருப்பி ஒப்படைக்கும் விவகாரத்தில் நிதர்சனமாக நடந்து கொண்டார்கள். பின்வரும் நிகழ்வு அதற்கு நல்லதொரு சான்றாதாரமாக அமைகின்றது:

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கடனை அறவிடுவதற்காக ஒருவர் வந்து அவர்களுடன் கடுமையாக நடந்து கொண்டார். அப்போது நபித் தோழர்கள் அவரைத் தாக்குவதற்கு முற்பட்டனர். உடனே நபியவர்கள், “அவரை (ஒன்றும் செய்யாது பேச) விட்டு விடுங்கள். கடன் தந்தவருக்கு பேசுவதற்கு உரிமை உண்டு” என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எளிமையாக வாழ்ந்தவர்கள். வீண்விரயத்தைத் தவிர்த்து சிக்கனமாக வாழ்ந்தவர்களுக்கு ஏன் இப்படி ஒரு நிலை? இது அல்லாஹ்வின் ஓர் ஏற்பாடாகும். நபிகளாருக்கு இவ்வாறான ஒரு கஷ்டமான நிலையை ஏற்படுத்தி அதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு கடன் கொடுக்கல்- வாங்கல் விடயத்தில் கடன் வழங்கியவர்களுடன் மனித நேயத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற பாடத்தை அல்லாஹ் கற்பிக்க நாடினான் போலும். இறைதூதரின் விழுமியம்சார் தொடர்பாடலை நம் சமூகம் படிப்பினையாகப் பெறவில்லை. எனவேதான் கடனாளிகள் கடன் கொடுத்தவர்களை ஏமாற்றுகின்றனர்; மோசடி செய்கின்றனர்; அவர்களுடன் குதர்க்கம் புரிகின்றனர்.

உங்களிடம் எப்போது கடன் வாங்கினேன்? எனக்கு ஞாபகம் இல்லையே! உங்கள் கடனை திருப்பிச் செலுத்தாமல் ஊரைவிட்டு ஓடிவிடுவேனா? உங்கள் கடனை திருப்பி ஒப்படைக்க முடியாது. என்னை என்ன செய்துவிடப் போகின்றீர்கள்? பொலிஸில் முறையிடப் போகின்றீர்களா? நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் போகின்றீர்களா? நீங்கள் எதையும் செய்யுங்கள். நீதிபதியின் முன் நான் ஒப்புக்கொள்கின்ற மிகவும் அற்பமான தொகையை ஒவ்வொரு மாதமும் நான் தர வேண்டி வரும். உங்களது மொத்தப் பணத்தின் சில்லறைகளின் சங்கீதத்தைத்தான் இறுதியில் நீங்கள் கேட்க முடியும் என்றெல்லாம் வாய்ச்சவாடலில்

கடன் கொடுத்தவரை நேருக்கு நேர் சந்திக்காமல் தொலைபேசி அழைப்பைத் துண்டித்துக் கொள்கின்றவர்களும் கடன் வழங்கியவரின் எச்சரிப்பு, வற்புறுத்தல் முதலானவற்றி லிருந்து தப்பித்துக் கொள்வ தற்காக ஆன்மிகப் பயணம் மேற்கொள்கின்ற கடனாளிகளும், நிரந்தரமாகவே ஊரிலிருந்து தலைமறைவாகி விடுகின்ற கௌரவப் பிச்சைக்காரர்களும் நம் சமுதாயத்தில் அதிகரித்து வருகின்றார்கள். இவர்கள் எங்கு சென்று வாழ்ந்தாலும் நிம்மதியாக இருக்க முடியுமா?

ஈடுபட்டு மனிதநேயத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிடுகின்ற கடனாளிகளைத்தான் நாம் சமூகத்தில் அவதானிக்கின்றோம்.

மேற்படி ஹதீஸுக்கு விளக்கமளிக்கின்ற இமாம் தாவூதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கடனாளிகளின் நற்பணிகள் தொடர்பில் இவ்வாறு தங்களது கருத்தைப் பதிவு செய்கின்றார்கள்:

"கடனாளி அடிமையை விடுதலை செய்யவும் முடியாது; தர்மம் செய்யவும் முடியாது. அவ்வாறு அவர் செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்படாது நிராகரிக்கப்படும்." (பத்ஹுல் பாரி பாகம்: 05 பக்கம்: 69)

இக்கருத்து கடனாளியின் நிழல் வாழ்க்கைக்கு பலத்த அடியாக அமைகின்றது.

அல்லாஹ்வின் அருட் பார்வையை விட்டும் தூர விலகி வாழாது, அல்லாஹ்வின் நெருக்கத்தையும் அவனது அன்பையும் திருப்தியையும் பெற்று வாழும் நோக்கம் உள்ளவர்கள் கடன் கொடுக்கல்- வாங்கலில் நன்நோக்கத்துடன் ஈடுபட வேண்டும் என்பது இறைதூதரின் எதிர்பார்ப்பாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"கடனைத் திருப்பிச் செலுத்தும் எண்ணத்துடன் கடன்பட்ட அடியானுக்கு அல்லாஹ்வின் உதவி உண்டு." இந்த ஹதீஸை அறிவிக்கின்ற ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "நான் அந்த உதவியை (அல்லாஹ்விடம்) தேடுகின்றேன்." (அல்ஹாகிம்)

கடன் என்பது ஓர் அமானிதம். அதனைக் குறித்த தவணையில் ஒப்படைக்காது இழுத்தடிப்பது அநீதமாகும். அது ஒரு மனித உரிமை மீறல். அல்லாஹுத் தஆலா அமானிதம் பற்றி அல்குர்ஆனில் இவ்வாறு குறிப்பிடுகின்றான்: "நீங்கள் அமானிதங்களை அதன் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து விடுமாறு அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான்." (ஸூரா அந்நிஸா: 58)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "பண வசதி படைத்தவன் கடனை உரிய தவணையில் ஒப்படைக்காது பிற்போடுவது அநீதமாகும்." (ஸஹீஹுல் புகாரி)

இந்த ஹதீஸ் கடன் கொடுத்தவர்கள் அநியாயமிழைக்கப்பட்டோராக மாறிவிடுகின்றனர் என்ற கருத்தை தெளிவுபடுத்துகின்றது. எனவே, கடன் கொடுத்தவர்களின் ஏக்கப் பெருமூச்சுடன் கூடிய துஆ கடனாளிகளை வெகுவாக பாதிக்கும். "அநியாயம் இழைக்கப்பட்டோரின் துஆவுக்குப் பயப்படுங்கள் ஏனெனில் அந்தப் பிரார்த்தனைக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எத்தகைய திரையும் இல்லை" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடன் தொடர்பில் மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள். அவ்வாறே தீர்க்கமான முடிவுக்கும் வந்தார்கள். ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். கடனாளியாக மரணிப்பவரின் ஜனாஸாவுக்கு தொழுகை நடத்த இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முன்வர மாட்டார்கள். ஒரு முறை ஒரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. அப்போது "இவருக்கு கடன் உண்டா?" என நபியவர்கள் கேட்டார்கள். "ஆம்! இரண்டு தீனார் கடன் உண்டு" என ஸஹாபாக்கள் கூறினர். "உங்களது தோழருக்கு நீங்கள் தொழுகை நடத்துங்கள்" என்று கூறிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகை நடத்த முன்வரவில்லை. அப்போது அபூ கதாதா அல் அன்ஸாரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! அவ்விரு தீனாரையும் நான் அவர் சார்பாக திருப்பிச் செலுத்துகின்றேன்" என்று கூறியதன் பின்னர் நபியவர்கள் அந்த ஜனாஸாவிற்காக தொழுகை நடத்தினார்கள். அகிலத்தாருக்கு அருட்கொடையாக வந்துதித்த மனிதருள் மாணிக்கம் மாநபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மனித உரிமை மீறல் குறித்து விழிப்புணர்வுடன் செயற்பட்டார்கள். அவ்விவகாரத்தில் நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை.

தங்களது ஸஹாபாக்கள் மூலம் சிலபோது சறுக்கல்கள் ஏற்பட்டாலும் கூட நபியவர்கள் பக்கச் சார்பின்றி நீதம் தீர்த்தார்கள். ஒரு முறை முஆத் இப்னு ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கடன் பட்டிருந்தார்கள். கடன் கொடுத்தவர் அவர் குறித்து நபியவர்களிடம் முறையீடு செய்தார். அவ்வேளையில், முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சொத்தை முடக்கி அவரிடமிருந்து கடனைப் பெற்றுக் கொடுத்தார்கள். மரணித்தவரின் கடனைத் திருப்பி ஒப்படைக்க யாரும் முன்வராதபோது நபியவர்கள் முன்வந்து கடனைத் திருப்பி ஒப்படைப்பதாக பொது அறிவிப்பு விடுப்பார்கள். மக்காவை வெற்றிக் கொண்ட நபியவர்கள் பின்வருமாறு பிரகடனம் செய்தார்கள்: "ஒவ்வோர் இறைவிசுவாசியையும் பொறுத்தவரை அவரது உயிரை விட அவருக்கு நானே பிரதானமானவன். எவர் ஒருவர் கடனை அடைக்காது மரணித்து விட்டாரோ

அதனைத் திருப்பிச் செலுத்துவது எனது கடப்பாடாகும். யார் சொத்தை விட்டுவிட்டு மரணித்தாரோ அவரது சொத்து அவரது வாரிசுகளுக்கு உரியதாகும்." (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம், அத்திர்மிதி, நஸாஈ, இப்னு மாஜா)

கடன் பொறுப்பு இல்லாமல் ஒரு முஸ்லிமை அல்லாஹ்வை நோக்கி சுத்தமாக வழியனுப்பி வைப்பதில் சமூகத் தலைமை என்ற வகையில் இறைதூதர் அவர்கள் சமூகப் பிரக்ஞையுடன் நடந்து கொண்டார்கள்.

முஸ்லிம் சமுதாயத்தின் உறுப்பினர்கள் கடனில்லாத தன்னிறைவான வாழ்க்கை வாழ்ந்து இவ்வுலகைப் பிரிந்து செல்ல வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடனேயே ஸகாத் எனும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஸகாத்தைப் பெறத் தகுதியான எட்டுக் கூட்டத்தாரில் கடன்காரர்கள் ஒரு வகுப்பினராக உள்ளனர். இதிலிருந்து கடன்காரர்கள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் மேலதிக சுமையாக அமைந்து விடக் கூடாது என்பது இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாட்டின் உன்னத இலட்சியம் என்பது தெளிவாகின்றது.

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையிலும் கடனிலிருந்து தன்னைப் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள். அதற்கான காரணத்தையும் அல்லாஹ்வின் தூதர் தெளிவுபடுத்தினார்கள். ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "யாஅல்லாஹ்! பாவத்திலிருந்தும், கடனிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன்'' என தொழுகையில் பிரார்த்தனை செய்வார்கள்.

ஒரு முறை அண்ணலாரிடம் ஒருவர் "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் ஏன் அதிகமாக கடனிலிருந்து பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் வேண்டுகின்றீர்கள்?'' எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் "கடன்பட்ட மனிதர் பேசினால் பொய்யுரைப்பார். வாக்களித்தால் மாறு செய்வார் (அதனால்தான் கடனிலிருந்து பாதுகாக்குமாறு நான் அல்லாஹ்விடம் அதிகமாகப் பிரார்த்திக்கின்றேன்) என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி)

கடன் வாங்கியவர் அதனது பாரதூரத்தை உணரவில்லையெனில் கடன் கொடுத்தவரிடம் பொய்யுரைப்பார். குறித்த தவணையில் மீள ஒப்படைப்பதாகக் கூறிவிட்டு வாக்குறுதிக்கு மாறு செய்வார். இது இயல்பாக கடனாளியிடம் உருவாகின்ற இழி குணங்களாகும்.

கடனாளி நயவஞ்சகராக மாறிவிடுவார் என்ற இறைதூதரின் எதிர்வுகூறல் இன்று நிதர்சனமாகிக் கொண்டிருக்கின்றது. கடன் கொடுத்தவர் கடனாளியின் வீடு தேடி சென்றால் வீட்டுக்குள் இருந்து கொண்டே தான் வீட்டில் இல்லை எனக் கூறுமாறு மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அறிவுரை வழங்குகின்ற கடனாளிகளை நாம் காண முடிகின்றது. கடன் கொடுத்தவரை நேருக்கு நேர் சந்திக்காமல் தொலைபேசி அழைப்பைத் துண்டித்துக் கொள்கின்றவர்களும் கடன் வழங்கியவரின் நச்சரிப்பு, வற்புறுத்தல் முதலானவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆன்மிகப் பயணம் மேற்கொள்கின்ற கடனாளிகளும், நிரந்தரமாகவே ஊரிலிருந்து தலைமறைவாகி விடுகின்ற கௌரவப் பிச்சைக்காரர்களும் நம் சமுதாயத்தில் அதிகரித்து வருகின்றார்கள். இவர்கள் எங்கு சென்று வாழ்ந்தாலும் நிம்மதியாக இருக்க முடியுமா? இவர்கள் மரணித்து விட்டால் கடன் பொறுப்பு அவர்களை விட்டும் நீங்கி விடுமா? நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

"ஓர் இறை விசுவாசியின் கடன் (அவர் மரணித்த பின்னரும்) அவர் சார்பாக அடைக்கப்படும் வரை அவருடன் தொடர்புற்றிருக்கும்."

"உயிர்த் தியாகியின் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும், கடனைத் தவிர" என்ற நபிவாக்கு எம்மைப் பல முறை சிந்திக்கத் தூண்டுகின்றது; அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றது.

எனவே, நாம் ஷரீஆ அனுமதிக்கின்ற நியாயமான காரணங்களுக்காக கடன்படுவோம். அதனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்திட ஆர்வம் கொள்வோம்! தவறும்பட்சத்தில் கடன் தந்தவரிடம் மன்னிப்பை வேண்டுவோம்! கடன் பளுவுடன் கூடிய நிழல் வாழ்க்கையைத் துறந்து முடிந்தளவு உலகில் பற்றற்று வாழ முயற்சிப்போம்!

**அடுத்த அல்ஹஸனாத் அதிக பக்கங்களில்**
**ரமழான் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது, இன்ஷா அல்லாஹ்.**

**சுமார் 40 ஆயிரம் பிரதிகளை அச்சிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.**
**இந்த அழகிய தஃவாவில் நீங்களும் பங்காளர்களாக விரும்புகிறீர்களா?**
**இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.**

***தொடர்புகளுக்கு: 0778466280/ 0776621448***



உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
www.usthazhajjulakbar.org

# ‘இஸ்லாம்’ அல்லாஹ்வினுடையது; ‘இஸ்லாமியப் பணி’ மனிதர்களுடையது

**இஸ்லாமியப் பணி செய்வோர் இந்த வகையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்காக தமது வாசல்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும். அவற்றை பொறுமையாக செவி மடுக்க வேண்டும். செவிமடுத்த தவறுகளை சீர்தூக்கிப் பார்த்து தமது தவறுகளைத் திருத்திக் கொள்ளும் பக்குவமும் அவர்களிடம் இருக்க வேண்டும்.**

இந்தத் தத்துவத்தை முதலில் ஒரு சில வரிகளுக்கு விரிவுபடுத்திப் பார்ப்போம். ‘இஸ்லாம் அல்லாஹ்வினுடையது’ என்பது அனைவருக்கும் வெளிச்சமான ஒன்று. எனவே அது சரியானது; தூய்மையானது; நிறைவானது; களங்கமற்றது; குழப்பங்களுக்கோ மயக்கங்களுக்கோ இடம் தராதது; சத்தியமானது; அசத்தியம் எந்தப் பகுதியாலும் அதனுள் ஊடுருவ முடியாது; அது எக்காலத்துக்கும் பொருத்தமானது. எல்லா சவால்களையும் எதிர் கொள்ளத்தக்கது என நாம் அதனை ஈமான் கொண்டிருக்கிறோம். இஸ்லாத்தின் மகிமைகளை இவ்வாறு சொல்லச் சொல்ல எமது உள்ளங்கள் பூரிக்கின்றன; இதயங்கள் குளிர்ச்சியடைகின்றன; கண்கள் பேரானந்தத்தை வெளிப்படுத்துகின்றன.

‘இஸ்லாம் அல்லாஹ்வினுடையது’ என்ற காரணத்தினால்... அதனை வடிவமைப்பதில் அல்லாஹ் அல்லாத வேறு கைகள் சம்பந்தப்படாத காரணத்தினால்... இறுதி நாள் வரை அதனைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றிருப்பதனால்... மேற்கூறப்பட்ட வர்ணனைகள் அனைத்தும் இஸ்லாத்திற்கு நூறு வீதம் பொருத்தமாகவே இருக்கின்றன என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.

எனினும் அதே சந்தேகமற்ற தன்மையை, புனிதத்துவத்தை இஸ்லாமியப் பணிக்கு நாம் கொடுக்க முடியாது. இஸ்லாம் வேறு இஸ்லாமியப் பணி வேறு. இஸ்லாம் அல்லாஹ்வினுடையது. இஸ்லாமியப் பணி மனிதர்களுடையது.

மனிதர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் எப்போதும் மனிதப் பலவீனங்களுக்கு உட்பட்டவையாகவே இருக்கும். அதனால் மனித முயற்சிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்; மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்; விடப்பட்ட தவறுகள் திருத்தப்படல் வேண்டும். தவறுகளை சுட்டிக்காட்டும் ஆக்கபூர்வமான விமர்சனம் மனித முயற்சிகளுக்கு இன்றியமையாதது. இஸ்லாமியப் பணி செய்வோர் இந்த வகையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்காக தமது வாசல்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும். அவற்றை பொறுமையாக செவி மடுக்க வேண்டும். செவிமடுத்த தவறுகளை சீர்தூக்கிப் பார்த்து தமது தவறுகளைத் திருத்திக் கொள்ளும் பக்குவமும் அவர்களிடம் இருக்க வேண்டும்.

எனினும், இன்றைய கள நிலைவரங்கள் இந்தத் தத்துவத்தைப் புரிந்த நிலையில் இஸ்லாமியப் பணி புரிவோர் இருக்கிறார்கள் என்பதைக் காட்டவில்லை. அதிகமானோர் ‘இஸ்லாம் புனிதமானது’ என்று நம்புவது போல் தாம் செய்யும் பணியும் அதேயளவு புனிதமானது என நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இஸ்லாமியப் பணியை அவர்கள் மனித முயற்சியாகக் கருதவில்லை. அதனையும் ‘அல்லாஹ்வுடையது’ என்ற அந்தஸ்த்துக்கு உயர்த்தி விட்டார்கள் பலர். எனவே, இஸ்லாத்திற்கு இருக்கும் அனைத்துப் புனிதங்களும் மகிமைகளும் உயர்வுகளும் அதே அளவில் தாம் செய்யும் பணிக்கு இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். இந்தப் பணியை உலகில் நிறைவேற்றுகின்ற அல்லாஹ்வின் நேரடி முகவர்களாக தாம் இருப்பது போன்றும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அணுவும் பிசகாது ஒவ்வோர் எட்டையும் தாம் எடுத்து வைப்பதாகவும் அவர்கள் மேலெண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாள் காலையும் தமக்காக அல்லாஹ்வின் கட்ட

ளைகள் இறக்கப்படுவதாகவே அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

எனவே, அவர்கள் முற்றிலும் சரியானவர்கள், தவறுகள் செய்யாதவர்கள், விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களது தீர்மானங்கள், அணுகுமுறைகள், நகர்வுகள், முன்னெடுப்புக்கள், நடவடிக்கைகள், பேச்சுக்கள், எழுத்துக்கள், விமர்சனங்கள் அனைத்தும் இஸ்லாம் போன்று நூற்றுக்கு நூறு வீதம் புனிதம் நிறைந்தவைகளே. அவற்றைப் பரிசீலனை செய்வதற்கோ திருத்துவதற்கோ மாற்றியமைப்பதற்கோ எந்தத் தேவையுமில்லை என்பதே அவர்களது முடிவு.

இஸ்லாத்திற்கும் இஸ்லாமியப் பணிக்குமிடையிலான வேறுபாட்டுத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளத் தவறியதன் விளைவுதான் இது. 'இஸ்லாம் அல்லாஹ்வினுடையது; இஸ்லாமியப் பணி மனிதர்களுடையது, என்ற தத்துவம் மங்கி, மறுத்து மறைந்து, இரண்டும் அல்லாஹ்வினுடையது என்ற அந்தஸ்த்தைப் பெற்று விட்ட பரிதாபம் இன்று ஏற்பட்டுள்ளது.

அண்ணலார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே இஸ்லாத்தில் புனிதத்துவத்துக்கு நிகரானதாக தான் செய்த பணியின் புனிதத்துவத்தைக் கருதாததளவு பணிவும் பாவமன்னிப்பும் கோரும் பண்பும் உடையவராக இருந்திருக்கும்போது இன்றைய பணியாளர்களோ தாம் செய்யும் பணி வினாக்களுக்கும் விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டது என்ற நினைக்கும் பண்பினராக மாறியுள்ளனர். அதேவேளை பிறர் செய்யும் பணிகளை நா கூசாமல் விமர்சிக்கவும் செய்கின்றனர்.

இஸ்லாத்திற்குள்ள புனிதத்துவத்தை இஸ்லாமியப் பணிக்கும் கொடுப்பதானால் அல்லாஹ்வின் தூதர் செய்த பணிக்கு மட்டும்தான் அதனைக் கொடுக்கலாம். அவ்வாறிருந்தும் அல்லாஹ்வின் தூதர் செய்த இஸ்லாமியப் பணியில் அவ்வப்போது நிகழ்ந்த தவறுகள் சிலவற்றை சுட்டிக்காட்டவும் திருத்தவும் அல்லாஹ் தவறவில்லை. அத்தகைய தவறுகளில் ஒன்றிரண்டு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மூலமாகவும் இன்னும் சில அன்னாரது சமூகத்தாலும் விடப்பட்டுள்ளன.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது விடயத்தில் அல்லாஹ் திருத்திய தவறுகள் சிலவற்றுக்கு உதாரணம்.

*01.* இப்னு உம்மி மக்தூம் (ரழியல்லாஹு அன்ஹு) என்ற அந்தகரை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அணுகிய விதம் குறித்து அல்லாஹ் கண்டித்த சம்பவம்.

*02.* பத்ர் கைதிகளை விடுதலை செய்து விட்டு வாங்கிய நஷ்ட ஈட்டை அல்லாஹ் கண்டித்த சம்பவம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சமூகம் விட்ட சில தவறுகளையும் அல்லாஹ் இவ்வாறு கண்டித்துள்ளான். உஹுதிலும் ஹுனைனிலும் ஏற்பட்ட தோல்விகளின்போதே அந்தக் கண்டனங்கள் எழுந்தன. குறிப்பிட்ட தோல்விகளுக்கு எந்த வகையில் அந்த சமூகம் காரணமாக இருந்தது என்பதை அல்குர்ஆன் சுட்டிக்காட்டி நபிகளாரின் சமூகத்தை நேரிய வழிக்கு இட்டுச் சென்ற சம்பவங்கள் இன்னும் பல அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ளன.

அது மட்டுமல்ல, மக்கா வெற்றியின்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒட்டகத்தின் திமிலை தனது தலை தொடுகின்ற வரை குனிந்து பணிந்தவராகவும் தனது பாவங்களுக்கு இஸ்திஃபார் செய்தவராகவும் மக்காவில் நுழைந்ததாகவே வரலாறு கூறுகின்றது. அதாவது, தான் செய்த பணியில் விடப்பட்ட தவறுகளையெல்லாம் அல்லாஹ் மன்னிக்க வேண்டும் என்ற ஆவலும் அதே நேரம் எல்லையில்லாத பணிவும் அவர்களை ஆக்கிரமித்து வெற்றியால் பெருமிதமடையும் மனநிலை மேலெழாமல் அவர்களைத் தடுத்திருந்தது.

அண்ணலார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே இஸ்லாத்தில் புனிதத்துவத்துக்கு நிகரானதாக தான் செய்த பணியின் புனிதத்துவத்தைக் கருதாததளவு பணிவும் பாவமன்னிப்பும் கோரும் பண்பும் உடையவராக இருந்திருக்கும்போது இன்றைய பணியாளர்களோ தாம் செய்யும் பணி வினாக்களுக்கும் விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டது என்ற நினைக்கும் பண்பினராக மாறியுள்ளனர். அதேவேளை பிறர் செய்யும் பணிகளை நா கூசாமல் விமர்சிக்கவும் செய்கின்றனர்.

தாம் செய்யும் பணி புனிதமானது. அதில் எந்தத் தவறுக்கும் இடமில்லை. குர்ஆனினதும் ஸுன்னாவினதும் அடிச்சுவட்டில் ஒரு மில்லி மீற்றர் கூடப் பிசகாமல் நாங்கள் மட்டும்தான் நகர்ந்து கொண்டிருக்கிறோம். சத்தியம் சொல்லிலும் செயலிலும் எம்மிடம்தானிருக்கிறது என்று தமது பணியின் புனிதத்துவத்தை இஸ்லாத்தின் புனிதத்துவம் போல மெருகூட்டிக் காட்டுவதற்கும் சிலர் பயன்படுத்தும் உத்திகள் ஏராளம்.

தங்களது பணியை எந்தளவு புனிதமாகக் கருதுகிறார்களோ அதேயளவு அடுத்தவர்கள் செய்யும் பணியைத் தாழ்த்தவும் அவர்கள் தயங்குவதில்லை. அவர்களது பார்வையில் ஏனையோர் செய்யும் பணிகள் பணிகளே அல்ல என்று கருதுமளவு அவை அற்பமானவை. எனவே, அடுத்தவர்கள் செய்யும் பணிகளை விமர்சிக்கவும் பரிகசிக்கவும், அந்தப் பணிகள் செய்வோர் மீது இட்டுக்கட்டி அவதூறு கூறவும், அபாண்டம் சுமத்தவும் அவர்களால் முடிகிறது.

பிறர் செய்யும் பணிகளைத் தடுப்பவர்களும் ஒரு வகையில் தங்களது பணிகளைப் புனிதமாகக் கருதுபவர்களே. 'இஸ்லாம் அல்லாஹ்வினுடையது; இஸ்லாமியப்

பணி எங்களுடையது, என்பதை அவர்களும் மறந்து விட்டார்கள். இத்தகையோர் தாங்கள் செய்யும் பணியை அல்லாஹ்வுடைய பணி என்றும் பிறர் செய்யும் பணிகளை சில மனிதர்கள் சேர்ந்து செய்யும் ஒரு வேலை என்றும் கருதுகின்றனர். எனவே, மனிதர்கள் முன்கொண்டு செல்லும் வேலைக்கு இடமளிக்க முடியாது. அல்லாஹ்வின் வேலைக்கு மட்டுமே இங்கு இடம் தர முடியும் என்று அவர்கள் தீர்மானித்து விடுகின்றனர். விளைவாக, தங்களது பணியைத் தவிர ஏனையோர் செய்யும் பணி நடைபெறக் கூடாது என்ற தீர்மானத்துடனேயே அவர்கள் கரும மாற்றுகின்றனர்.

இஸ்லாம் அல்லாஹ்வினுடையது. இஸ்லாமியப் பணி பலவீனங்கள் நிறைந்த மனிதர்கள் மூலம் நடைபெறுகிறது... என்ற உண்மையை விளங்காமல் செயற்படுவதனாலேயே இந்நிலை தோன்றுகின்றது.

பலவீனங்கள் நிறைந்த மனிதர்கள் தாம் செய்யும் பணி குறித்து திருப்தியடையலாம். எனினும், அந்தத் திருப்தியின் பொருள் அவர்கள் செய்த பணி அல்லாஹ்வுடையது... புனிதமிக்கது... தவறுகள் இல்லாது தூய்மையானது என்பதல்ல... நாங்கள் செய்யும் பணி அல்லாஹ்வுடையது, தூய்மையானது என்று கருதும்போதுதான் ஏனையோர் செய்யும் பணிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனும் குரூர புத்தியும் வேலை செய்யத் துவங்குகிறது. தடுத்து நிறுத்தா விட்டாலும் தந்திரங்கள் செய்தாவது அதன் வளர்ச்சியைப் பிற்போட வேண்டும். அதுவும் முடியாது போனால் அவதூறுகள், பொய்கள் போன்றவற்றை பரப்பி அப்பணிகளின் பக்கம் மக்களது கவனம் செல்லாது தடுக்க வேண்டும் என்றெல்லாம் பணி செய்பவர்கள் சிந்திப்பதற்குக் காரணம், தாம் செய்யும் பணி ஒரு மனித முயற்சி என்பதை மறந்து அது ஒரு தெய்வீக முயற்சி என அவர்கள் நம்பியிருப்பதே. இந்தப் பிழையான சிந்தனையை பணி செய்வோர்கள் தங்களது சிஷ்யர்களுக்கும் ஊட்டி வளர்க்கிறார்கள். எனவே, அவர்களால் அல்லாஹ்வுடையது எது? மனிதர்களுடையது எது? என்பதை வேறுபடுத்த முடியாமலிருக்கிறது.

பணி அல்லாஹ்வுடையது அல்ல, அது ஒரு மனித முயற்சிதான் என்றாலும் அதனைப் புனிதமானதாக ஆக்குவதற்கு வழி இருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பணி புனிதம் பெற வேண்டுமானால் அது இரண்டு நிலைகளில் ஒரு நிலையை எடுக்க வேண்டும்.

*01.* அல்லாஹ்வின் நேரடி வழிகாட்டலில் நபிமார்கள் செய்த பணியாக அது இருக்க வேண்டும். அப்போது அந்தப் பணி மனித முயற்சியாக இருப்பினும் அதனைப் புனிதமானது என்றே நாம் கருதுவோம்.

இந்த நிலை நபிமார்களுக்கு மட்டுமே உரியது. இத்தகைய புனிதத்தை நபிமார்களது பணிக்கல்லாது வேறு

**இந்தப் பிழையான சிந்தனையை பணி செய்வோர்கள் தங்களது சிஷ்யர்களுக்கும் ஊட்டி வளர்க்கிறார்கள். எனவே, அவர்களால் அல்லாஹ்வுடையது எது? மனிதர்களுடையது எது? என்பதை வேறுபடுத்த முடியாமலிருக்கிறது.**

ஒருவர் செய்யும் பணிக்குக் கொடுக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும், நபிமார்களை அல்லது குறிப்பாக, இறுதி நபியைத் தாம் கனவில் கண்டதாகக் கூறி அவர்கள் தனது பணிக்கு அங்கீகாரம் வழங்கியதாக ஒரு புனிதத்துவத்தை தமது பணிக்குக் கொடுக்க சிலர் முயற்சிக்கின்றனர். அல்லது நபியின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதைக் கூறி அவர்களது பணிக்கு புனிதத்துவத்தைக் கொடுக்க முயற்சிக்கின்றனர் வேறு சிலர். அல்லது கராமத்துகள் தமக்கிருப்பதாகக் கூறி தமது பணிக்கு புனிதத்துவத்தை க் கொடுக்க முயற்சிக்கின்றனர் இன்னும் பலர். அல்லது தமது தலைவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து உதிப்புகள் வருவதாகவும் நபிகளாரும் அன்னாரின் குடும்பத்தவர்களும் அடிக்கடி பிரசன்னம் தந்து ஸலாம் சொல்வதாகவும் கூறி அவர்கள் செய்யும் பணியைப் புனிதமிக்கதாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர் மற்றும் சிலர். இத்தகையவர்கள் நபிமார்கள் செய்த பணியில் ஆயிரத்தில் ஒன்றைக்கூட செய்யாதவர்கள். புனிதத்தை மட்டும் தேடிக் கொள்ள படாத பாடுபடுகிறார்கள்.

*02.* ஒரு பணிக்கு புனிதத்துவத்தைக் கொடுப்பதற்கான இரண்டாவது வழி பின்வரும் நபிமொழியைக் செயல்படுத்துவதாகும்.

"எனது உம்மத் வழிகேட்டில் ஒன்றுபடாது."

உம்மத்தாக ஒன்றுசேர்ந்து ஒரு பணியை முன்னெடுக்கின்றபோது... அந்தப் பணி இஸ்லாத்திற்கு மிக நெருக்கமானதாகவும்... இஸ்லாத்தின் இயல்போடு இணைந்து செல்வதாகவும்... இஸ்லாத்தின் புனிதத்தன்மைக்கு அந்நியமற்றதாகவும் இருக்கின்ற வாய்ப்பு அதிகரிக்கின்றது. ஏனெனில், பல்வேறு அறிஞர்கள், சிந்தனையாளர்களது உள்ளீடுகள் அந்தப் பணியை அலங்கரிக்கின்றன. அவர்களுள் ஒருவர் தவறினால் மற்றவர் அதனைத் திருத்துவார். ஒருவர் பொருத்தமற்ற ஓர் ஆலோசனையை முன்வைத்தால் மற்றொருவர் அதனைப் பொருத்தமான ஓர் ஆலோசனையால் மாற்றீடு செய்வார். எனவே, மேற்கூறப்பட்ட நபிமொழிக்கேற்ப குறிப்பிட்ட அந்தப் பணியில்

**வெளியீட்டுப் பணியை ஜம்இய்யதுல் உலமா செய்தது. அமுலாக்கல் பணியை முஸ்லிம் சமூகம் செய்யவில்லை. காரணம், கருத்து வேறுபாடுகள் விடயத்தில் ஏற்கனவே சமூகத்தில் இருக்கும் தூய்மையற்ற அணுகுமுறை அப்படியே இருக்கிறது.**

வழிகேடு தலையெடுப்பதற்கான வாய்ப்பு பெரிதும் குறைந்து விடுகிறது.

இதற்கு மிகச் சிறந்ததோர் உதாரணம்தான் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் வெளியிடப் பட்ட ஒற்றுமைப் பிரகடனமாகும். பிக்ஹ் மஸ்அலாக் களிலுள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக முஸ்லிம் சமூகம் பிளவுபட்டு சின்னாபின்னமாகி விடாமல் ஒற்றுமை காப்பது எப்படி? என்பதற்கான ஒரு சிறந்த வழிகாட்டல் அந்த ஒற்றுமைப் பிரகடனத்தின் ஷரத்துக்களில் இருக்கின்றன. அந்த ஒற்றுமைப் பிரக டன வெளியீட்டுப் பணி உம்மத்தாக ஒன்றுசேர்ந்து மேற்கொள்ளப்பட்ட பணியாகும். அந்தப் பணி தூய்மையானது; புனிதமிக்கது... அந்தப் பணிக்குத் தாராளமாக புனிதத்துவத்தைக் கொடுக்கலாம்.

எனினும் சமூகம் அதன் தூய்மையை விளங்கிக் கொள்ளவில்லை. அதன் புனிதத்துவத்தைப் புரிய வில்லை. வெளியீட்டுப் பணியை ஜம்இய்யதுல் உலமா செய்தது. அமுலாக்கல் பணியை முஸ்லிம் சமூகம் செய்யவில்லை. காரணம், கருத்து வேறுபாடுகள் விடயத்தில் ஏற்கனவே சமூகத்தில் இருக்கும் தூய்மை யற்ற அணுகுமுறை அப்படியே இருக்கிறது. ஒரு சின்னக் கருத்து வேறுபாட்டைக் கூட சகித்துக் கொள்ள முடியாத... ஒரு பிழையான அணுகுமுறையைக் கூட மறுபரிசீலனை செய்ய முடியாத இறுக்கமான போக் கிலேயே அதிகமானோர் ஊறித் திளைத்திருக்கின்ற னர். அவர்களால் அடுத்தவர்களை அங்கீகரிக்கவே முடியாதுள்ளது. சமூகத்தின் மேல் மட்டத்தினரிடம் வந்திருக்கின்ற நெருக்கம், உடன்பாடு என்பன கீழ் மட்டதில் இத்தகையவர்களால் தடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அங்கு அவை வந்துவிடக் கூடாது என்பதில் சிலர் கண்ணும் கருத்துமாக இருக் கிறார்கள் போலவும் தெரிகிறது. இவற்றைப் பார்க் கும்போது ஜம்இய்யதுல் உலமாவின் ஒற்றுமைப் பிர கடனத்தைத் தூய்மையற்றதாகவும் தங்களது வழமையான... இறுக்கமான போக்கைத் தூய்மையா னதாகவும் சமூகம் கருதுகின்றதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. அதனால்தான் போலும் அந்த ஒற்றுமைப் பிரகடனத்தை எத்தனையோ மஸ்ஜித்கள் பார்வைக்கேனும் தொங்கவிடவில்லை. சில மஸ் ஜித்களில் அந்தப் பிரகடனம் தொங்கவிடப்பட்டிருந்தாலும் மக்கள் அதனை வாசிக்க வேண்டும் அமுல்படுத்த வேண்டும்; என்ற எந்த அறிவூட்டலும் வழங்கப்பட்டதாகவும் தெரிய வில்லை.

கொடுக்கப்பட வேண்டிய புனிதத்துவம் கைவிடப்பட்டு கொடுக்கப்படக் கூடாத புனிதத்துவம் எவ்வாறு கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது புரிகிறதல்லவா?

*03.* பணி தூய்மையும் புனிதத்துவம் மிக்கதாகவும் ஆக்கப் படுவதற்கு மற்றுமொரு வழியுமிருக்கிறது. அது மற்றுமொரு நபிமொழியை செயல்படுத்தும்போது கிடைக்கப் பெறலாம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

“ஆலோசனை கேட்பவன் தோல்வியடைய மாட்டான்.”

இந்த நபிமொழியை எல்லோரும் செயல்படுத்துவதாக நினைக்கின்றார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம். எவ்வாறெனின், ஒவ்வொருவரும் தங்களுக்கு வசதியான எல்லைக்குள் ஆலோசனை நடத்திக் கொள்கின்றார்கள்... சொல்வதைக் கேட்பவர்களோடும்... அதிகம் முரண்படா தவர்களோடும் ஆலோசனை நடத்துவது வீரமிக்க செயலல்ல. எதிர்க் கருத்துள்ளவர்களோடும் மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பவர்களோடும் கலந்தாலோசனை செய்யும்போது தான் எல்லை மீறி வளர்ந்த... தீவிரவாத சிந்தனைகளும் செயற் பாடுகளும் நடுநிலைக்கு கொண்டுவரப்படுகின்றன. அப்போது எடுக்கப்படும் முடிவுகள் இஸ்லாத்தின் தூய்மைக்கும் புனிதத் துவத்திற்கும் நெருக்கமானதாக இருக்க வாய்ப்புண்டு.

இஸ்லாமியப் பணி விடயத்தில் வேறுபட்ட கருத்துடை யோர் இத்தகைய கலந்தாலோசனைகளில் ஈடுபடுதல் காலத் தின் இன்றியமையாத தேவையாகும். எனினும், இத்தகைய கலந்தாலோசனைகள் ஊக்குவிக்கப்படுவதில்லை. அதற்கான வாய்ப்புகள் உருவாகி விடக் கூடாது என்பதிலும் பலர் கவன மாக இருக்கின்றனர். இஸ்லாமியப் பணி குறித்து வேறுபட்ட கருத்துக்களுடைய ஆலிம்கள் தொடர்ந்தும் தூரமாக விலகி நிற்பது இன்றைய களத்துக்கு நல்லதல்ல.

இறுதியாக...

இஸ்லாமியப் பணியை மனித முயற்சி என்று கருதி, அதில் தவறுகள் நிகழ வாய்ப்புண்டு... அது சதாவும் திருத்தப்பட் டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை அங்கீகரிக்க மறுப்பவர்கள், தாம் செய்யும் இஸ்லாமியப் பணிக்கு தெய்வீக அந்தஸ்த்தைக் கொடுத்தே தீர்வார்கள். அதனால் அவர்கள் எக்காரணம் கொண்டும் சமூகத்தில் இருக்கின்ற ஏனைய தரப்பினர்களோடு இணங்கிச் செல்ல விரும்பவே மாட்டார்கள். காரணம், ஏனைய தரப்பினர்கள் செய்யும் பணிக்கு தெய்வீக அந்தஸ்தில்லை என்பதே அவர்களது உறுதியான... இறுதியான... முடிவாகும்.

# ஆபிரிக்காவில் தொடரும் இனச் சுத்திகரிப்பு அரசியலின் (Genocide Politics) பின்புலம் என்ன?

▸ இப்னு பவ்ஸ்


(கடந்த இதழ் தொடர்)

**ஆபிரிக்க முஸ்லிம் நாடுகளும் பஞ்சமும்**

சமீபத்தில் சோமலியா, எரிட்ரியா, மாலி மற்றும் ஜிபூத்தி போன்ற முஸ்லிம் நாடுகளின் உணவுப் பாதுகாப்பு (Food Security) பற்றிய ஆய்வொன்றை அல்ஜஸீரா ஆய்வுப் பகுதியின் வெப்தளம் வெளியிட்டது. இதில், இந்நாடுகளில் அடிக்கடி ஏற்படும் பஞ்ச நிலைமைகளுக்கு வெறும் அரசியல் காரணங்களே பின்னணியாகும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது, மேற்சொன்ன முஸ்லிம் நாடுகளில் ஐ.நா. பாதுகாப்புப் படை என்ற பெயரில் செயற்படும் உகண்டா, ருவண்டா மற்றும் எத்தியோப்பிய படையினர் இங்கு அல்கைதா ஆதிக்கம் செலுத்துகிறது என்ற சுலோகத்தில் நாட்டின் பல பகுதிகளுக்கும் உணவு செல்வதனை தடை செய்கின்றனர். இஸ்லாமியப் பயங்கரவாதம் என்ற பூச்சாண்டி காட்டி வறுமையில் வாடும் அம்மக்களின் வயிற்றில் அடிக்கின்றனர் இப்படையினர்.

இவ்வாறு திட்டமிட்ட பஞ்ச நிலைமைகளை உருவாக்குவதில் கென்யாவும் உகண்டாவும் எத்தியோப்பியாவும் மிகவும் நுணுக்கமாக செயற்படுவதாக இவ்வாய்வு குறிப்பிடுகிறது. இதனால், பாரிய நிலப்பரப்பையும் இஸ்லாமிய உலகத்தோடு ஆபிரிக்க முஸ்லிம் சமூகத்தை இணைக்கும் சக்தியையும் பெற்றுள்ள சோமாலிய தேசம் செத்து மடிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மேலும் சோமாலியா, எரிட்ரியா மற்றும் மாலி, ஜிபூத்தி தேசங்களது பஞ்ச நிலைமைகள் பற்றி அவ்வாய்வாளர் எழுதும்போது, "Drought is natural , but Famine is Politics" (வரட்சி என்பது இயற்கை. ஆனால், பஞ்சம் என்பது அரசியல்) என்கிறார்.

அதாவது, மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் (ருவண்டா, மத்தியாபிரிக்க குடியரசு, அங்கோலா, கொங்கோ) இனச் சுத்திகரிப்பு அரசியலையும் (Genocide Politics) கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் (சூடான், சோமாலியா, ஜிபூத்தி) பஞ்சத்தையும் பயன்படுத்தி அரச பொருளாதார இலாபம் தேடும் அநீதியை அமெரிக்கா செய்கிறது. இன்னொரு கோணத்தில் இஸ்ரேல் ஆபிரிக்காவில் மிக நரித்தனமான ஓர் அரசியல் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. அதாவது, ஆபிரிக்க நாடுகளை எப்படியாவது அரபு எதிர்ப்பாளர்களாக மாற்ற வேண்டும் என்பதே அந்தக் கபட நாடகம். இதற்காகவே, எத்தியோப்பியாவுடனான இராஜதந்திர உறவை டெல்அவீவ் பலமாக கட்டியெழுப்பியுள்ளது. இஸ்ரேல் எத்தியோப்பியாவுடனான உறவைப் பலப்படுத்தும் முகமாக நைல் நதிக்கு குறுக்காக ஓர் அணையைக் கட்டுவதற்கு தீர்மானித்துள்ளது. எத்தியோப்பியாவில் விவசாயத் துறையை மேம்படுத்துவது என்ற பெயரில் இஸ்ரேல் இத்திட்டத்திற்கு நிதியீட்டம் செய்வதற்கு தயாராகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



> இன்னொரு கோணத்தில் இஸ்ரேல் ஆபிரிக்காவில் மிக நரித்தனமான ஓர் அரசியல் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. அதாவது, ஆபிரிக்க நாடுகளை எப்படியாவது அரபு எதிர்ப்பாளர்களாக மாற்ற வேண்டும் என்பதே அந்தக் கபட நாடகம். இதற்காகவே, எத்தியோப்பியாவுடனான இராஜதந்திர உறவை டெல்அவீவ் பலமாக கட்டியெழுப்பியுள்ளது.

இதன் பின்னால் இஸ்ரேல் அடைய முனையும் அரசியல் இலக்கு யாதென்றால், இவ்வாறு நைல் நதிக்கு குறுக்காக அணையெழுப்பினால், எகிப்து மற்றும் சூடான் போன்ற நாடுகளுக்கும் நைலை மையப்படுத்திய போக்குவரத்து

**துருக்கியின் ஆபிரிக்க நகர்வுகள் வெறுமனே பொருளாதார, உதவியை மையப்படுத்திய தல்லாமல் ஆன்மிகப் பரிமாணத்தையும் உள்ளடக்கியது.**

நிறுவனங்களுக்கும் பாரிய இழப்பு ஏற்படும். இது நிச்சயம் எத்தியோப்பியாவுக்கும் எகிப்து மற்றும் சூடான் நாடுகளுக்கு மத்தியில் விரிசலை ஏற்படுத்தும். எகிப்திற்கும் சூடானுக்கும் பின்னால் அரபு நாடுகள் இணைந்து கொள்வது சர்வ நிச்சயமானது. அதே போன்று எத்தியோப்பியாவின் பின்னால் உகண்டா, ருவண்டா மற்றும் அங்கோலா போன்ற நாடுகள் இணைந்து கொள்வதும் நிதர்சனமானது. இது இறுதியில் அரபு- ஆபிரிக்க நாடுகளுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தும். இதில் குளிர் காய்வதற்கு இஸ்ரேல் தயாராகிக் கொண்டிருக்கிறது. அதாவது, அவ்வாறு ஆபிரிக்க நாடுகள் அரபுகளுக்கு எதிராக நிற்குமானால் ஐக்கிய நாடுகள் சபையின் வாக்கெடுப்புகளில் ஆபிரிக்க நாடுகளின் வாக்குகளை தம்வசப்படுத்திக் கொள்வதே இஸ்ரேலின் இலக்காகும்.

### ஆபிரிக்காவில் துருக்கியின் ஆதிக்கம்

அமெரிக்கா ஆபிரிக்காவிலிருந்து பிரான்ஸை விரட்டியடித்து விட்டது. மத்திய கிழக்கையும் நெருங்க விடாமல் அவதானமாக கண்காணிக்கின்றது. ஆனால், அமெரிக்காவின் ஆபிரிக்க ஆதிக்கத்திற்கு பெரும் சவாலாக துருக்கி வளர்ந்து வருவதாக அரசியல் விற்பன்னர்கள் குறிப்பிடுகின்றனர். சமீபத்திய துருக்கியின் ஆபிரிக்க நகர்வுகளால் வல்லரசுகள் கதிகலங்க ஆரம்பித்துள்ளன. துருக்கியின் ஆபிரிக்க நகர்வுகள் பொருளாதார அபிவிருத்தியை பகிர்ந்து கொள்ளல் என்ற மகுடத்தை மையப்படுத்தி அமைந்திருப்பது, அந்நாடுகள் துருக்கியின் பால் வளைந்து கொடுப்பதற்கு பெரிதும் துணை செய்துள்ளதாக ஆபிரிக்க ஆய்வாளர்களே எழுதுகின்றனர். அதவாது, சுரண்டும் அரசியலல்லாது, பகிர்ந்து கொள்ளும் அரசியலாக துருக்கியின் ஆபிரிக்க நகர்வுகள் அமைந்துள்ளது என அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர். ஆபிரிக்கா மீதான துருக்கியின் செல்வாக்கைச் சுட்டும் சில அம்சங்கள் வருமாறு:

அபிவிருக்தியை பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு துருக்கிய அரசு 2005ஆம் ஆண்டை ஆபிரிக்க ஆண்டு என பிரகடனம் செய்திருந்தது. இதனை ஆபிரிக்க யூனியன் மிகவும் விரிந்த உள்ளத்தோடு வரவேற்றமையும் நோக்கத்தக்கது. மட்டுமல்லாமல், 2005ஆம் ஆண்டு முதல் ஆபிரிக்க யூனியனின் அமர்வுகளை அவதானிக்கும் அந்தஸ்தையும் (Obse rver state) துருக்கி பெற்றுக் கொண்டது.

2008ஆம் ஆண்டு இஸ்தான்பூல் நகரில் துருக்கிய- ஆபிரிக்க யூனியன் என்றொரு மாநாடு நடைபெற்றது. இதில் ஆபிரிக்காவில் மிக வறுமை மிகுந்த நாடுகளுடன் துருக்கியின் அபிவிருத்தியைப் பகிர்ந்து கொள்ளும் பல திட்டவரைபுகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.


2012ஆம் ஆண்டு சோமாலியாவில் இஸ்தான்பூல் மாநாடு என ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இதில் 57 நாடுகளும் 11 சர்வதேச நிறுவனங்களும் பங்குபற்றின. இதில் துருக்கியின் அபிவிருத்தித் திட்டங்களை ஆபிரிக்க கண்டத்தில் விஸ்தரிப்பது தொடர்பாக ஆழமாக கலந்துரையாடப்பட்டன.

சோமாலியாவின் உட்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகளை துருக்கிய அரசே முழுமையாக பொறுப்பேற்று செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு வெறும் 12 ஆபிரிக்க நாடுகளின் தூதுவராலயங்களே துருக்கியில் காணப்பட்டன. ஆனால், இன்று 34 நாடுகளின் தூதுவராலயங்கள் இயங்கி வருகின்றன. மேலும் ஆபிரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையிலான பொருளாதார பரிமாற்றப் பருமன் 2003இல் வெறும் 5.4 பில்லியன் டொலர் மாத்திரமே. ஆனால், இன்று 17 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளமை நோக்கத்தக்கது. ஆபிரிக்க அபிவிருத்தி வங்கியில் அதிகூடிய பணவைப்பு துருக்கியினுடையது என்பது இன்னொரு முக்கிய அம்சமாகும்.

அன்காராவை தளமாகக் கொண்டியங்கும் சமூக, பொருளாதார, அரசியல் ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் SETA) ஆய்வாளரான மொஹமட் ஒஸான் சமீபத்தில் எழுதிய கட்டுரையொன்றில், துருக்கியின் ஆபிரிக்க நகர்வுகள் வெறுமனே பொருளாதார, உதவியை மையப்படுத்திய தல்லாமல் ஆன்மிகப் பரிமாணத்தையும் உள்ளடக்கியது. அதாவது சோமாலியா, சூடான், நைஜர், உகண்டா, ஜிபூத்தி, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் இஸ்லாமிய பாடங்களை கற்பிக்கும் போதான நிலைகளை துருக்கி அரசு நிர்மாணித்து வருகின்றமை மக்களுக்கு மத்தியில் பாரிய வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், துருக்கியில் சிறுவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு மார்க்க கல்வியை புகட்டும் முறைமைகளை துருக்கிய அரசு அப்படியே சோமாலியாவில் செயற்படுத்தி வருகின்றமை கோடிட்டுக் காட்டப்படத்தக்கது.

எனவே, பல தசாப்த காலம் வளச் சுரண்டல்களாலும் இனச் சுத்திகரிப்பு மற்றும் கூட்டுப் படுகொலைகளாலும் அசிங்கப்படுத்தப்பட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு துருக்கியின் முன்மாதிரிமிக்க முயற்சிகள் சிறந்த எதிர்காலத்தை கட்டியம் கூறும் என எதிர்பார்க்கலாம். ■



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

> "எனது ஆட்சி முழு இந்தியர்களுக்குமானது" என மோடி பலமுறை தேர்தல் கூட்டங்களில் கூறியிருக்கிறார். ஆனால், மோடியின் இக்கூற்றை நம்பும் நிலையில் இந்திய சிறுபான்மையினர் இல்லை என மகாத்மா காந்தியின் நான்காம் தலைமுறையான அரசியல் ஆய்வாளர் Gopalakrishna Gandhi த ஹிந்து பத்திரிகையில் எழுதிய 'இந்தியப் பிரதமருக்கு ஒரு மடல்' என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை
zackymfm@gmail.com

# மோடியின் வெற்றியும்
## இந்தியச் சிறுபான்மையினரின் எதிர்காலமும்

**இந்தியாவின்** பாராளுமன்றத் தேர்தலில் இந்துத் தேசியவாத பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளர் நரேந்திர மோடி வெற்றியீட்டியுள்ளார். தற்போது பலரும் எழுப்புகின்ற மிக முக்கியமான கேள்வி என்னவென்றால், மோடி தேர்தல் மேடைகளில் முழங்கிய பொருளாதார அபிவிருத்தியையும் நல்லாட்சியையும் சாதித்துக் காட்டுவாரா? மற்றும் நரேந்திர மோடியை ஆளும் இந்துத்துவ மதவெறியை மையப்படுத்திய உணர்வியல் அரசியலானது (Emotional Politics) சிறுபான்மை முஸ்லிம்களுக்கு நாட்டின் பொது நீரோட்டத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு இடமளிக்குமா? போன்றனவாகும். மறுபக்கம், சிறுபான்மையினர் பற்றிய கேள்விகளுக்கு அப்பால், இந்தியாவை சுழன்று தாக்கும் சமூகப் பிரச்சினைகளான பெண்கள் மீதான அடக்குமுறை, சாதி வேறுபாடு மற்றும் மதங்களுக்கு இடையிலான குரோத உணர்வு போன்றவற்றை மோடி எவ்வாறு கையாளப் போகிறார் என்பதும் பாகிஸ்தான், சீனா மற்றும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை மோடி எவ்வாறு கையாளப் போகிறார்? என்பதும் நேர்மையான இந்திய அரசியல் ஆய்வாளர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருக்கும் அம்சங்களாகும்.

**இந்தியச் சிறுபான்மையினரும் மோடியின் அரசும்:**

மோடி ஓர் இனப்படுகொலைக்காரன் என்பது அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஏற்றுக் கொண்ட பேருண்மை. முஸ்லிம் சமூகத்தை இந்தியாவிலிருந்து துடைத்தெறிய வேண்டும் என்பதே மோடியின் அடிப்படை சமூகவியல் கோட்பாடு. மோடி சார்ந்திருக்கும் இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ். அமைப்பானது அடிப்படையில் முஸ்லிம் எதிர்ப்புக் கருத்தியலைக் கொண்ட இயக்கமாகும். தனது பத்து வயது முதல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆர். எஸ். எஸ்ஸில் வளர்ந்தவர். ஜேர்மனின் ஹிட்லர் மற்றும் முஸோலினி போன்ற பாஸிஸ்ட்டுகளின் சிந்தனையால் ஆகர்சிக்கப்பட்டவர்களே ஆர். எஸ்.எஸ். இயக்க அங்கத்தவர்கள். இந்தியாவில் முஸ்லிம் சனத்

தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ்ஸின் பிரதான செயற்திட்டங்களில் ஒன்றாகும்.

2002ஆம் ஆண்டு குஜராத் நகரில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான இனப் படுகொலைகளில் 1000க்கு மேற்பட்ட முஸ்லிம்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. இந்த இனப் படுகொலை நரேந்திர மோடியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்தான் நடைபெற்றது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மை. மோடியின் அரசில் இருந்த பலரே இதனை வெளிப்படையாகக் கூறியுள்ளனர். "மோடிதான் இனக் கலவரத்தை தடுத்து நிறுத்த வேண்டாம் என எங்களுக்கு கட்டளையிட்டார்" என பல பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தெளிவாக அறிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பின்புலத்தில்தான், இந்தியாவில் ஒருவர் அடைய முடியுமான அதியுயர் அதிகாரத்தை இந்துத்துவ பாஸிஸ்ட் நரேந்திர மோடி அடைந்திருக்கிறார். எனவே, இந்திய முஸ்லிம்கள் விவகாரத்தில் அவர் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்? என்ற கேள்வி உலக முஸ்லிம் சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஒரு கணம் கவலையில் ஆழ்த்தியுள்ளது. சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையொன்றில், மோடியின் வெற்றி முழு உலகத்தையும் கலக்கமடையச் செய்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. மறுபுறத்தில், தென்னாசியாவில் இயங்கும் அனைத்து இனவாத குழுக்களும் மோடியின் வெற்றி சாதகமானது என கருத்து வெளியிட்டுள்ளன. இலங்கையைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி வாசுதேவ நாணயக்கார மோடியின் வெற்றி முழு தெற்காசியாவையும் இருண்ட யுகத்தில் தள்ளிவிட்டுள்ளது என தனது ஆதங்கத்தையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளார்.

"எனது ஆட்சி முழு இந்தியர்களுக்குமானது" என மோடி பலமுறை தேர்தல் கூட்டங்களில் கூறியிருக்கிறார். ஆனால், மோடியின் இக்கூற்றை நம்பும் நிலையில் இந்திய சிறுபான்மையினர் இல்லை என மகாத்மா காந்தியின் நான்காம் தலைமுறையான அரசியல் ஆய்வாளர் Gopalakrishna Gandhi த ஹிந்து பத்திரிகையில் எழுதிய 'இந்தியப் பிரதமருக்கு ஒரு மடல்' என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார். சிறுபான்மையின் அச்சத்திற்குப் பின்னால் பல்வேறு காரணிகள் மறைந்திருக்கின்றன. அவற்றில் சில வருமாறு:

இந்தியப் பிரதமர் மோடி தனது பாஸிஸக் கோட்பாடுகளைக் கைவிட்டு ஒரு ஜனநாயகவாதியாக தேர்தல் மேடைகளில் பேசுவார் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அவர் ஓர் இராணுவ ஜனரல் போன்றே தேர்தல் மேடைகளில் முழங்கினார். இந்தியச் சிறுபான்மை மக்களின் உள்ளங்களில் தன்னைப் பற்றிப் பதிந்திருக்கும் மிக மோசமான விம்பங்களை அழிக்கும் வகையில் ஒரு வார்த்தையைக் கூட தேர்தல் மேடைகளில் மோடி பேசவில்லை. குறிப்பாக, குஜராத்திய முஸ்லிம் சமூகத்தை ஆற்றுப்படுத்தும் வகையில் ஒரு வசனம்கூட மோடியின் தேர்தல் மேடைகளிலோ அல்லது தேர்தல் விஞ்ஞாபனத்திலோ வெளியிடப்படவில்லை. மறுபுறத்தில் அயோத்தியாவில் அமைந்துள்ள ராமர் கோயிலையும் அப்பிரதேசத்தின் இந்துப் புனிதத்துவத்தையும் பாதுகாப்பதற்கு முழுமையான முயற்சியை தனது அரசு மேற்கொள்ளும் என மோடியின் தேர்தல் விஞ்ஞாபனம் குறிப்பிடுகிறது.

மோடியவர்களே! உங்களது பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னால் சிறுபான்மையின் பாதுகாப்பும் இந்தியாவின் பன்மைத்துவமும் ஒன்றும் இரண்டாம் பட்சமானதல்ல. இத்தகைய சிறுபான்மையினரின் உள்ளங்களை வெல்லாமல் ஒருபோதும் உங்களால் இந்தியாவை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியாது

இந்திய முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில்கூட, ஒரு முஸ்லிம் வேட்பாளரையேனும் களமிறக்குவதற்கு மோடி முன்வராமையானது 'எனது ஆட்சி முழு இந்தியர்களுக்குமானது' என்ற கூற்றை கேள்விக்குறியாக்குகிறது என இந்தியாவின் மூத்த ஊடகவியலாளர் பாரத் புசான் அல்ஜஸீரா தொலைக்காட்சி நிறுவனத்துடனான ஒரு நேர்காணலில் குறிப்பிடுகிறார்.

மேலும் இந்திய உப கண்டத்தில் முஸ்லிம்கள் குஜராத்தில்தான் அதிகமாக வாழ்கின்றனர். அங்கும்கூட மோடி ஒரு முஸ்லிம் வேட்பாளரையாவது நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும், மோடியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் 'மோடியின் ஆட்சி முழு இந்தியர்களுக்குமானது' என்ற கோஷம் எழுப்பப்படும்போது உத்தர பிரதேச மாநிலத்தில் 43 முஸ்லிம்கள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தமையை அரசியல் ஆய்வாளர் Gopalakrishna Gandhi ஞாபகப்படுத்துகிறார். தன்மீது எந்த நேரமும் ஹிந்துத்துவ காட்டேறிகள் எகிறிப் பாயலாம் என்ற சிறுபான்மையினரின் அச்சம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மோடியவர்களே! உங்களது பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னால் சிறுபான்மையின் பாதுகாப்பும் இந்தியாவின் பன்மைத்துவமும் ஒன்றும் இரண்டாம் பட்சமானதல்ல. இத்தகைய சிறுபான்மையினரின் உள்ளங்களை வெல்லாமல் ஒருபோதும் உங்களால் இந்தியாவை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியாது என்றும்

பிரதமருக்கு ஒரு மடல் என்ற தனது கட்டுரையில் Gopal akrishna Gandhi மேலும் குறிப்பிடுகிறார்.

மேலும், கடந்த மாதம் 20ஆம் திகதி அமெரிக்கா விலிருந்து வெளிவரும் பொரின் அப்யாஸ் சஞ்சிகையில் வெளிவந்த "What Modi can't give for India" (மோடியால் இந்தியாவுக்கு கொடுக்க முடியாதது என்ன?) என்ற கட்டுரையில், இந்தியாவின் பிரபலமான நாவலாசிரியர் இரா திரவேதி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"கடந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மோடி பொருளாதார அபிவிருத்தி பற்றிப் பேசினார். ஆம், ஏனைய மாநிலங்களை விட குஜராத்திய பொருளாதா ரத்தை மோடி சற்று தூக்கி நிறுத்தினார் என்பது மறுப்ப தற்கில்லை. ஆனால், இம்முறை மோடி பேசிய பொரு ளாதார அபிவிருத்தி ஒன்றும் அவரது நீண்ட தூரப் பார் வையில் உதித்ததல்ல. மாறாக, கடந்த ஐந்து வருடமாக காங்கிரஸ் இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்த பொரு ளாதார ரீதியான அவமானங்களே மோடியை உசுப்பேற் றியது. பொருளாதார அபிவிருத்தியை பேசுபொருளாக் கினால் இந்திய மக்கள் தன் பின்னால் திரளுவார்கள் என்பது மோடிக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. இன்னும், இந்தியாவின் அரசியல் கட்சிகள் ஐரோப்பாவைப் போன்று பொருளாதார அபிவிருத்தியை மையப்படுத் திய கட்சிகளலல்ல. இந்துக் கலாசாரம் மற்றும் மத அடையாளத்தை மையப்படுத்தியே இந்தியாவில் கட்சிகள் வளர்ச்சியடைந்தன. இந்தப் பின்புலத்தில், தனது ஆட்சிக் காலத்தில் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள மோடி இந்துத்துவத்தை நாடுவது சர்வ நிச்சயமானது. பொருளா தார அபிவிருத்தி இரண்டாம் பட்சமாகத்தான் இருக்கப் போகிறது."

நாவலாசிரியர் இரா திரவேதியின் கருத்துக்கள் மோடியின் ஆட்சியின் கீழ் இந்தியச் சிறுபான்மையின் எதிர்காலம் பற்றிய கேள்விகளை இன்னும் வலுவூட்டுவ தாக அமைந்துள்ளன. என்றாலும்கூட, முன்னைய பிரதமர் மன்மோகன் சிங்கின் பிரதி ஆலோசகரும் இந்திய இராஜ தந்திரியுமான கே.வி. சிங். மோடியின் ஆட்சியில் இந்திய சிறுபான்மை பாதுகாப்பு பற்றி வெளியிட்ட கருத்து இங்கு நோக்கத்தக்கது.

குஜராத்தின் முதலமைச்சராக நரேந்திர மோடி செயற் பட்டது போன்று பிரதமர் பதவியிலிருந்து கொண்டு அவ ரால் செயற்பட முடியாது என்கிறார் அவர். அதற்கான பிரதான இரு நியாயங்களை கே.வி.சிங். சுட்டிக் காட்டுகி றார். முதலாவது, இம்முறை மக்களுக்கு வழங்கியிருக்கும் வாக்குறுதிகள் மக்களின் எதிர்பார்ப்புக்களை வானளாவ உயர்த்தி விட்டுள்ளன. அதேவேளை, அடுத்த 5 வருடங் களில் இந்தியாவில் பல மாநிலங்கள் தொடர்ச்சியாக மாநிலத் தேர்தல்களை சந்திக்கவுள்ளன. எனவே, மோடியின் பொருளாதார அபிவிருத்தியை இந்திய மக்கள் காலத்திற் குக் காலம் சோதிக்கவுள்ளனர். இதனால், தனது தனிப் பட்ட நிகழ்ச்சிநிரலை மையப்படுத்தி இயங்குவதற்கான தருணம் இதுவல்ல என்பது நரேந்திர மோடிக்கும் அவரது கட்சிக்கும் நன்றாகத் தெரியும் என்கிறார். மறுபுறத்தில், பாரதீய ஜனதா கட்சியினரும்கூட மோடியின் அமோக வெற்றியை ஓரக்கண் கொண்டே பார்க்கின்றனர். காரணம், லோக்சபா தேர்தல்களில் மோடி பெற்ற வெற்றி ஒரு வகையில் பாரதீய ஜனதா கட்சியின் செல்வாக்கினால் அல்லாமல், மோடியின் தனிப்பட்ட ஆளுமைக்கு கிடைத்த வெற்றியாகும். ஒருவேளை மோடி தனது இனவாத அரசியலை முன்னெடுக்கும்போதும், கொடுத்த வாக்குறு திகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும்போதும், கட்சிக்கு ஏற்படும் அவப்பெயர் பாரதீய ஜனதா கட்சியின் எதிர்கால அரசியலை முழுமையாக பாதிக்கும் நிலைமை காணப்படுகிறது. பாரதீய ஜனாதா கட்சியின் பெரும்பா லான உறுப்பினர்கள் மோடிக்காக கட்சியை தாரைவார்க்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர். எனவே, மோடியின் வெற்றியை வெளிப்படையில் பாரதீய ஜனதா கட்சியின் முன்னணி தலைகள் வரவேற்றாலும்கூட, கட்சிக்குள் கட்சியா அல்லது மோடியா? என்ற அடையா ளப் பிரச்சினை நிலவுவதாக இங்கிலாந்தின் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் இந்திய வரலாற்றுத்துறை பேரா சிரியர் சௌத்திரி கபில கூறுகிறார். இதனால், கட்சிக் குள்ளிருந்து வரும் எதிர்ப்புகளை சமாளிப்பதற்காக மோடி தனது இந்துத் தீவிரவாதத்தை அடக்கி வாசிக்கலாம்.

இரண்டாவது அம்சம், இந்தியாவின் அரசியல் முறை மையின்படி, ஒரு மாநில முதலமைச்சருக்கு குறித்த மாநி லத்தில் உள்ள அதிகாரமானது, தேசிய அரசின் அதிகாரத்தை விட அதிகமானதாகும். பாதுகாப்பு, நிதி மற்றும் நீதித்துறை என்பன மாநில முதலைமச்சரின் நேரடிக் கட்டுப்பாட் டின் கீழ் உள்ளவையாகும். அதேநேரம், தற்போதுள்ள மாநில அரசுகளில் பெரும்பாலானவை காங்கிரஸ் கட்சி யின் ஆதிக்கத்தின் கீழால் உள்ளவையாகும்.

எனவேதான் நினைத்தவாறு செயற்படுவதற்கு மோடியால் முடியாது என்றும் அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தவிரவும் தற்போது பிரதமர் என்ற ரீதியில் இந்திய முஸ்லிம்களுடனான உறவுதான் மோடி அரசின் அரபு நாடுகளுடனான உறவைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கப் போகின்றது. இந்தப் பின்புலத்திலும் மோடி இந்திய முஸ்லிம்களுடன் கடுமையாக நடந்து கொள்ள முற்பட மாட்டார் என சில அரசியல் பகுப்பாய் வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கப்பால், 2007ஆம் ஆண்டு நாட்டின் பொரு ளாதார அபிவிருத்தி பற்றி அரசின் உயர் மட்ட குழுவொன்று சமர்ப்பித்த அறிக்கையின் முடிவுகளை இந்தியாவின் பொருளியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். அதவாது, இந்தியாவில் முஸ்லிம் சிறுபான்மையினர் 15 வீதமாக

(58ஆம் பக்கம் பார்க்க)

**அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் (நளீமி) B.A**
**நிறுவனர், குடும்ப வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கான மத்திய நிலையம்**
cfcglanka@gmail.com




# மகளிர் மட்டும் வாசிக்கவும்!

**இந்தத்** தலைப்பைப் பார்த்தவுடனே ஆண்கள் முண்டியடித்துக் கொண்டு இதனை வாசிக்கப் போகின்றார்கள். எனது பணிவான வேண்டுகோள் நீங்கள் ஓர் ஆணாக இருந்தால் இதனை வாசிக்க வேண்டிய அவசியமே கிடையாது. ஏனென்றால், இதில் உங்களுக்கான ஆலோசனைகள் எதுவுமே கிடையாது.

சரி விடயத்துக்கு வருவோம். ஏன் இப்படியான ஒரு விடயத்தை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டதென்றால், பெரும்பாலும் பெண்களைப் போல ஆண்கள் தமது உளக்கிடக்கைகளை தெளிவாக வெளிப்படுத்துவது கிடையாது. எனவே, பல சந்தர்ப்பங்களில் பெண்களால் தமது கணவன்மாரது எதிர்பார்ப்புக்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகின்றது. அப்படியான சந்தர்ப்பங்களின்போது இருவருக்குமிடையில் மனக்கசப்புகள் ஏற்பட்டு பலபோது உங்களது திருமண வாழ்வுக்கே முடிவுகட்டக்கூடிய பாரதூரமான பிரச்சினைகளாக அவை உருவெடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

ஏன் எனது கணவர் இப்படியிருக்கின்றார்? ஏன் அவர் என்னைப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை? சிலபோது நான் ஒருத்தி மனைவி என்றிருக்கின்றேன் என்பதையே மறந்தவர் போன்று அவர் ஏன் செயற்படுகின்றார்? நான் என்ன தப்பு செய்தேன்? ஏன் அவர் என்னை இப்படி நடத்த வேண்டும்?... என்றெல்லாம் விடை காணப்படாத கேள்விகளோடு வாழும் சகோதரிகளே! இந்தப் பத்தி உங்களுக்காகத்தான்.

அவர் எதிர்பார்த்து என்னால் கொடுக்க முடியாமல் போன விடயங்கள் எவையாக இருக்கும்? நான் எவ்வளவு முயற்சி செய்தும் அவர் மாறுவதாகத் தெரியவில்லையே என்ன செய்யலாம்? பல சந்தர்ப்பங்களில் மனம்விட்டுப் பேசியபோதும், முடிவுகள் எடுத்தபோதும் பெரிய முன்னேற்றங்கள் ஏற்படவில்லையே என்று அங்கலாய்க்கும் சகோதரிகளே! இது உங்களுக்காகவும்தான்.

உங்களது கணவர் உங்களிடம் எதிர்பார்க்கின்ற ஆனால், இதுவரை மனம் திறந்து உங்களிடம் பரிமாறிக் கொள்ளாத, சிலபோது இவைதான் எனது முக்கியமான எதிர்பார்ப்புக்கள் என்று அவரே அறியாமல் இருக்கின்ற சில விடயங்களை இன்று உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

தாம் குடும்பத்துக்கு செய்த, செய்கின்ற பங்களிப்பை மனைவியர் புரிந்து கொள்ள வேண்டும், ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும், பாராட்ட வேண்டும் என ஆண்கள் எதிர்பார்க்கின்றனர்.

எங்களது மனைவியருக்கு நாம் சம்பாதித்துக் கொண்டு வரும் பணம்தான் முக்கியமாக இருக்கின்றது என்று சொல்கின்ற ஆண்கள் எமது சமூகத்தில் தாராளமாகவே இருக்கின்றனர். தமது பங்களிப்பு புரிந்து கொள்ளப்பட வேண்டும், தாம் பாராட்டப்பட வேண்டும் என்று நினைப்பது மனித இயல்பு. அதற்கு ஆண்கள் மாத்திரம் விதிவிலக்கானவர்களல்ல என்பதை பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் செய்யாத விடயங்களின் மீது கவனம் செலுத்துவதும் அதனை வைத்துக் கொண்டு குறை சொல்வதும் விமர்சிப்பதும் மிக இலகுவான விடயங்களாகும். ஆனால், செய்யாதவற்றை விமாசிக்கின்றபோது வழமை

யாக செய்யப்படுகின்ற முக்கியமான விடயங்களை நாம் மறந்து விடுகின்றோம். அதன் விளைவாக கணவன், மனைவியரிடையே விரிசல் ஏற்பட ஆரம்பிக்கின்றது என்பதைப் பலர் புரிந்து கொள்ளத் தவறி விடுகின்றனர்.

ஒரு புத்திசாலியான மனைவி ஒருபோதும் தனது கணவனது நலவுகளை அலட்சியப்படுத்த மாட்டாள். தனது கணவன் மூலமாக தனது வாழ்க்கைக்குள் வந்த சந்தோஷங்களை அடிக்கடி கணவனோடு பகிர்ந்து கொள்பவளாக இருப்பாள். இந்தக் குடும்பத்தின் அச்சாணியாக அவனே இருக்கின்றான் என்ற எண்ணம் அவளது மனதில் எப்போதும் இருக்கும். அவனது பலவீனங்களை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமோ அல்லது அவற்றை வைத்து அவனைக் குறைகூறும் தன்மையோ அவளிடம் இருக்க மாட்டாது.

ஆண்களைப் பாராட்டுவதென்பது வார்த்தைகளல்ல. மாற்றமாக, நீங்கள் உங்களது கணவன்மாரது பங்களிப்பைப் புரிந்து கொண்டு அவர்களைக் குறை சொல்லாமல் அவரால் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் என்பதை ஏதோ ஒருவகையில் அவருக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருப்பதனூடாகத்தான் நீங்கள் அவரைப் பாராட்டுகின்றீர்கள் என்பது மிக முக்கியமான உண்மையாகும்.

தமது மனைவியர் எப்போதும் சிரித்த முகத்துடன் கலகலப்பாக அதேநேரம் தூய்மையாக இருக்க வேண்டும் என்று ஆண்கள் எதிர்பார்க்கின்றனர்.

வீட்டு வேலைகளுக்கென்றே பெரும்பாலான பெண்கள் ஓர் ஆடையை வைத்திருப்பர். அதில் ஒன்றும் தவறு கிடையாது. ஆனால், நாள் முழுக்க அதே ஆடையுடன் இருப்பதானது உங்களது கணவன் உங்களை அறியாமலேயே உங்களை விட்டுத் தூரமாவதற்கு வழிவகுக்கும்.

அதே பழைய ஆடை, வியர்த்த முகம், அடுப்பங்கரை அடையாளங்கள், நாள் முழுக்க வீட்டில் கஷ்டப்பட்ட களைப்பையும் எரிச்சலையும் வெளிப்படுத்தும் கண்கள், புன்னகையை மறந்த உதடுகள் இவை உங்களது கணவன் உங்களிடம் காண விரும்பாத விடயங்கள்.

கணவன் உங்களது மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் காரணமாக அமைய வேண்டுமென்று விரும்புகின்றீர்களா? அவர் வீட்டுக்கு வர முன்னரே உங்களையும் வீட்டையும் தயார்படுத்துங்கள். யார் யாருடைய திருமணங்களுக்கோ அணிவதற்காக அலுமாரியில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் நல்ல ஆடைகளை உங்களது கணவனுக்காக அணிந்து கொள்ளுங்கள். நகைகள் இருந்தால் அதனையும் பத்திரப்படுத்தி வைத்திருக்காமல். ஒன்றிரண்டை அணிந்து கொள்ளுங்கள். புன்னகை தவழும் முகத்துடன் ஸலாம் சொல்லி அவருக்கு வரவேற்புக் கொடுங்கள். அவரது நகைச்சுவைகளை ரசித்து உங்களது மகிழ்ச்சியை சிரிப்பாக வெளிப்படுத்துங்கள்.

உங்களது கணவன் வீட்டுக்கு வருவது நிம்மதியைத் தேடி, வீட்டில் அவன் தேடி வருகின்ற அந்த நிம்மதி மனைவியரான உங்களிடத்தில்தான் இருக்கின்றது என்று அல்குர்ஆன் சொல்கின்றது. நிம்மதி இருக்க வேண்டிய இடத்தில் அவன் கவலையைக் கண்டு கொண்டால் அவன் மூலமாக நீங்கள் அனுபவிக்க வேண்டிய மகிழ்ச்சி படிப்படியாகக் குறைந்து விடும் என்பதில் சந்தேகமே இல்லை.

தனது மனைவி அனைத்தையும் விட தனக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று கணவன்மார் எதிர்பார்க்கின்றனார்.

திருமண வாழ்வின் ஆரம்ப நாட்களில் ஒரு பெண் தனது கணவனுக்குத் தருகின்ற முக்கியத்துவத்தை காலம் செல்லச் செல்ல அவளையறியாமலே குறைத்துக் கொள்கின்றாள். குழந்தைகள் கிடைக்கின்றபோது, வீட்டு வேலைகள் அதிகரிக்கின்றபோது பெண்களது பட்டியலில் கணவன்மார் மூன்றாவது, நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

எனது மனைவி என்னை விட இன்னொன்றுக்கு (அது தனது குழந்தைகளாக இருப்பினும் சரி) முக்கியத்துவம் கொடுக்கின்றாள் என்று ஒரு கணவன் எண்ண ஆரம்பித்தால் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி மறைய ஆரம்பித்து விட்டது என்று அர்த்தமாகும்.

உங்களது கணவனது அன்றாடத் தேவைகள், அவனது ஆரோக்கியம், அவனது எதிர்பார்ப்புகள் என்பவற்றை விட உங்களது குழந்தைகளோ, பெற்றோர்களோ, வீட்டிலிருக்கின்ற பொருட்களோ, நண்பர்களோ உங்களுக்கு முக்கியமாகி விட்டால் நீங்கள் அதற்கு மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியதாகி விடும்.

பலபோது பெண்கள் நாங்கள் அவருடைய குழந்தைகளைத்தானே கவனிக்கின்றோம், சாப்பாடு தயாராகத்தானே இருக்கின்றது, நான் என்ன அடுத்த வீட்டு வேலையையா செய்கின்றேன்? என்பன போன்ற நியாயங்களை தமக்குள்ளேயே சொல்லிக் கொள்கின்றனர். ஆனால், கணவன் வீட்டிலிருக்கின்ற நேரங்களில் நீங்கள் உங்களது நேரத்தை கணவனுக்குக் கொடுக்காமல் வேறு எதற்குக் கொடுத்தாலும் அது அவரை இரண்டாம் பட்சமாக்கியதற்குச் சமமாகும். தான் வீட்டுக்கு வந்தால் மனைவி தன்னோடு இருக்க வேண்டும், தன்னோடு சாப்பிட வேண்டும், தனது வேலைகளுக்கு உதவ வேண்டும் என்பன ஓர் ஆணின் தவிர்க்க முடியாத எதிர்பார்ப்புக்களாகும்.

அந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாதபோது ஒவ்வோர் ஆணும் தான் அலட்சிப்படுத்தப்பட்டதாக உணர்வான்;

உள்ளத்தில் ஒரு வித்தியாசமான வலியை உணர்வான். அந்த வலி தொடர்ந்தும் உங்களது கணவனது உள்ளத்தில் இருக்கும்போது உங்களது குடும்ப வாழ்க்கை ஆபத்தான கட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை சகோதரிகளே நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

உங்களது கணவன்மார் வீட்டை விட்டு வெளியேறு கின்ற நேரம், வீட்டுக்கு வருகின்ற நேரம், உணவருந்துகின்ற நேரம், தூங்கச் செல்கின்ற நேரம், தூங்கி எழுகின்ற நேரம் இவை நீங்கள் உங்களது கணவனுக்காக மட்டுமே ஒதுக்க வேண்டிய நேரங்கள். இவையல்லாத மற்ற நேரங்களில் நீங்கள் மற்ற வேலைகளைச் செய்யலாம். ஆனால், கணவன்தான் எல்லா சந்தர்ப்பங்களிலும் முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டும்.

ஆண்கள் திருப்திகரமான தாம்பத்தியத்தை எதிர்பார்க் கின்றனர்.

கணவன் மனைவி என்ற இருவரும் தொடர்ந்தும் தமது குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தக்க வைத்துக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்யும் காரணி களில் திருப்திகரமான தாம்பத்தியம் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது.

குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாவது கணவன்-மனைவியர் தமக்கிடையிலான தாம்பத்தியத்தை இடை நிறுத்திக் கொள்வதற்கான நியாயமல்ல. அல்லாஹ்த் தஆலா ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான இந்த உறவில் அற்புதமான ஒரு நிவாரணியை வைத்திருக்கின் றான். தமது மனைவியர் மூலமாக ஏற்படும் மனக்கசப் புகளையும் பிரச்சினைகளையும் ஆண்கள் மறந்து விடு வதற்கான ஒரு வாய்ப்பாக இது அமைந்து விடுகின்றது.

ஆண்களுடைய பட்டியலில் முதன்மையான இடங் களைப் பிடிக்கும் விடயங்களில் தாம்பத்தியமும் ஒன்றா கும். தனது மனைவி தன் மீது அன்பு செலுத்துகின்றாள், தன்னைப் புரிந்து கொள்கின்றாள், தன்னை கண்ணியப் படுத்துகின்றாள், தனது தேவையில் அக்கறை செலுத்து கின்றாள், தன்னை முதன்மைப்படுத்துகின்றாள் என்பன போன்ற விடயங்களை ஆண்கள் இதன் மூலமாகவே அதிகம் புரிந்து கொள்கின்றனர்.

இயல்பிலேயே அல்லாஹ்த் தஆலா பெண்ணை விட ஆணை இதில் அதிக நாட்டமுடையவனாகப் படைத்திருக்கின்றான். பல சந்தர்ப்பங்களில் எனது கண வன் தன்னோடு ஏன் காரணமின்றி முரண்பட்டுக் கொள் கின்றான்? என்று எண்ணுகின்ற பெண்களே! அதற்கான விடை நீங்கள் இந்த விடயத்தில் உங்களது கணவனைத் திருப்திப்படுத்தவில்லை என்பதுதான்.

சகோதரிகளே! உங்களது கணவன்மாரது இந்த எதிர் பார்ப்புக்களை நிறைவேற்ற முயற்சி செய்து பாருங்கள். நிச்சயமாக நீங்கள் உங்களது கணவர் சம்பந்தமாகக் கொண்டிருக்கின்ற (நான் ஆரம்பத்தில் சுட்டிக் காட்டிய) நிறைய நிலைப்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிப்பீர்கள்.

ஆரம்பத்திலேயே சொல்லியும் கேட்காமல் இதனை வாசித்து மனதுக்குள் குதூகலித்துக் கொண்ட சகோதரர் களே! இங்கே ஒவ்வொரு விடயத்துக்கும் ஆதாரமாகக் காட்டுவதற்கு ஏராளமான அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் இருந்தபோதிலும் அவற்றைக் குறிப்பிட மாமல் விட்டதற்கான காரணம், நீங்கள் உங்களது மனை வியருக்கெதிராக அவற்றை ஆயுதங்களாகப் பாவிக்காம லிருப்பதற்காகத்தான். ஏதோ வாசித்து விட்டீர்கள், பரவாயில்லை. இதனை வாசித்ததோடு நிறுத்திக் கொள் ளுங்கள். அதனை விட்டுவிட்டு இப்போதாவது விளங்கி னால் சரி என்று கருத்துச் சொல்லப்போய் கிடைக்க இருக் கின்ற நலவுகளை இல்லாமலாக்கிக் கொள்ளாதீர்கள்.

உங்களது மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்வுக்கு மனப் பூர்வமான வாழ்த்துக்கள்!



# உம்மு ஹபீபா ரம்லாஹ் பின்த் அபீ ஸுஃப்யான் (ரழியல்லாஹு அன்ஹா)

பாத்திமா ஸைனப் பின்த் பவாஸ்

தூய தவ்ஹீதின் யதார்த்த நிலை யாதெனில், உலகமே எதிர்த்தாலும் ஈமானின் சுவையை அனுபவித்த ஆன்மாக்கள் எப்போதும் அல்லாஹ்வின்பால் சார்ந்து நிற்பதாகும்.

## சத்தியப் பாதையில் இலட்சியப் பயணி

அமைதி, சாந்தம், கொள்கையில் பற்று, பொறுமை, அர்ப்பண மனப்பான்மை, தூரநோக்கு ஆகிய அனைத்தையும் ஒருங்கே பெற்று வரலாற்றில் சாதனை படைத்த ஒரு பெண்மணி உம்மு ஹபீபா பின்த் அபீ ஸுஃப்யான் (ரழியல்லாஹு அன்ஹா). மக்காவில் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்ததைத் தழுவிய இவர் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் சகோதரரான உபைதுல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். இப்னு இஸ்ஹாக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் கூற்றுப்படி, ஜஃபர் இப்னு அபீதாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுடன் அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்றவர்களின் பட்டியலில் இவர்கள் இருவரும் அடங்குவர்.

குறைஷித் தலைவரும் தனது தந்தையுமான அபூ ஸுஃப்யானின் அரவணைப்பு. அவரது செல்வம், செல்வாக்கு ஆகியவற்றை விட அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அந்தத் தூதர் கொண்டுவந்த மார்க்கத்தையும் எல்லையின்றி நேசித்ததுதான் அந்த திடீர் நகர்வுக்கான காரணம். அல்லாஹ் கூறுகிறான். “இந்த நபி முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களை விட மேலானவராக இருக்கிறார்.” (33: 6)

உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) கூறுகிறார்: “ஒரு நாள் எனது கணவர் மோசமானதொரு உருவத்தில் கனவில் தோன்றினார். நான் காலையில் எழுந்ததும் அவர் கிறிஸ்த்தவராக இருக்கக் கண்டேன். நான் இந்தக் கனவை அவரிடம் எடுத்துக் கூறியும் அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை. மரணிக்கும் வரை மதுபோதையில் உழன்று கொண்டிருந்தார்.” (தபகாத் இப்னு ஸஅத்)

உபைதுல்லாஹ் இப்னு ஜஹஷ் அபிஸீனியாவில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி அங்கு முர்தத்தாக மரணித்தார். (அல்பைஹகீ)

இமாம் இப்னு கதீர் (ரஹிமஹுல்லாஹ்) தமது குறிப்பை எழுதுகிறார்.

“உபைதுல்லாஹ்வுக்கு ஷைத்தான் கிறிஸ்த்தவ மதத்தை அழகாக்கிக் காண்பித்தான். மரணிக்கும் வரை கிறிஸ்த்தவராக இருந்த அவர் முஸ்லிம்களைப் பார்த்து பரிகாசமாக “நாம் இன்னும் உங்கள் பார்வையில் மந்த நிலையைக் காண்கிறோம்” என்று கூறிக் கொண்டிருந்தார். (ஸீரதுந் நபவிய்யா- பாகம்: 3)

இந்தப் பரிதாப நிலையை எண்ணிப் பாருங்கள்! தான் பிறந்து, வளர்ந்து, பழகிய சொந்த நாடான மக்கா, அதன் சூழல், உறவுகள் முதலான அனைத்தையும் இழந்து, உள்ளத்தில் ஈமானை மட்டும் சுமந்து அறிமுகமே இல்லாத அந்நிய நாடொன்றுக்குப் புலம்பெயர்ந்த பின் அங்கே கணவர் கைகழுவிக் கொள்கிறார். இமாம் இப்னு ஹஜர் (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடுகிறார். “உபைதுல்லாஹ் தன் மனைவியிடம், தான் சிந்தித்துப் பார்த்து முடிவு செய்த

தாகவும் கிறிஸ்தவமே மிகச்சிறந்த மதம் என்று தீர்மானித்து விட்டதாகவும் கூறினார்." (அல்இஸாபா)

கிறிஸ்தவத்தைத் தழுவுமாறு அல்லது தன்னிடமிருந்து விவாகரத்துப் பெறுமாறு உபைதுல்லாஹ் சுதந்திரத்தைக் கொடுத்தார். இந்நிலையில் உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு மூன்று தெரிவுகள் இருந்தன.

01. தன் கணவரின் ஜாஹிலிய்ய அழைப்புக்குப் பதிலளித்து, இஸ்லாத்திலிருந்து விலகி கிறிஸ்தவத்தைத் தழுவுதல். அதன் விளைவு உலகத்திலும் மறுமையிலும் இழிவைத் தவிர வேறொன்றும் கிடைக்கப் போவதில்லை என்பது உம்மு ஹபீபாவுக்குத் தெரியும்.

02. அன்று வரைக்கும் இஸ்லாத்தை ஏற்காத நிலையிலிருந்த தன் தந்தையிடம் திரும்பிச் செல்லல். அங்கும் எந்த உதவியோ அனுதாபமோ கிட்டப் போவதில்லை.

03. குடும்பம், வீடு, அரவணைப்பு எதுவுமற்ற துயரங்கள் நிறைந்த வாழ்வை அபிஸீனியாவில் தொடர்தல்.

தூய தவ்ஹீதின் யதார்த்த நிலை யாதெனில், உலகமே எதிர்த்தாலும் ஈமானின் சுவையை அனுபவித்த ஆன்மாக்கள் எப்போதும் அல்லாஹ்வின்பால் சார்ந்து நிற்பதாகும்.

"ஈமான் கொண்டவர்களுக்கு பிர்அவ்னின் மனைவியை அல்லாஹ் உதாரணமாகக் கூறுகிறான். அவர் 'இறைவா! எனக்காக உனக்கருகில் சுவர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டுவாயாக. இன்னும் பிர்அவ்னை விட்டும் அவன் செயல்களை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக' என்று பிரார்த்தித்துக் கூறினார்." (66: 11)

இப்னு ஸஅத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அறிவிப்பின் தொடரில் உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) கண்ட இன்னொரு கனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொருவர் கனவில் தோன்றி அவரிடம் "முஃமின்களின் தாயே!" என்று கூறியுள்ளார். அல்லாஹுத் தஆலா அவருக்காக மறைத்து வைத்திருந்த பேரருள் அதுதான். உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) கூறுகிறார்.

"நான் அபிஸீனியாவில் இருக்கும்போது நஜ்ஜாஷி மன்னரின் அடிமைப் பெண் அப்ரஹா என்னிடம் வந்து "அல்லாஹ்வுடைய தூதருக்கு உம்மைத் திருமணம் செய்து வைக்குமாறு அன்னார் மன்னருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்" என்று கூறினார். "அல்லாஹ் உம்மை நற்செய்தியுடன் அனுப்பியுள்ளான்'' என்று பதிலளித்த நான் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் நான் அணிந்திருந்த வெள்ளி ஆபரணங்களைக் களைந்து அப்ரஹாவுக்கு கொடுத்து விட்டேன். அன்று மாலை நஜ்ஜாஷி மன்னர் முஸ்லிம்களை அழைத்து "அவனே அல்லாஹ். வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. அவனே பேரரசன்; மிகப் பரிசுத்தமானவன்; சாந்தியளிப்பவன்; தஞ்சமளிப்பவன்; பாதுகாப்பவன்; யாவரையும் மிகைப்பவன்; அடக்கியாள்பவன்; பெருமைக்குரியவன். அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அல்லாஹ் மிகத் தூய்மையானவன்" (59:23) என்ற குர்ஆன் வசனத்தை ஓதிவிட்டு, அல்லாஹ்வைப் புகழ்ந்து, பின்னர் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை என்றும் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் என்றும் நான் சாட்சி சொல்கிறேன். மர்யமின் மகன் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) முன்னறிவிப்பு செய்த தூதர் அவர்தான் என்று கூறி தனது உரையை ஆரம்பித்தார்.

"அல்லாஹ்வுடைய தூதர் அபூஸுஃப்யானின் புதல்வி உம்மு ஹபீபாவை அன்னாருக்கு திருமணம் செய்துவைக்குமாறு என்னை வேண்டியுள்ளார். நான் அவர்களது வேண்டுகோளுக்குப் பதிலளிக்குமுகமாக இத்திருமணத்தை நடத்தி வைக்கிறேன். பின்னர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மஹராக அனுப்பியிருந்த 400 தீனார்களை அனைவருக்கும் முந்நிலையில் கொட்டினார். அங்கிருந்து எல்லோரும் கலைந்து செல்ல முன்பு நஜ்ஜாஷி மன்னர் விருந்தோம்பல் செய்தார். உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) தனது வலீஆக காலித் இப்னு ஸஈத் இப்னு அல்ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைத் தெரிவு செய்தார். (அத்தபரீ, ஸீரதுந்நபவிய்யா-இப்னு கதீர், தபகாத்-இப்னுஸஅத்)

இமாம் அத்தஹபீ (ரஹிமஹுல்லாஹ்) கூறுகிறார். "உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) மட்டும்தான் நபியவர்களின் மனைவிகளில் அவ்வளவு அதிக தொகை மஹராகக் கொடுக்கப் பெற்றவர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு நெருங்கிய உறவினர்களுள் ஒருவர். அவர் மட்டும்தான் தொலைதூரத்திலிருந்து திருமணம் செய்து கொண்டவர். " (ஸியர் அஃலாம் அந்நுபலா)

"உங்களுக்கும் அவர்களிலிருந்து நீங்கள் விரோதித்திருக்கின்றீர்களே அவர்களுக்குமிடையில் அல்லாஹ் நேசத்தை ஏற்படுத்திவிடக் கூடும்" (60: 7) என்ற குர்அன் வசனம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கும் இடையிலான திருமணம் சம்மந்தமாக இறங்கியது.

அவர் இவ்வாறாக முஃமின்களின் தாய் என்ற அந்தஸ்த்தை அடைந்தார் என்று இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) விளக்குகிறார். (அல்பைஹகீ)

இமாம் குர்துபி (ரஹிமஹுல்லாஹ்) "நேசம் என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்குமிடையிலான திருமண பந்தமாகும். மேலும் அபூஸுஃப்யானின் விரோதம் மறைந்து அவர் நெகிழ்ந்து கொடுப்பவராக ஆகி இஸ்லாத்தில் நுழைந்தார்." (அல்ஜாமிஉல் அல்அஹ்காமுல் குர்ஆன்)

அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்யுமாறு அல்லாஹ் அழைப்பு விடுக்கின்ற ஸூரா அல்அன்கபூத்தின் ஆரம் பத்தில் "எவர் அல்லாஹ்வுடைய பாதையில் கடுமையாகப் போராடி உழைக்கின்றாரோ அவர் தன்னுடைய நன்மைக் காகவே உழைக்கிறார்" (29: 6) என்றும் அதே ஸூராவின் இறுதி வசனத்தில் "நம்முடைய பாதையில் கடுமையாக முயற்சித்து உழைக்கின்றவர்களுக்கு நிச்சயமாக நாம் நம்மை நோக்கி வரும் பாதைக்கு வழிகாட்டுவோம்" (29:69) என்றும் தங்கள் இறை நம்பிக்கையை தற்காத்துக் கொள்ள கடுமையாக உழைத்தும் அர்ப்பணங்கள் புரிந்த ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு ஆறுதலும் நற்செய்தியும் அளிக்கின்றான். இவ்விரண்டு வசனங்களிலும் அவர்களது அயராத முயற்சியை சித்திரிக்க 'ஜிஹாத்' என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

ஹிஜ்ரி 7ஆம் ஆண்டு கைபர் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர்தான் உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) சில நபித் தோழர்களுடன் மதீனாவுக்கு வந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் இல்லற வாழ்வை ஆரம்பித்தார். அவர் மதீனாவை வந்தடைந்ததும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பிலால் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் உம்மு ஹபீபாவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறையைக் காண்பிக்குமாறு கூறினார்கள். (இப்னு அஸாகிர்)

உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் நான்கு வருடங்கள் வாழ்ந்தார். மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதில் அவர் என்றும் களைப்படையவில்லை. 65 ஹதீஸ்களை அறிவித்துள்ளார். மிகச் சிறந்ததொரு வணக்கசாலியாகவும் அவர் திகழ்ந்துள்ளார். "யார் பகலிலும் இரவிலும் தொடர்ந்து 12 ரக்அத்துகள் தொழுகின்றாரோ அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீடு கட்டப்படும்" என்ற ஹதீஸை நபிகளாரிடமிருந்து செவிமடுத்த நாள் முதல் என்றைக்கும் அவ்வாறு தொழுவதை தான் விட்டுவிடவில்லை என்று உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) கூறுகின்றார். (முஸ்லிம்)

நபிகளாரின் ஏனைய மனைவியருடன் மிகச் சிறந்த உறவைப் பேணி நடந்துள்ளார். ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) கூறுகிறார். "உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவரது மரணப் படுக்கையில் இருக்கும்போது என்னை அழைத்து நாம் அல்லாஹ்வுடைய தூதரின் மனைவிகளாக வாழ்ந்தோம். நான் அல்லாஹ்விடம் எங்களை மன்னிக்குமாறு இறைஞ்சுகிறேன். நீர் எனக்காகப் புரிந்த உதவிகளுக்கு அல்லாஹ் உமக்கு கூலி தரட்டும்" என்று கூறிவிட்டு பிறகு உம்மு ஸலமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை அழைத்து, அவ்வாறே கூறினார்." (தபகாத் இப்னு ஸஅத்)

உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) ஹிஜ்ரி 44ஆம் ஆண்டு மதீனாவில் வபாத்தானார். மற்றும் சில வரலாற்றாசிரியர்கள் அவர் ஹிஜ்ரி 59 இல் வபாத்தானார் எனப் பதிவு செய்துள்ளனர். ■


நீங்களும் நாளைய உலகின்
தொழில்நுட்ப துறை நிபுணராக வேண்டுமா ?
CCTV CAMERA
3 மாத கால பயிற்சி நெறி
பயிற்சி முடிவில் சான்றிதழ்
தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியரின் வழி காட்டல்
பயிற்சி நெறி முடிவின் பின் வெளியில் சென்று வேலைசெய்ய உத்தரவாதம்
இஸ்லாமிய சூழல்
தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும்
ஸகாத் பெற தகுதியான மாணவர்களுக்கு விஷேட சலுகை
What is CCTV
What is DVR
Installation of CCTV & DVR and Power Supply
LEELAK TECHNICAL INSTITUTE
Linking People With Technology
No. 189/1, Kolanawa Road, Dematagoda. Colombo - 09.
Tel : 0112-689-584 E-mail : leelaktech@yahoo.com
Kaleel : 0779-711-721

# முதன்முறையாக தற்போது இலங்கையில்....

**SinaaMedicare**
AYURVEDIC & UNANI

சகல வசதிகளையும் கொண்ட
யுனானி மற்றும் ஆயர்வேத மருத்துவ சேவை மையம்

## எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளத்தக்க பிரத்தியேகமான சேவை வசதிகள்...

- முதுகு, கழுத்து மற்றும் தோற்பட்டை வலி என்பவற்றுக்கான விஷேட Spine Manipulation Therapy
- ஆண்களின் பாலியல் குறைபாடுகளுக்கான விஷேட சிகிச்சைகள்
- உடற் பருமன் மிக்கவர்களது அதீத எடையை குறைப்பதற்கான பிரத்தியேக சிகிச்சைகள்
  - இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தும் SAUNA THERAPY
  - ஒரு மாதத்தினுள் 5-8Kgs வரை எடையை குறைத்துக்கொள்ளலாம்.
- சிறுநீரக மற்றும் பித்தப்பை கற்களை சத்திரசிகிச்சையின்றி அகற்றும் விஷேட யுனானி சிகிச்சைகள்

*ஏனைய சகல நோய்களுக்குமான சிகிச்சை வசதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்...*

*மேலதிக விபரங்கள் மற்றும் சிகிச்சைகளுக்கு...*

**Dr. Fazl-Ul Haque M. Fouze**
BUMS(Hons), LLB-Reading, ADCP, DPTM

**SINAAM MEDICARE**
Assalafiyya Shopping Complex,
Kandy Road,
Paragahadeniya,
Kurunegala.
Office : 037 4 982 659 | Mobile : 071 7 367 287
sinaamedicare@gmail.com
http://www.facebook.com/SinaamMedicare

---

நீங்களும் நாளைய உலகின்
# DIPLOMA
தொழில்நுட்ப துறை நிபுணராக வேண்டுமா ?

குறைந்த வயதில் கைநிறைய சம்பாதிக்கக் கூடிய கற்கைநெறி

## AIR CONDITIONING & REFRIGERATION

- 6 மாத கால பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்
- 100% வீதமான Practical
- இலங்கையில் எங்கும் இல்லாத Work Shop வசதியுடனான பயிற்சி நெறி
- தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழி காட்டல்
- பயிற்சி நெறி முடிவின் பின் வெளியில் சென்று வேலைசெய்ய உத்தரவாதம்
- இஸ்லாமிய சூழல்
- தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும்
- ஸகாத் பெற தகுதியான மாணவர்களுக்கு விஷேட சலுகை

வெளிநாடு செல்வதற்கு தேவைப் படுபவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்

LTi
# LEELAK TECHNICAL INSTITUTE
*Linking People With Technology*
No. 189/1, Kolanawa Road, Dematagoda. Colombo - 09.
Tel : 0112-689-584 E-mail : leelaktech@yahoo.com

**Kaleel : 0779-711-721**

# ஒளிமயமான எதிர்காலத்திற்கு
# Technical Education



Government Approved

## O/L முடித்து விட்டீர்களா?

- உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு
- குறைந்த கட்டணம்
- வீடுதி வசதி
- புலமைப் பரிசில் வசதி

உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

Commencing in **MAY**

| No | Courses | Duration |
|---|---|---|
| 1 | Automobile Mechanism | 18 Months |
| 2 | Domestic Electrical Wiring | 12 Months |
| 3 | Screen Printing | 12 Months |
| 4 | Plumbing | 6 Months |
| 5 | Gas & Arc Welding | 6 Months |
| 6 | Tailoring | 6 Months |
| 7 | Mobile Phone Repairing | 3 Months |
| 8 | Aluminium Fabrication | 12 Months |
| 9 | Wood Craft | 12 Months |
| 10 | Infomartion Technology | 6 Months |

**FOR DETAILS**

Type : ITC , NAME , ADDRESS and SMS to 0773 17 17 22

HOT LINE 077 00 30 728

**IBRAHIMIYA TECHNICAL COLLEGE**

P. O. Box -03, Watakepotha, Deltota.

Registered at the Tertiary & Vocational Education Commission. [ Reg. No. : P09 / 0113 ]

INSIGHT

# முகநூலும் அகநூலும்!

இப்னு ஹம்துன்

பல்லாண்டு கடந்தாலும்
பார்த்திடலாம் நம்காட்சி
சொல்லாக, படமாக,
சேர்த்துவைத்த ஃபேஸ்புக்கில்!

எழுதிவைத்த குறிப்பைத்தான்
எடுத்துவைக்கும் ஃபேஸ்புக்கும்
பழுதுகளைத் தவிர்த்தபடி
பாராட்டே முன்வைக்கும்!

நிம்மதியைத் தேடவிட்டு
நேரத்தைக் கொன்றபடி
நம் மதியை மூழ்கடிக்கும்
நலம் சிலவே ஃபேஸ்புக்கில்!


நல்லதுவும் கெட்டதுவும்
நிரப்புகின்ற ஃபேஸ்புக்கில்
உள்ளதுவா ஆச்சரியம்?
உளநூலை அறிவாயா?

முகநூலில் உன் பெருமை
முழு மூச்சாய் பதிகின்றாய்
அகநூலில் ஒவ்வொன்றும்
அச்சாதல் அறிவாயா?

எல்லாமும் பதிந்திருக்கும்
ஏ -டு- ஸட் அகநூலில்
அல்லாஹ்வே! அற்புதம்தான்
அத்தனையும் மனம் காணும்!

சிறுசெயலை பெருஞ்செயலை
சிந்தனையில் உதிப்பதையும்
குறிக்கின்றார் வானவர்தாம்
கியாமத்தில் காட்சிக்காம்!

உலகமிதன் பார்வையிலே
உயர்வென்பார் ஃபேஸ்புக்கை
உலகமுமே ஃபேஸ்புக்தான்
உணர்ந்திடுவோம் மறுமையிலே!




# குர்ஆனிய சமூகத்தை நோக்கி...

மறை கூறும் வழி
மறந்திடாததோர் உலகம் வேண்டும்!
நபிவழி நடக்கும்
நிலையான உள்ளமுடைய மக்கள் வேண்டும்!


நபிகளார் உருவாக்கிய
அந்த மதீனாவை மீண்டும் காண வேண்டும்!
மறுமையின் விளைநிலமாய்- இந்த
மண் மாற வேண்டும்!

ஸைனப் அல்கஸ்ஸாலியின்
தைரியமிக்க உள்ளமதை உணர வேண்டும்!
பெண்கள் அச்சமின்றி நடமாட
மீண்டுமோர் கிலாபத் வேண்டும்!

இரத்த ஆறு ஓடாமல்
இணைந்த நவீன உலகம் வேண்டும்!
மாக்களை மக்களாக்கும்
மார்க்கக் கல்வி உயர வேண்டும்!

இவை அனைத்தும் நாம் காண
குர்ஆனை நோக்கியதொரு சமூகம் வேண்டும்!
இதற்காக நீயும் நானும்
குர்ஆனை உள்ளமதில் சுமக்க வேண்டும்!

**நுஹா ஹரீஸ்**
**ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா**



# கியாமுல் லைல்

இரத்த உறவுகளைக் கடந்து
இறைவன் உறவை இணைத்த நாள்
தஹஜ்ஜுத் தொழுகை
தரணியில் தடம்பதிக்க தந்ததே பல பாடம்

சொற்ப நேரம் தொழுகையில் தொலைத்து
சோகங்களை சுகமாக்கிய சுகந்த நாள்
உடலையும் உள்ளத்தையும் உயிர்ப்பித்து
உணர்வுகளைக் கட்டுப்படுத்திய நாள்

பகலில் குதிரை வீரர்களாய்
இரவில் துறவிகளாய் வாழ
படிப்பினை பல தந்து இப்பாரினில்
பணி செய்யும் பாரத்தை பதிய வைத்த நாள்!

அழகான முறையில்
ஆழமான பாடம் புகட்டி
அறிவுப் பாடம் கற்பித்த
ஆன்மிக நன்நாள்!

மலைகள் சிதறடிக்கப்பட்டு பூமியும் ஆட்டங்கண்டு
மண்குவியலாக மாறப்போகும் அந்த நாளை
மனதில் பதியவைத்த
மகத்தான புனித நாள்!

பிர்அவ்னுக்கு தூதரனுப்பி தூற்றியது போல்
பின்னாலுள்ள மனிதரும் தூதருக்கு மாறு செய்யாமலிருக்க
மாநபி முஹம்மத் (ஸல்) அவர்களை
மனதில் மலர வைத்த மறக்க முடியாத பெருநாள்!

இத்தனை ஈமானிய இன்பங்களையும் அனுபவித்து
இறைபாதையில் பணிசெய்ய தஹஜ்ஜுதை தொடர்ந்தால்
யாகூத் தோட்டமும் மகாமே மஹ்மூதும்
யாவருக்கும் கிடைக்கும், இன்ஷா அல்லாஹ்!

**மஸாயா அஸீஸ்**
**கண்டி வீதி, வெலம்பொடை**



# பொறு...

அடுத்த உதயம் வரை
அடர்ந்துவிட்ட இருளைப் பொறு
விருட்சம் விளையும் வரை
விழுந்த விதையைப் பொறு!

பூக்கும் காலம் வரை
பூமொட்டுகள் பொறு
பூப்பூத்த காலங்களில்
பிள்ளைகளின் பிழைகள் பொறு!

கைகளில் கனியும் வரை
கிளையில் காயைப் பொறு
கண்ணுக்குள் உனைக் காத்த
வயோதிகத் தாயைப் பொறு!

மரணத்தின் அண்மை வரை
மூத்தவர் முனகல் பொறு
இறுதிநாள் தட்டும் வரை
இதயத்தின் இச்சை பொறு!

திறக்காத கதவில்லை
திறக்கும் வரை திசைகள் பொறு
திறக்க நீயும் முயன்று விட்டால்
திக்குகள் துலங்கும் பொறு!

உண்மைகள் ஜெயிக்கும் வரை
உருப்படாப் பொய்யைப் பொறு
நன்மைகள் நிலைக்கும் வரை
தீமையின் தீங்கைப் பொறு!

நினைத்ததை முடிக்கும் வரை
நகைப்பவர் நக்கல் பொறு
காரியம் கைகூடி
கயமையும் அழியும் பொறு!

பொறு!
புயலின் பொறுமையே
பூந்தென்றல்,
பூகம்பத்தின் பொறுமையே
புவியின் மெல்லதிர்வு,
தீயின் பொறுமையே
தீபம்,
மனிதா உன்
மனதின் பொறுமையே
மனிதம்!

**-சபீர்-**

# ஞாபக ரணங்கள்



உனக்குள்...
இதயமிருந்தால்
கடந்த யுகம்
கசக்கித் துப்பிய
இரத்தச் சுவடுகளை ஞாபகி!!

உனக்குள்...
ஈரமிருந்தால்
சொந்தங்கள் புதைந்த
தடயங்களில் எழுந்த
வரலாற்றை வாசி...
அதன் தென்றலில் மிதக்க
தியாக ஒட்சிசனை சுவாசி!!

உன்னில்...
ஈமான் விளைந்தால்...
எமது இதய மக்திஸின்
உதயத்திற்காகப் புறப்படு...
உன் விசுவாசத்தை
சற்று விசாலமாக்கி...!!!

## The Leader in Professional "Networking" Trainings in Sri Lanka !

CISCO | Microsoft | vmware | Linux | STORAGE+ | php | MySQL

**Best Instructors | Printed Materials | Flexible time table | All 3 Languages**

CISCO
12 DAYS BOOTCAMPS
By Mr. Harith Kariapper
Quadruple CCIE #8661
Master Instructor WinNET
(UK & CANADA)

CCIE Routing and Switching | CCIE Voice | CCIE Routing and Switching Pre Bootcamp
Best Instructors @ Best Institute
100% Satisfaction Guaranteed

CISCO CCNA | CISCO CCNA Voice | CISCO CCNP
Unlimited Practicals

**100% Practicals with Real Cisco Equipments (Cisco Routers, Switches & IP Phones)**

Microsoft

MCSA Server 2012
- EXAM 70-410 Installing & Configuring Windows Server 2012
- EXAM 70-411 Administering Windows Server 2012
- EXAM 70-412 Configuring Advanced Windows Server 2012 Services

MCSA Windows 8
- EXAM 70-687 Configuring Windows 8 Enterprise
- EXAM 70-688 Managing and Maintaining Windows 8 Enterprise

Practicals with Server 2012 Windows 8

HARDWARE Engineering — ComTIA A+
NETWORK Administration — ComTIA N+

Individual & Night Classes Can Be Arranged on Request

STORAGE
Storage Area Networking
NettApp HP Brocade EMC Cisco

Come as Six in a group and get 20% discount each.

Linux Network Administration RHCT RHCE 100% Practicals

PHP for Software / Web Developers By an Experienced Professional

vmware Version 5.5 ICM Special Rate

One Day Workshop on - CCTV, PABX Intercom, Network Cabling & Wireless
- CCTV Installation
- Network Cabling
- PABX installation
- Wireless Technology

with LUNCH & Certification JUST 2500/=

100% Practical Training Program
By Industrial Professionals

HOTLINE - 0777-825789

4 DAYS
FEB : 1-4 Jaffna
FEB : 13-16 Colombo

Residential Training Camp
with Accomodation, Meals & Refreshments
with Recognized Certification from WinSYS & 3M Lanka

- Copper Cabling Training by 3M Lanka Copper Testing by Fluke Sri Lanka
- Fiber Cabling Training by 3M Lanka Fiber Testing by Fluke Sri Lanka
- PABX intercome Installation & Configuration
- CCTV Camera Installation & DVR Configurations DDNS Configuration (Smart Phone & Ipad Configuration)
- Access Control System , Security Alarm System, GPS

"WinSYS Networks" 3M Authorised Training Partner
100% Practical Training
HOTLINE - 0777-825789
You will get A Valuable Tool Kit

Visa Consultancy

Study ... Work ... Live ...
UK, CANADA, AUSTRALIA, RUSSIA, FRANCE, ITALY, MALASIYA, SINGAPORE, PHILIPPINE, CZECHE REPUBLIC, POLAND, GERMANY, KOREA

DIPLOMA | DEGREE | MASTER

IELTS Training | Payment After Visa (Conditions Apply) | 100% Success (For Genuine Docs)

"Today's Competitive world wants a Qualification which is being better and different from others."

OUR PERSONALIZED SERVICES INCLUDE
- ADVICE & GUIDANCE ON THE UCAS OR DIRECT ADMISSION PROCESS
- FAST TRACK ADMISSION PROCESS
- GUIDANCE AND ASSISTANCE ON THE STUDENT VISA APPLICATION PROCESS

Advantages

Call Now 0779-353114

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையினைத் தொடர்ந்து இலங்கையின் தலைசிறந்த கணனிப்பயிற்சி நிறுவனமாக எங்களுடன் இணையும் உங்களுக்கு தனித்தனியான கணனி மற்றும் உபகரணங்கள். நவீன வசதிகளுடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட பயிற்சிக் கூடம். நன்கு பயிற்றப்பட்ட தலை சிறந்த அனுபவமிக்க பயிற்சியாளர்கள். 10 வருட அனுபவம். கொழும்பு கண்டி மற்றும் மட்டக்களப்பு நகரில் பயிற்சிக்கூடம்.

உங்களுக்காகவே

WinSYS NETWORKS®
High-Tech Computer Training & Consulting Centre!

Address : 14. Schofield Place, Kollupitiya, Colombo-03
Telephone : 011-2589567 011-2589568
Online : www.winsys.lk info@winsys.lk

BRANCHES
KANDY : 0777-807630
COLOMBO : 0777-259927
BATTICALOA : 0777-832871
JAFFNA : 0777-825789

## Graphic Designing

Total Training of Creating Quality Graphics Using Latest Designing Software

Adobe

- Adobe Photoshop
- Adobe Illustrator
- Adobe InDesign
- CorelDRAW

CorelDRAW X4

- All the softwares & Tutorials will be Provided
- All the Subjects will be 100% Practicals
- Individual Attention to all the Students
- Individual Computers will be provided

Course Fee:- 9500/=

## Web Designing

Total Training of Creating Attractive Websites Using the Latest Softwares

- Adobe Photoshop
- Adobe Dreamweaver
- Flash Animations
- HTML & PHP (Basics)
- Domain Registration
- Uploading Website

After the training you will be able to create your own website & Publish

Course Fee:- 15000/=

## AutoCAD 2D & 3D Drafting

### 2D Drafting

- Introduction to AutoCAD
- Toolbars, Menus, and Dashboard
- Understanding the Drafting Tools
- Drawing 2D Objects
- Text Styles
- Editing with the Modify Panels Tools
- Dimensions and Tolerances
- Getting Organized with Layers
- Create and Use Blocks
- Hatches, Fills and Wipeouts

Course Fee:- 16500/=

### 3D Drafting

- Create 3D Models
- Modify 3D Solids and Surfaces
- Create Sections and 2D Drawings from 3D Models
- Laying out and Printing Your Drawing
- Plot Drawing

## Web Development

- HTML
- CSS3
- JavaScript
- Jquery
- Server-Side Programming
- AJAX
- PHP
- MySQL

HTML 5 CSS 3

This Training Covers Programming for Web & Software Deverlopers

php MySQL jQuery AJAX

Course Fee:- 19900/=

## Office Applications

Microsoft Office

- MS Word
- MS Excel
- MS Access
- MS PowerPoint

Internet & E-mail

Course Fee:- 7500/=

E-win NETWORKS ®

524, Peradeniya Road, Kandy

Contact Us


Tel : 081-2203786
Mob : 0777-047708
facebook.com/ewin.net
twitter.com/ewinnetworks

www.ewin.lk

HOTLINE
0777-807630

இஸட்.ஏ.எம். பவாஸ், சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம் - மலேசியா

# அல்இஸ்ராவும் பைத்துல் மக்திஸும்



## -ஒரு வரலாற்றுப் பாடம்-

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மக்காவிலுள்ள கஃபதுல்லாவிலிருந்து ஜெரூஸலத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவை நோக்கி இரவில் அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்வு 'இஸ்ரா' என்றும் அங்கிருந்து அன்னார் விண்ணை நோக்கிப் பயணித்த நிகழ்வு 'மிஃராஜ்' என்றும் அழைக்கப்படுகிறது. குர்ஆன் இவ்விரு பயணங்களையும் இரு வேறு ஸூறாக்களில் பதிவு செய்துள்ளது. இஸ்ராவும் அதற்கான காரணமும் ஸூரா இஸ்ராவிலும் மிஃராஜும் அதன் பயன்களும் ஸூரதுந் நஜ்மிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

"தன் அடியாரை கஃபாவாகிய சிறப்புப் பெற்ற பள்ளியிலிருந்து பைத்துல் முகத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு இரவின் ஒரு பகுதியில் அழைத்துச் சென்றானே அத்தகையவன் மிகத் தூய்மையானவன். மஸ்ஜிதுல் அக்ஸாவாகிய அது எத்தகையதென்றால், நாம் அதனைச் சூழவுள்ள பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்திருக்கிறோம். நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காகவே அழைத்துச் சென்றோம். நிச்சயமாக அவன் செவியேற்பவனும் பார்ப்பவனும் ஆவான்." (17: 1)

மஸ்ஜிதுல் அக்ஸாவையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் அருள் பொருந்தியதாக ஆக்கினான் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மஸ்ஜிதுந் நபவியை நிர்மாணிப்பதற்கு முன்பே அல்லாஹ் பிரகடனம் செய்து விட்டான். முஸ்லிம்கள் மீது தொழுகை கடமையாக்கப்பட்டபோதும் மஸ்ஜிதுல் அக்ஸாவே அவர்களது கிப்லாவாக இருந்தது. மக்காவில் 3 வருடங்களும் மதீனாவில் 16 மாதங்களும் அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவை நோக்கியே தங்கள் முகங்களைத் திருப்ப வேண்டியிருந்தது. மேலும் ஒரு முஸ்லிம் புனித யாத்திரை மேற்கொள்ள முடியுமான மூன்று இறையில்லங்களுள் ஒன்றாகவும் இது அமைந்துள்ளது.

மஸ்ஜிதுல் அக்ஸா, நபிகளார் தமது இரவுப் பயணத்தின்போது சென்றடைந்த முதல் இடமாகும். இது பனூ இஸ்ரவேலர்கள் வெளியேற்றப்பட முன்னர் அல்லாஹ் அவர்களுக்கு வகுத்துக் கொடுத்திருந்த புனித பூமியில் அமைந்துள்ளது. எனவே, குர்ஆனில் வேறெங்கும் மீட்டப்படாத பனூ இஸ்ரவேலர்களின் வரலாற்றிலிருந்து ஒரு பகுதியை நபிகளாரின் இஸ்ரா பயணம் பற்றி கூறிய பின்பு விவரிக்கப்பட்டுள்ளது.

"நாம் பனூ இஸ்ரவேலர்களுக்கு தவ்றாத் வேதத்தில் நிச்சயமாக நீங்கள் பூமியில் இருமுறை குழப்பம் உண்டாக்குவீர்கள். ஆணவத்துடன் பெரும் அழிச்சாட்டியங்கள் செய்வீர்கள் என்று அறிவித்தோம். எனவே, அவ்விரண்டில் முதலாவது வாக்குறுதி நிறைவேறும் காலம் வந்தபோது உங்களுக்கு எதிராக போரில் கொடிய வலிமையுடைய நம் அடியார்களை ஏவி விட்டோம். அவர்கள் உங்கள் பொருட்களையும் தேடி அழித்து விட்டனர். இவ்வாறு முதல் வாக்குறுதி நிறைவேறியது. பின்னர் அவர்கள் மீது வெற்றியடையும் வாய்ப்பை உங்கள்பால் திருப்பினோம். ஏராளமான பொருட்களையும் புதல்வர்களையும் தந்து உங்களுக்கு உதவி செய்து உங்களைத் திரளான கூட்டத்தினராகவும் ஆக்கினோம். நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கே நன்மை செய்து கொள்கிறீர்கள். நீங்கள் தீமை செய்தால் அதுவும் உங்களுக்கேயாகும். உங்கள் முகங்களை சோகமடையச் செய்வதற்காகவும் பைத்துல் முகத்தஸில் முதல் முறையாக அவர்கள் நுழைந்தது போல் நுழைந்து அவர்கள் தாங்கள் கைப்பற்றிக் கொண்டவற்றை முற்றாக அழித்து விடுவதற்காகவும் எதிரிகளை இரண்டாம் வாக்குறுதி வரும்பொழுது நாம் அனுப்பினோம்." (17: 4-7)

இறை வழிகாட்டலைப் புறக்கணித்து கீழ்ப்படிய மறுத்த பனூ இஸ்ரவேலர்களை எச்சரிக்கும் விதத்தில்

**அல்குர்ஆன் விவரிக்கின்ற எந்தவொரு வரலாற்று நிகழ்விலும் படிப்பினை இல்லாமலில்லை. இதனூடாக முஸ்லிம் சமூகத்திற்கு குர்ஆன் பொறுப்பை உணர்த்தியதுடன், அத்தகைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போது இறைநியதி எக்காலத்திலும் மாறாத் தன்மையுடன் நிலைபெற்றுவிடும் என்பதையும் தெளிவுபடுத்தியது.**

மேற்கூறிய வசனங்கள் அமைந்துள்ளன. ஒரு தேசத்தின் அத்துமீறலும் அதன் அழிவும் ஒன்றுடன் ஒன்று நேரடியாகத் தொடர்புற்றிருப்பதை இது தெளிவுபடுத்துகிறது. அவர்கள் இருமுறை அழிவை சந்தித்தார்கள். ஏனெனில், அதற்கான காரணங்கள் மீட்டப்பட்டன. இன்றும் தொடரான அழிவுகளை அவர்கள் சந்திக்காமலிருக்க எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. குர்ஆன் இரு நிகழ்வுகளை மட்டும் சுட்டிக்காட்டினாலும் வரலாறு அத்தகைய ஆறு நிகழ்வுகளுக்கு சான்று பகர்வதாக மௌலானா அபூ முஹம்மத் அப்துல் ஹக் அவரது தஃப்ஸீரில் விவரித்துள்ளார். அவற்றைக் கீழே காண்போம்.

01. ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது மரணத்திற்குப் பின் பைத்துல் மக்திஸை ஆட்சி செய்த மன்னன் மதச்சார்பற்ற, அக்கிரமக்காரனாக மாறியபோது எகிப்தின் ஆட்சியாளன் அவனைத் தாக்கி அங்கிருந்த தங்கம், வெள்ளி முதலானவற்றைக் கைப்பற்றினான். ஆனால், அவன் மஸ்ஜிதையே அழிக்கவில்லை.

02. அந்நிகழ்வுக்கப்பால் சுமார் 400 வருடங்களின் பின், சில யூதர்கள் பைத்துல் மக்திஸை ஆக்கிரமித்து சிலை வணக்கத்தில் ஈடுபடவே, ஏனையோர் தங்களுக்கிடையில் பிளவுபட்டுக் கிடந்தனர். இது மஸ்ஜிதைத் தாக்க மற்றோர் எகிப்திய ஆட்சியாளரைத் தூண்டியது.

03. மேலும் சில ஆண்டுகளுக்குப் பின் பாபிலோன் அரசன், நேபுகாதிநேஸர் என்பவன் ஜெருஸலத்தை வெற்றி கொண்டு, செல்வங்களைக் கொள்ளையடித்து, பலரைக் கைதிகளாக ஆக்கினான். அவன் அங்கிருந்து செல்லும்போது முன்னைய அரசனின் குடும்பத்தாரில் ஒருவரை அவனது பிரதிநிதியாக நியமித்துவிட்டுச் சென்றான்.

04. சிலை வணக்கத்திலும் அக்கிரமத்திலும் ஈடுபட்ட இந்த புதிய அரசன் நேபுகாத்நேஸர் என்பவனுக்கு எதிராக செயற்பட்டபோது அவன் மீண்டும் வந்து மனிதர்களைக் கொலை செய்து, சொத்து, செல்வங்களை அழித்து நகரத்தை தீ மூட்டினான். பின்னர் யூதர்கள் பாபிலோனுக்கு துரத்தியடிக்கப்பட்டு எழுபது வருடங்களாக சிறுமைப்பட்டுக் கிடந்தனர். அவ்வேளையில், பாபிலோனைத் தாக்கி வெற்றி கொண்ட ஈரான் அரசர் யூதர்களுக்கு கருணை காட்டி அவர்களை சிரியாவுக்கு வரவழைத்து, குடிபெயரச் செய்தார். யூதர்கள் தமது பாவங்களிலிருந்து மீண்டும் ஈரான் மன்னரின் அனுசரணையுடன் மஸ்ஜிதுல் அக்ஸாவை முன்பிருந்தது போல் நிர்மாணித்தனர்.

5. யூதர்கள் சுபிட்சமான வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது அவர்கள் மறந்துவிட்ட முதலாவது அம்சம் தங்களது கடந்தகால வரலாறாகும். அவர்கள் முன்பு போலவே அக்கிரமங்களுக்குத் திரும்பி விட்டனர்.

ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது பிறப்புக்கு 170 வருடங்களுக்கு முன்பு அண்தாக்கியா மன்னன் 40 ஆயிரம் யூதர்களைக் கொலை செய்து மேலும் 40 ஆயிரம் பேரை கைதிகளாக சிறைப் பிடித்து மஸ்ஜிதின் புனிதத் தன்மையை சீர்குலைத்தான். அதன் பிறகு மஸ்ஜிதுல் அக்ஸா ரோமாபுரி மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

6. ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) விண்ணை நோக்கி உயர்த்தப்பட்டு 40 வருடங்களின் பின்னர் யூதர்கள் ரோமாபுரி ஆட்சியாளர்களுக்கெதிராக செயற்பட முற்பட்டதும் ரோமர்கள் புனித நகரத்தையும் மஸ்ஜிதையும் மீண்டும் அழித்தனர். அன்றிலிருந்து உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலம் வரை மஸ்ஜிதுல் அக்ஸா பாழடைந்தே இருந்தது.

(தஃப்ஸீர் ஹக்கானீ)

இப்போது இவற்றுள் எந்த இரண்டு நிகழ்வுகளை அல்குர்ஆன் குறிப்பிடுகிறது என்பதை சரியாகத் தீர்மானிப்பது சிரமமாக உள்ளது. ஆயினும், யூதர்கள் அக்கிரமம் புரிந்து அதனூடாக தண்டிக்கப்பட்டமை 4வது மற்றும் 6வது நிகழ்வுகளுடன் பொருந்திப் போகின்றது. இமாம் குர்துபி (ரஹிமஹுல்லாஹ்) அவரது தஃப்ஸீரில் மேற்கோள் காட்டியுள்ள ஹுதைஃபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களால் அறிவிக்கப்படும் ஒரு நீண்ட ஹதீஸும் இதற்குச் சான்றாக அமைந்துள்ளது.

(மஆரிஃபுல் குர்ஆன்)


அல்குர்ஆன் விவரிக்கின்ற எந்தவொரு வரலாற்று நிகழ்விலும் படிப்பினை இல்லாமலில்லை. இதனூடாக முஸ்லிம் சமூகத்திற்கு குர்ஆன் பொறுப்பை உணர்த்தியதுடன், அத்தகைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போது இறைநியதி எக்காலத்திலும் மாறாத் தன்மையுடன் நிலைபெற்றுவிடும் என்பதையும் தெளிவுபடுத்தியது. அஷ்ஷெய்க் முஹம்மத் அல்கஸ்ஸாலி (ரஹிமஹுல்லால்) தமது பிக்ஹுஸ் ஸீரா எனும் நூலில் எழுதுகிறார்.

''ஜெருஸலம் வஹியின் மையத் தலமாகவும் உலகெங்கும் ஒளிவீசும் கலங்கரை விளக்கமாகவும் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களின் தலைநகரமாகவும் விளங்கியது. உலகை வழிநடத்தும் தலைமைத்துவம் பனூஇஸ்ரவேலர்களிடமிருந்து பறிக்கப்பட்டு இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சந்ததிகளுக்கு கைமாற்றம் செய்யப்பட்டது. எனவே, ஒரு புதிய சமூகம் மலைகள் சுமக்க மறுத்த பொறுப்பை சுமக்கத் தயாரானது.''

மக்கா மற்றும் மதீனாவுக்கு அடுத்த நிலையில் ஜெரூஸலம் புனிதம் நிறைந்த ஓர் இடமாக கருதப்படுகிறது. இவ்வாறு மஸ்ஜிதுல் அக்ஸா முஸ்லிம்களின் உள்ளங்களில் ஓர் உயர்ந்த அந்தஸ்த்தைப் பெற வேண்டும் என்றும் அவர்கள் எதற்காகவும் அதனை விட்டுக் கொடுக்கக் கூடாது என்றும் அல்லாஹ் வலியுறுத்த விரும்பியுள்ளான். (56ஆம் பக்கம் பார்க்க)

# வருகிறது ரமழான்... வரவேற்க நீங்கள் தயாரா?

**குடும்பத்தை, மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து, நாடு கடந்து, கண் விழித்து, பசி, தாகம் மறந்து என்று உலக இலாபத்தில் குறியாய் இருக்கின்றோமே! பருவ காலம் வருவதற்கு முன்பே திட்டமிட்டு அதிக இலாபமீட்ட முயற்சிக்கின்றோமே! முஃமின்களின் பருவ காலமாகிய ரமழானில் மறுமை இலாபத்தை அடைவது குறித்து இப்போதிருந்தே திட்ட மிட்டு தயாராகுவோமா?**



ஜெம்ஸித் அஸீஸ்

ஷஃபானில் காலடி எடுத்து வைத்த கையோடு முஃமின்களின் அறுவடைக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஈமானிய சொந்தங்களே!

ரஜப் விதைக்கின்ற மாதம். விதைத் திருப்பீர்கள். ஷஃபான். இது முளை விட்டிருக்கும் அந்தப் பயிருக்கு நீரூற்றுகின்ற மாதம். இப்போது நீரூற்றிக் கொண்டிருப்பீர்கள். வரவிருக்கிறது ரமழான். அதில் அறுவடை செய்வீர்கள் என்று நம்புகிறோம், இன்ஷா அல்லாஹ்.

இப்படி ரமழானுக்கத் தயாராகி ரமழான் பருவ காலத்தில் உச்ச கட்ட அறுவடையை மேற்கொள்ளத் துடிக்கும் உங்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! உங்களது எண்ணத்துக்கு மகத்தான கூலியை வழங்குவானாக!

ரமழான் வந்தால் நோன்பு நோற்க வேண்டும். அது எமது கடமையதானே என்ற உணர்வோடு இருப்பவர்களே,

நோன்புக் களைப்பு தெரியாமலிருக்க பகல் பொழுதுகளில் நன்றாகத் தூங்கி இரவு நேரங்களில் பொழுதுபோக்கு சாதனங்களோடு இரவைக் கழிக்கலாம் என்ற எண்ணத்தோடு இருப்பவர்களே,

ரமழான் அருள் நிறைந்தது. அதற்காக தயாராக வேண்டுமல்லவா? ரமழானை வரவேற்க இன்றே தயாராகுவோமா?

ஸலபுஸ் ஸாலிஹீன்கள் (இஸ்லாத்தை அதன் தூய வடிவில் பின்பற்றிய எமது முன்னோர்) ரமழானுக்கு முந்திய ஆறு மாதங்களில், ரமழானை அடைந்து அதனை அனுபவிக்கின்ற அருட்பேறை வழங்குமாறு வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள். அவர்கள் ரமழானை அடைந்து விட்டால் அதனை உச்ச நிலையில் பயன்படுத்துவார்கள். பின்னர் அடுத்த ஆறு மாதங்களிலும் ரமழானில் செய்த நற்காரியங்களை ஏற்று அங்கீகரிக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள். அவர்கள் முழு வருடத்தையும் ரமழானிய வசந்தத்திலேயே கழித்திருக்கிறார்கள் என்றால் எமக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்க வேண்டாமா?

"யார் ரமழானைப் பெற்று அதில் பாவமன்னிப்பைப் பெறவில்லையோ அவர் நாசமாகட்டும்."

இது மலக்குகளின் தலைவர் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பதுஆ. இதற்கு நபிமார்களுள் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மிம்பர் மேடையிலிருந்து ஆமீன் சொல்லியிருக்கிறார்கள்.

பயங்கரமானதொரு சாபம். இது எம்மை வந்துவிடக் கூடாது. நஊது பில்லாஹி மின்ஹா.

ரமழானின் சிறப்புகள் ஏராளம். அள்ள அள்ளக் குறையாத அருள்களைச் சுமந்து வரும் ரமழானை வரவேற்போம், வாருங்கள்.

அல்குர்ஆன் அருளப் பட்ட மாதம் என்பதனால் ரமழானுக்கு தனிச் சிறப்பு உண்டு. எனவே, எதிர்வரும் ரமழானில் அல்குர்ஆனுடனான உறவை வலுப்படுத்துவோம்.

ரமழான் மாதம் வந்து விட்டால் உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அல்குர்ஆனோடு இரண்டறக் கலந்து விடுவார்கள். ஒவ்வொரு நாளும் முழுக் குர்ஆனையும் ஓதி 30 தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்து விடுவார்கள்.

தனது ஆயுள் காலம் முழுவதையும் ஹதீஸ் துறையிலேயே செலவழித்துக் கொண்டிருந்த புகழ்பெற்ற ஹதீஸ்துறை அறிஞர் இமாம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி (ரஹிமஹுல் லாஹ்) அவர்கள் ரமழான் மாதம் வந்து விட்டால் ஹதீஸ் துறை சார்ந்த பணிகளை ஒருபக்கம் வைத்து விட்டு அல்குர்ஆனின்பால் முழுமையாக திரும்பி விடுவார்களாம்.

எமது ஸலபுகள் இவ்வாறு ரமழான் மாதத்தை குர்ஆனிய மாதமாக நோக்கினார்கள். எனவே, நாமும் வரவிருக்கும் ரமழானில் அல்குர்ஆனை இரவிலும் பகலிலும் அதிகமதிகம் ஓதுவோம்; அதனை விளங்குவோம்; அதன் வழி நடப்போம்; அதன்பால் அழைப்போம்.

❖ ரமழானில் ஒரு நாளைக்கு இரு ஜுஸ்களை ஓதுவதென இப்போதே முடிவெடுங்கள்.

ஐந்து நேரத் தொழுகையின் பின் சுமார் 15 அல்லது 20 நிமிடங்கள் என அல்குர்ஆனை ஓதுவதற்கு முயற்சி எடுத்துப் பாருங்கள். 30 நாட்களில் இலகுவாக இரு ஜுஸ்களை ஓதி முடித்து விடலாம்.

❖ Smart Phone பயன்படுத்துபவர்கள் அல்குர்ஆன், தப்ஸீர் Application களை இன்றே பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் அல்குர்ஆனோடு வாழ முடியும்.

❖ ஒரு நாளைக்கு ஒரு சிறிய ஸூராவுக்கான விளக்கவுரையைப் படித்துப் பாருங்கள். ரமழான் முடிந்த கையோடு 30 சிறிய ஸூராக்களுக்கான விளக்கத்தை அறிந்த பாக்கியசலாலிகளாக நீங்கள் மிளிர்வீர்கள்.

❖ குறைந்தபட்சம் ஸூரதுல் பாத்திஹாவுக்கான விளக்கவுரையை, அல்ஹம்துலில்லாஹ், அர்ரஹ்மான், அர்ரஹீம் எனும் பதங்களின் அர்த்தத்தை ஆழமாகவும் உணர்வுபூர்வமாகவும் கற்றுக் கொள்வதற்கு உங்களால் நேரம் ஒதுக்க முடியுமென்றிருந்தால், நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கு அதீத பிரயத்தனம் எடுப்பீர்கள்.

❖ குறைந்தபட்சம் 05 சிறிய ஸூராக்களை மனனமிட முயற்சித்துப் பாருங்கள். உங்கள் உள்ளங்களில் புத்தொளி பாய்ச்சப்படுவதை உணர்வீர்கள்.

❖ எனது பண்புநலன்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற உறுதியுடனும் அவாவுடனும் ஸூரா லுக்மான், ஸூரதுல் புர்கான் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புக்களை உன்னிப்பாக வாசித்து அவற்றுக்கான விளக்கத்தையும் படித்து வாழ்வில் அமுல்படுத்திப் பாருங்கள். ரமழான் முடிந்த கையோடு நீங்கள் உயர் ஒழுக்கப் பண்பாடுடையவராய் ஜொலிப்பீர்கள். எல்லோரது கவனமும் உங்கள் பக்கம் திரும்பும், இன்ஷா அல்லாஹ்.

பாவ மன்னிப்பின் வாயில்கள் அகலத் திறந்து வைக்கப்படுகின்ற மாதம் ரமழான். நாம் எமது உடல் உறுப்புக்களால் செய்த அத்தனை பாவங்களிலிருந்தும் விடுபட்டு ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு ரமழான்.

இரவுத் தொழுகையின் பின் 15 நிமிடங்கள் தனித்திருந்து சுயவிசாரணை செய்து பாருங்கள். பாவங்களை நினைத்து அழுது கேளுங்கள். இருகரமேந்தி மன்றாடுங்கள். பாவங்களின்பால் மீளுவதில்லை என்று உறுதிபூணுங்கள். மன்னிக்க காத்திருக்கின்றான் அல்லாஹ்.

❖ பாவம் செய்யத் தூண்டும் காரணிகளை இப்போதிருந்தே பட்டியலிட்டு அவற்றிலிருந்து மீள்வதற்கு என்ன வழி என்பதை சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள். அதற்கான பரிகாரத்தைத் தேடுங்கள். முயற்சிக்கு கூலி தருபவன் அல்லாஹ்.

ரமழான் ஈகையின் மாதம்; கொடையின் மாதம். பசியின் கொடுமையை, வறுமையின் கோரப் பிடியை உணர்த்துகிறது நோன்பு.

❖ உங்களது குடும்பத்தில் வறுமையின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டு திண்டாடும் மூவருக்கு, ஆபத்தான நோய்களோடு வைத்தியசாலைகளில் முடங்கிக் கிடக்கும் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் இருவருக்கு உங்களால் முடிந்த உதவியைச் செய்வதென முடிவெடுங்கள்.

❖ உங்களது ஊரிலுள்ள அனாதைகள், அநாதரவற்றவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுங்கள். அல்லது வசதி படைத்தவர்களிடம் சென்று இத்தகையோருக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுங்கள். அவர்களும் உங்களுக்காக பிரார்த்திப்பார்கள்.

❖ குறைந்தபட்சம் உங்களது ஒன்று அல்லது இரண்டு மேலதிக தேவைகளை தியாகம் செய்து அல்லது பிற்படுத்தி அத்தியவசிய தேவையுடைய இருவருக்கு அந்தப் பணத்தைக் கொடுத்துப் பாருங்கள். அல்லாஹ்வின் அருள் உங்களது வீட்டுக் கதவைத் தட்டும்.

❖ ரமழானில் ஸதகா செய்து நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்ளும் நோக்கில் இன்றிலிருந்தே நாளாந்தம் சிறு தொகைப் பணத்தை சேமித்து வாருங்கள்.

❖ ஸகாத் கடமையானவர்கள் ஸகாத்தை கணக்கிட்டு முறைப்படி கொடுத்து உங்களது சொத்து, செல்வங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள்.

மிகவும் எளிமையாக வாழ்ந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ரமழான் மாதத்தில் சுழன்றடிக்கும் காற்றை விட மிக வேகமாக ஸதகா செய்பவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஆழ்மனதில் ஆழமாகப் பதித்து ஸதகா செய்வதற்காக இப்போதே சேமிக்கலாமே!

(44ஆம் பக்கம் பார்க்க)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் எனக்கு ஒரே ஒரு (ஹர்ப்) முறையிலே ஓதிக் காண்பித்தார்கள். நான் மீண்டும் மீண்டும் பல முறையில் ஓதிக் காட்டுமாறு கேட்டுக் கொண்டே இருந்தேன். அவர் அதை ஏழு முறைப்படி ஓதிக் காண்பித்தார்கள்."

(ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்)

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்.

நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் ஹிஷாம் பின் ஹகீம் ஸூரதுல் புர்கான் அத்தியாயத்தை ஓதுவதை செவிமடுத்தேன். அவர் அதை பல முறைகளில் ஓதினார். எனக்கு நபியவர்கள் அவ்வாறு ஓதிக் காண்பிக்கவில்லை. அவர் தொழுது கொண்டிருக்கும்போதே அவரைப் பிடித்து இழுப்பதற்கு நினைத்து விட்டு அவர் தொழுகையை முடிக்கும் வரை நான் பொறுமையாக இருந்தேன். தொழுது முடிந்ததும் அவரிடம் "நீர் ஓதிய அத்தியாயத்தை உமக்கு யார் ஓதிக் காண்பித்தது" எனக் கேட்டேன். அதற்கு அவர் "எனக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்தான் ஓதிக் காண்பித்தார்கள்" என்றார். அதற்கு நான், "நீர் பொய் சொல்கிறீர். ஏனெனில், நபியவர்கள் எனக்கு வேறு விதமாக ஓதிக் காண்பித்தார்கள்" எனக் கூறி அவரை இழுத்துக் கொண்டு நபியவர்களிடம் சென்று, "நீங்கள் எனக்கு ஓதிக் காண்பித்த முறையல்லாத வேறு முறையில் இவர் குர்ஆனை ஓதுகிறார்" என்றேன். அதற்கு நபியவர்கள் "உமரே அவரை விடுங்கள். ஹிஷாம் நீங்கள் இப்போது குர்ஆனை ஓதுங்கள்" என்றார்கள். அவர் எவ்வாறு ஓதினாரோ அதே முறைப்படி நபியவர்களிடம் ஓதிக் காண்பித்தார். அப்போது நபியவர்கள் "குர்ஆன் இவ்வாறுதான் இறக்கி அருளப்பட்டது" என்றார்கள். பின்னர் "இப்போது உமரே நீங்கள் ஓதுங்கள்" என என்னிடம் வேண்டிக் கொண்டார்கள் நபியவர்கள். நான் நபியவர்கள் கற்றுத் தந்தவாறு ஓதினேன். அப்போது நபியவர்கள் "குர்ஆன் இவ்வாறுதான் இறக்கி அருளப்பட்டது" என்றார்கள். பின்னர் "நிச்சயமாக குர்ஆன் ஏழு முறைப்படி ஓதும் வகையில் இறக்கி அருளப்பட்டிருக்கிறது. எது உங்களுக்கு இலகுவாக இருக்கிறதோ அந்த முறைப்படி ஓதுங்கள்" என்றார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸ்களின் மூலம் குர்ஆனை ஏழு முறைப்படி ஓதலாம் என்பதை அறிய முடிகிறது. 'அல்அஹ்ருப்' என்ற அரபு வார்த்தை ஏழு விதங்கள் என்பதை குறித்து நிற்கிறது. எனினும், அந்த ஏழு விதங்களும் எவை என்பது தொடர்பில் ஹதீஸ் துறை அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமை நிலவுகின்றது. இந்த ஏழு விதங்கள் குறித்து இமாம் அபுல் பழ்ல் அர்ராஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறும் விளக்கத்தை பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவை வருமாறு:

01. பெயர்ச் சொற்களில் இடம்பெறும் ஒருமை, இருமை, பன்மை, ஆண்பால், பெண்பால் என்ற வித்தியாசம்.

உதாரணம்: طَعَامُ مِسْكِينٍ என்பது طَعَامُ مَسَاكِينَ என ஓதப்பட்டுள்ளது. (2: 184)

இங்கு 'மிஸ்கீன்' எனும் ஒருமை 'மஸாகீன்' என பன்மையாக ஓதப்பட்டுள்ளது.

02. வினைச் சொற்களில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காம் என்ற வித்தியாசம்.

அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் ரீ.எம். முபாரிஸ் (ரஷாதி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை

# ஸப்உ கிராஅத்

## ஏழு கிராஅத் என்றால் என்ன?

உதாரணம்: فَمَنْ تَطَوَّعَ خَيْرًا என்பது فَمَنْ يَطَّوَّعْ خَيْرًا என ஓதப்பட்டுள்ளது. (2: 184)

இங்கு تَطَوَّعَ என்ற இறந்த கால வினைச்சொல் நிகழ்கால வினைச்சொல்லாக يَطَّوَّعْ உச்சரிக்கப்பட்டுள்ளது.

03. குறியீடுகளில் பத்ஹா, கஸ்ரா, ழும்மா போன்றவற்றில் ஏற்படுகின்ற வித்தியாசம்.

உதாரணம்: وَلَا تُسْئَلُ عَنْ أَصْحَابِ الْجَحِيمِ என்பது وَلَا تَسْئَلْ عَنْ أَصْحَابِ الْجَحِيمِ ஓதப்பட்டுள்ளது. (2: 119)

இங்கு تُسْئَلُ என்ற சொல் تَسْئَلْ என்று வேறு குறியீடுகள் பயன்படுத்தப்பட்டும் ஓதப்பட்டுள்ளது.

04. எழுத்துக்களில் கூடுதல், குறைவு என்ற வித்தியாசம்.

உதாரணம்: وَسَارِعُوٓا۟ إِلَىٰ مَغْفِرَةٍ என்பது سَارِعُوٓا۟ إِلَىٰ مَغْفِرَةٍ என ஓதப்பட்டுள்ளது. (3: 133)

இங்குوَسَارِعُوٓا۟ என்ற சொல் سَارِعُوٓا۟ என்று வாவ் என்ற எழுத்து குறைக்கப்பட்டு ஓதப்பட்டுள்ளது.

*05.* சொற்களை முற்படுத்துதல், பிற்படுத்துதல் போன்றவற்றில் ஏற்படும் வித்தியாசம்.

உதாரணம்: وَقَاتَلُوا۟ وَقُتِلُوا۟ என்பது وَقُتِلُوا۟ وَقَاتَلُوا۟ என ஓதப்பட்டுள்ளது. (3: 195)

இங்கு وَقَاتَلُوا۟ என்ற சொல் பிற்படுத்தப்பட்டும் وَقُتِلُوا۟ என்ற சொல் பிற்படுத்தப்பட்டும் வந்துள்ளது.

*06.* ஒரு (ஹர்பை) எழுத்தை இன்னொரு எழுத்தின் இடத்தில் வைத்து பயன்படுத்துதல்.

உதாரணம்: هُنَالِكَ تَبْلُوا۟ كُلُّ نَفْسٍ என்பது هُنَالِكَ تَتْلُوا۟ كُلُّ نَفْسٍ என ஓதப்பட்டுள்ளது. (10: 30)

இங்கு تَبْلُوا۟ என்ற வார்த்தையில் تَتْلُوا۟ என்றும் ب உடைய இடத்தில் ت வைத்து ஓதப்பட்டுள்ளது.

*07.* மொழிவழக்குகளில் ஏற்படுகின்ற வித்தியாசம். அதாவது ஒவ்வோர் அரேபிய கோத்திரமும் பயன்படுத்துகின்ற சொற் பிரயோகங்கள், அவர்களது மொழிவழக்கில் இருக்கின்ற வித்தியாசமான உச்சரிப்புக்கள் போன்றவை.

உதாரணம்: بُيُوتٌ என்பது بِيُوتٌ சில கோத்திரத்தினரின் மொழிவழக்கில் 'பியூத்' என்ற சொல் 'பியூத்' என்பதாக மொழியப்படுகிறது.

இவ்வாறு ஏழு முறைகளில் ஓதும் வகையில் குர்ஆன் இறக்கப்படுவதற்கான காரணம் என்னவென்றால், அரேபியர்கள் பல்வேறு கோத்திரங்களாகவும் குழுக்களாகவும் இருந்தனர். இதனால் ஒவ்வொரு கோத்திரமும் தமக்கென்று ஒரு மொழிவழக்கை கொண்டிருந்தது. இதனால் அவர்கள் தமது மொழிவழக்கில் பழகி இருந்ததனால், அதை மாற்றிக் கொள்வதில் பாரிய சிரமும் கஷ்டமும் இருந்தது. அவர்கள் அரபு மொழியை பிரதான மொழியாக கொண்டிருந்தாலும், அதில் பல்வேறு மொழிப் பிரயோகங்களையும் கருத்தில் கொண்டே அல்லாஹுத் தஆலா இவ்வாறு ஏழு விதமாக ஓதும் வகையில் குர்ஆனை இறக்கி வைத்தான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உம்மத்தில் எவருக்கும் குர்ஆனை ஓதுவதில் சிரமம் ஏற்படக் கூடாதென்பதற்காகவே அல்லாஹ் இந்த சலுகையை வழஹ்கியிருக்கின்றான். இதனால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் அவர்களது மொழிவழக்கிலே குர்ஆனை ஓதிக் காண்பித்தார்கள்.

**ஸப்உ கிராத்- ஸப்அது அஹ்ருப்**

இவை இரண்டும் வெவ்வேறுபட்டது என்பதை முதலில் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் الأحرف السبعة என்பது ஏழு முறைகள் அல்லது ஏழு விதங்கள் என்பதை குறிக்கும் القراءة السبع என்பது ஓதும் முறை ஏழுகளைக் குறிக்கும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலப் பகுதியில் ஒவ்வொரு கோத்திரமும் தமக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஓதிக் காண்பித்தவாறே அல்குர்ஆனை ஏழு விதங்களில் ஓதி வந்தனர். பின்னர் உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது ஆட்சிக் காலத்தில் மக்கள் இதனை பிழையாகப் பயன்படுத்த நேரிட்டபொழுது உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒரு விதமான ஓதலைத் தவிர அனைத்து விதங்களிலும் எழுதப்பட்டிருந்த ஏடுகளை எரித்து விட்டார்கள் என்ற செய்தி ஸஹீஹுல் புகாரியில் பதிவாகியிருக்கிறது. அப்படி என்றால், இன்று ஏழு கிராஅத் முறைப்படி அல்குர்ஆன் ஓதப்படுகிறதே. அது எப்படி என்று பலர் கேட்கலாம்.

உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களினால் தொகுக்கப்பட்ட முஸ்ஹபில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களில் புள்ளிகளோ குறியீடுகளோ இருக்கவில்லை. இதனால் வெவ்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட குர்ஆனை மக்கள் அவ்வப் பகுதிகளிலுள்ள பிரபல காரிமார்களை வைத்தே ஓதக் கற்றுக் கொண்டனர்.

இதன் விளைவாக ஏழு பிரபல காரிமார்கள் இவ்வாறு ஏழு ஓதல் முறைகளைக் கற்றுக் கொடுத்தனர். இதனாலே ஏழு கிராஅத் எனப்படுகின்றது. இவை அனைத்து கிராஅத்களும் உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் முஸ்ஹபில் உள்ளவாறே ஓதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது என்ற உண்மையை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.


அனைத்து காரிமார்களும் தமது ஆசிரியர்கள், அவர்களின் ஆசிரியர்கள் என்று ஒவ்வொருவரும் தமக்கு மேல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வரை இஸ்னாத்களை உடையவர்களாகவே இருக்கின்றனர். எவ்வாறு ஒரு ஹதீஸுக்கு இஸ்னாத் (அறிவிப்பாளர்) வரிசை இருக்கிறதோ அவ்வாறே ஒவ்வொரு கிராஅத்திற்கும் இஸ்னாத் வரிசைகள் காணப்படுகின்றன.

(தொடரும், இன்ஷா அல்லாஹ்)

**உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

**தொடர்புகளுக்கு:**

**0772992220**



அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A விரிவுரையாளர் - ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா கலாபீடம்

# அநீதி

**அற்பமான உலக ஆசையின் அடியாக பிறரது பணம், நிலம், வீடு முதலானவற்றை தந்திரமாக அபகரித்துக் கொள்ளும் மனிதர்கள், இவை மறுமையில் நெருப்பாக மாற்றப்பட்டு வேதனை செய்யப்படுவர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.**

"முப்லிஸ் எனப்படும் வங்குரோத்து நிலை அடைந்தவர் யாரெனத் தெரியுமா?" என தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வினவினார்கள். "உலக சொத்துக்களான தீனார், திர்ஹம்களைப் பெறாதவன்தான்" என ஸஹாபாக்கள் பதில் அளித்தனர். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "மறுமையில் ஒருவன் தொழுகை, நோன்பு, ஸகாத் போன்ற நற்கிரியைகளோடு வருவான். ஆனால், அவன் பிற மனிதர்களை ஏசி, அவதூறு கூறி, பொருட்களைச் சூறையாடி, அடித்து, இரத்தம் சிந்தி எனப் பல குற்றங்களோடு வந்து நிற்பான். எனவே, இவனது நன்மைகளிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, நன்மைகள் தீர்ந்து போகும் போது பிறரின் தீமைகள் இவன் மீது சுமத்தப்படும். இறுதியில் அவன் நரகில் எறியப்படுவான்." (முஸ்லிம்)

எமது வாழ்வில் நாம் இழைக்கும் அநியாயங்களின் பாரதூரத்தை, முடிவில்லாத நஷ்டத்தை இந்நபிமொழி விளக்குகின்றது. உலக நஷ்டங்களை ஈடுசெய்ய முடியும். ஆனால், மறுமையின் கைசேதம் நிரந்தர அழிவை ஏற்படுத்திவிடும்.

அநியாயங்கள், அடக்குமுறைகள், துன்புறுத்தல்கள் சமூகத்தில் பரவலாக நடப்பதைக் காண்கிறோம். வீட்டில் மனைவி, கணவன், பிள்ளைகள் எனத் துவங்கி தொழிலாளர்கள், மாணவர்கள், உறவினர்கள், பெற்றோர், குடிமக்கள், வயோதிபர்கள், ஏழைகள், பலவீனர்கள் என இந்த வட்டம் விரிந்து செல்கின்றது. சிலர் இதனை விளங்கிய நிலையில் சுய இலாபங்களுக்காக பிறரைத் துன்புறுத்துகிறார்கள். இன்னும் சிலர் தவறைப் புரிந்து கொள்ளாமலே செய்து வருகிறார்கள்.

வாய் பேச முடியாத கால்நடைகளுக்கு அநியாயம் இழைத்தவர்கள்கூட நரகில் துன்புறுத்தப்படும் பயங்கரத்தை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

சிலபோது பிறரது உரிமைகளில் நாம் கை வைக்குமிடங்கள் அற்பமானவை, சிறியவை என நாம் சிந்திப்பதுண்டு.

ஒரு தடவை யுத்த களத்தில் உயிர் நீத்த சிலர் குறித்து ஸஹாபாக்கள் கதைத்துக் கொண்டார்கள். இன்ன இன்ன மனிதர்கள் ஷஹீத்கள் என அவர்கள் பேசிக் கொண்டனர். ஒரு மனிதர் குறித்து ஷஹீத் எனக் கூறியதைச் செவியுற்ற தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "கனீமத்துக்குரிய ஓர் ஆடையை எடுத்துக் கொண்ட காரணத்தினால் நான் அவரை நரகில் கண்டேன்" எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், "யுத்தத்தில் ஷஹாதாவை அடைவது அனைத்துப் பாவங்களையும் மன்னிக்கும். ஆனால் கடனைத் தவிர" எனக் கூறினார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். (முஸ்லிம்)

திருப்பிக் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்திலேயே கடன் வாங்குகின்ற பலரை இன்று சமூகத்தில் காண முடிகிறது.

அற்பமான உலக ஆசையின் அடியாக பிறரது பணம், நிலம், வீடு முதலானவற்றை தந்திரமாக அபகரித்துக் கொள்ளும் மனிதர்கள், இவை மறுமையில் நெருப்பாக மாற்றப்பட்டு வேதனை செய்யப்படுவர் என்பதை நினை

விற் கொள்ள வேண்டும்.

ஒருவர் அடுத்தவரின் உயிர், உடைமைகளுக்கு தீங்கி ழைக்க முடியாது என்பது போலவே பிறரது மானத்திலும் கைவைக்க முடியாது. எனவே, பிறர் தலை குனிய நாம் காரணமாக அமைந்து விட்டால் அல்லது பிறரைக் கேலி செய்து, கிண்டல்செய்து, புறம் பேசி அவமானப்படுத் தினால் அவை மறுமையில் எமது கைசேதத்திற்கு காரணமாகிவிடும்.


அநியாயமிழைக்கப்பட்ட ஒருவர் மனம் நொந்து அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால் அதனை அல்லாஹ் மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறான். இத்தகைய பதுவாக் கள் எமது வாழ்வில் ஏற்படும் சோதனைகளுக்கும் பின்ன ணிக் காரணமாக இருக்கலாம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

தமது வாதத் திறமையினாலும் அதிகாரப் பலத்தினா லும் பிறரது உரிமைகளை அநீதியாக பறித்துக் கொள் பவர்கள் குறித்து விளக்கிய தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், அத்தகையவர்கள் நரக நெருப்பிலிருந்து ஒரு பகுதியையே சுமந்து கொள்வதாக கூறினார்கள்.

எம்மோடு மிகவும் நெருங்கி வாழக்கூடிய மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், அயலவர்கள் முதலானோர் பலபோது நமது அடக்குமுறைகளுக்கும் அநியாயங் களுக்கும் ஆளாகிறார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஒரு முக்கிய வழிகாட்டல் கவ னத்தில் கொள்ளப்பட வேண்டும். மறுமையில் நாம் அல் லாஹ்வைச் சந்திக்கின்றபோது அவன் அணுவும் பிசகா மல் நீதி வழங்கக் காத்திருக்கிறான். நமது அநியாயங்கள் அப்போது அம்பலமாகும். தீனார், திர்ஹம் எதுவுமின்றி நன்மை, தீமைகள் மாத்திரமே அன்று விலை பொருளாக இருக்கும். எனவே, இத்தகைய ஒரு நாளைச் சந்திப்பதற்கு முன்னர் இவ்வுலகிலேயே அநியாயங்களுக்கான பரிகா ரங்களைத் தேடிக் கொண்டு மறுமைப் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள வல்லவன் துணை செய்வானாக!


## வெளிவந்து விட்டது




**விலை: 250/=**

### இஸ்லாமிய ஷரீஆ சட்டம் அவசியமும் சாத்தியமும்

வெளியீடு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்

இஸ்லாமிய ஷரீஆ பற்றிய பொதுவான அறிவு உண்மையில் முஸ்லிம்கள் அனைவருக்கும் அவசியமானது. ஷரீஆ பற்றிய விமர்சனங்கள் நிறைந்த இக்காலப்பிரிவில் இத்தகைய அறிவு இல்லாதபோது இஸ்லாம் பற்றிய நம்பிக்கையையே அது அசைத்துவிடக்கூடும் அல்லது ஒரு தடுமாற்றத்தையும் சிந்தனைக் குழப்பத்தையும் உருவாக்கிவிடக்கூடும். எனவே, சாதாரண அறிவுத் தரம் கொண்டோரும் சிறுபான்மை முஸ்லிம்களும் கூட இத்தகைய அறிவைப் பெற்றி ருப்பது அவசியமாகின்றது. அந்த அறிவை இந்நூல் கொடுக்கும் என நம்பலாம்.

இந்த நூல் ஷரீஆ என்றால் என்ன? என்பதிலிருந்து ஆரம்பித்து அதன் ஒவ்வொரு பகுதி யையும் விளக்கியுள்ளது. இவ்வாறு ஷரீஆ பற்றியதொரு முழுமையான விளக்கத்தைத் தருவதில் இந்நூல் வெற்றி காண்கிறது. ஷரீஆ என்பது அல்குர்ஆனும், ஸுன்னாவும் இயற்றும சட்டங்கள் மட்டுமல்ல, அல்குர்ஆன், ஸுன்னா வகுத்த விதிகளின் கீழ் நின்று மனிதன் ஆக்கும் சட்டங்களும் ஷரீஆவில் உள்ளதே என விளக்கும் இந்நூல், ஷரீஆ கால சூழலுக்கேற்ப எவ்வாறு நெகிழ்ந்து கொடுக்கிறது என்பதையும் உணர்த்துகின்றது. இந்தவகையில் ஷரீஆவைப் பொறுத்தவரையில் சட்ட மூலாதாரங்கள் என்பவை அல்குர்ஆன், ஸுன்னா மட்டுமல்ல. மனித ஆய்வு முயற்சியைக் காட்டும் இன்னும் பல சட்ட மூலாதாரங்களையும் அது கொண்டுள்ளது என்பதை இந்நூல் ஆரம்பத்திலேயே தருகின்றது.


இவ்வாறு இந்த நூலை மொத்தமாக நோக்குகையில் தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் ஷரீஆ பற்றிய தெளிவான ஒரு நூல் பூரண அமைப்பில் இல்லை என்ற இடைவெளியை இது நிரப்புகின்றது. அத்தோடு இஸ்லாம் பற்றியதொரு பரந்த அறிவை இந்நூல் கொடுக்கின்றது. இஸ்லாத்தின் நடைமுறை வாழ்வு பற்றிய ஒரு நம்பிக்கையையும் இந்நூல் கொடுக்கின்றது. இந்தவகையில் இந்நூ லின் ஆசிரியர்கள் மிகவும் பாராட்டத்தக்கவர்கள். அத்தோடு ஷரீஆ பற்றிய நூல்களுக்கு இந்நூல் ஓர் ஆரம்பமாக அமையமுடியும்.

உஸ்தாத் எம்.ஏ.எம். மன்சூர் (நளீமி)

**ISLAMIC BOOK HOUSE**

77, Dematagoda Road, Colombo-09 T.P. 011 2684851, Fax: 011 2688102

# துணிகரமிக்கவர்களைக் கண்டறிவதற்கான ஆரம்பம்


இவ்வருடம் ஏப்ரல் மாத பாடசாலை பருவகால விடுமுறையில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பகுதி நடத்திய பத்தாம் தர மாணவர்களுக்கான மூன்று நாள் வதிவிட செயலமர்வு “துணிகரமிக்கவர்களைக் கண்டறிவதற்கான ஆரம்பம்” (Inition For Searching The Adventures) நடளாவிய ரீதியில் சுமார் 500 மாணவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்று முடிந்தது, அல்ஹம்துலில்லாஹ்.

சப்ரகமுவ பிராந்தியத்தில் நான்கு இடங்களிலும் வடமேற்குப் பிராந்தியத்தில் இரண்டு இடங்களிலும் மத்திய பிராந்தியத்தில் நான்கு இடங்களிலும் மேற்குப் பிராந்தியத்தில் இரண்டு இடங்களிலும் கிழக்குப் பிராந்தியத்தில் நான்கு இடங்களிலுமாக மொத்தம் 16 இடங்களில் இடம்பெற்றது.

ஜம்இய்யாவின் மத்திய சபை உறுப்பினர்கள் ஜமாஅத்தின் பிராந்திய ஷூரா சபை உறுப்பினர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜம்இய்யாவின் பிராந்திய விளையாட்டு விழா- 2014





ஜம்இய்யாவின் இவ்வருடத்துக்கான பிராந்திய விளையாட்டு விழா மே மாதம் 1, 2, 3, 4ஆம் திகதிகளில் உள்ளூர் அணிகளின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக இடம்பெற்றது. சப்ரகமுவ பிராந்திய விளையாட்டு விழா மாவனல்லையிலும் வடமேல் பிராந்திய நிகழ்வு புத்தளத்திலும் மத்திய பிராந்தியத்திற்கான நிகழ்வுகள் பேராதெனிய மற்றும் உக்குவளையிலும் மேற்குப் பிராந்தியத்திற்கான நிகழ்வு திஹாரியிலும் இடம்பெற்றன. மட்டுப்படுத் தப்பட்ட பந்து வீச்சுகளைக் கொண்ட மென்பந்து கிரிகெட் சுற்றுப்போட்டி, கால்பந்து மற்றும் கரப்பந்து போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் பிராந்திய ரீதியில் வெற்றி பெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு:

**சப்ரகமுவ பிராந்தியம்**

காலப்பந்தாட்ட சுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- மாவனல்லை

இரண்டாம் இடம்- தெல்கஹகொட

கிரிக்கெட் சுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- மாவ னல்லை

இரண்டாம் இடம்- ஹெம்மாத்தகம

கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி:

முதலாம் இடம்- ஹெம்மாத்தகம

இரண்டாம் இடம்- மாவனல்லை

**வடமேற்குப் பிராந்தியம்**

கிரிக்கெட் சுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- புத்தளம்

இரண்டாம் இடம்- மாதம்பை

**மத்திய பிராந்தியம்**

காலப்பந்தாட்ட சுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- கம்பளை

இரண்டாம் இடம்- உலப்பனை

கிரிக்கெட் சுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- உக்குவளை

இரண்டாம் இடம்- உலப்பனை

கரப்பந்தாட்டசுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- அக்குரணை

இரண்டாம் இடம்- உலப்பனை

**மேற்குப் பிராந்தியம்**

கிரிக்கெட் சுற்றுப் போட்டி:

முதலாம் இடம்- திஹாரிய

# ஊழியன் விதி, ஊழியன் வாக்குறுதி

கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி மாவனல்லை அல்முபாரிஸ் கோட்போர்கூடத்தில் இடம்பெற்ற ஜம் இய்யதுத் தலபாவின் 2014ஆம் ஆண்டுக்கான தேசிய அங்கத்தவர் மாநாட்டில் மனிதவள அபிவிருத்திப் பகுதியினால் அறிமுகப்படுத்தப்பட்டு பிரகடனப்படுத் தப்பட்ட தனி நபர் ஊழியர்களுக்கான விதிகள் வருமாறு:

**ஊழியன் விதி**

- பற்றுறுதியுடையவன்
- நம்பத்தகுந்தவன்
- ஒத்துழைப்பவன்
- துணிகரமிக்கவன்
- எளிமையானவன்
- தேடலுடையவன்
- படைப்பினங்களுக்குப் பயனளிப்பவன்
- மனித நேயமுள்ளவன்
- பெரியோருக்கு மரியாதை செய்பவன்
- சிறியோருக்கு அன்பு காட்டுபவன்
- நற்குணங்களின் உறைவிடமாகத் திகழ்பவன்

**ஊழியன் வாக்குறுதி**

"என்னால் முடியுமானவரை

கொள்கைக்கும் தேசத்திற்கும்

என் கடமைகளைச் செய்யவும்

என்னால் முடியுமானவரை

நன்மைகளை எடுத்தும்

பாவங்களை விட்டு தூரமாகி நடப்பேன் என்றும்

இறைவனோடு நெருக்கமான உறவைப் பேணுவேன் என்றும்


இறைஉவப்பை இலக்காகக் கொண்டு பணியாற்றுவேன் என்றும்

எந்நிலையிலும் ஊழியன் விதிகளை ஏற்று நடப்பேன் என்றும்

என்னைப் படைத்தவன் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்."

Visit: www.alhasanath.lk

# அறிவீனமா ஞானமா?



ஒரு நாள் நபியவர்கள் தங்களது தோழர்களுடன் ஒரு ஜனாஸா ஒன்றில் கலந்து கொண்டிருக்கும்போது ஸஃது இப்னு ஸஃனா என்ற ஒரு யஹூதி வந்து நபியவர்களின் மேலாடையை, இழுத்துத் தன்னுடைய கடனை அடைக்கும்படி கோரி "முஹம்மதே! என்னுடைய உரிமையை நிறைவேற்றிடும்" எனக் கேட்டான். அப்போது அங்கிருந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கோபம் கொண்டு, யஹூதியைப் பார்த்தார்கள்.

"அல்லாஹ்வின் எதிரியே! இந்நபியை உண்மையைக் கொண்டு அனுப்பியவன் மீது சத்தியமாக! இவர் பழிக் கப்படுவதிலிருந்து நான் எச்சரிக்கையுடன் இருக்கா விட்டால் உனது தலையை எனது வாளால் துண்டித்திருப் பேன்" எனக் கூறினார்.

நபியவர்கள் அமைதியுடன் உமரைப் பார்த்து, "உமரே! நானும் இவரும் இவையல்லாதவற்றுக்கே தேவையு டையவர்களாக இருக்கிறோம். நல்ல முறையில் கடனை நிறைவேற்ற நீர் எனக்கு கட்டளையிடுவதுடன், நாவைப் பின்பற்ற அவருக்கு கட்டளை இடுவீராக. உமரே அவருடன் சென்று அவருடைய உரிமையைக் கொடுப்பதுடன் இருபது மரைக்கால் ஈத்தம் பழத்தை அதிகமாகவும் கொடுங்கள்" என நபியவர்கள் கூறினார்கள்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இருபது மரைக்காலை அதிகமாகக் கொடுத்தபோது, அந்த யூதர், "உமரே! ஏன் அதிகம்?" எனக் கேட்டார். "உனது கோ பத்திற்கு நபியவர்கள் அதிகமாகக் கொடுக்கச் சொன்னார் கள்." "உமரே உங்களுக்கு என்னைத் தெரியுமா?" என அம்மனிதர் கேட்க, "இல்லை. நீ யார்?" எனக் கேட்டார். அதற்கு நான் ஸைது இப்னு ஸஃனா" எனக் கூறினார்.

"நீ ஹிப்ரா?" என உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கேட்க, "ஆம் நான் ஹிப்ர்தான்" "ஹிப்ரே நீங்கள் நபியுடன் ஏன் இவ்வாறு நடந்து கொண்டீர்கள்?" எனக் கேட்டார் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்.

"உமரே நுபுவ்வத்தின் அடையாளங்களில் இப்போது நான் கண்ட இரண்டைத் தவிர வேறு எதையும் நான் காணவில்லை. நபிகளாரின் ஞானத்தை அறிவீனம் முந்தி டுமா? அறிவீனத்தை விட ஞானமே அவர்களுக்கு அதிக ரிக்குமா? என்ற இரண்டையும் அவர்களிடம் பரிசோதித் தேன். எனவே, உம்மை நான் சாட்சியாக வைக்கிறேன். நிச்சயமாக நான் அல்லாஹ்வை இறைவனாகவும் இஸ் லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நபியாகவும் ஏற்றுக் கொண்டேன். இன்னும் நான் உம்மை சாட்சியாக வைக் கிறேன். எனது பொருட்களின் பாதியை நபியவர்களின் சமூகத்திற்கு தர்மமாக ஆக்கிவிட்டேன்" எனக் கூறிவிட்டு, நபிகளாரிடம் சென்றார்.

"வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் ஒருவன்தான். முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்" எனக் கூறி முஸ்லிமானார். (அல்ஹாகிம்)

## சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

**என்.ஏ. நஸ்மியா**

ஹாதியா இஸ்லாமிய நிலையம், குரீகொடுவ

### ஆறுதல் பரிசைப் பெறுவோர்

1. ஸல்மா மிப்லார் - களி -எலிய பெண்கள் அரபுக் கல்லூரி
2. ஜே.ஏ.எம். கஸ்ஸாலி - நாங்கல்ல
3. எம்.என். ஷிப்னா பர்வின் - பொல்கஹவெல
4. எம்.எம்.எம். உஸ்மான் - வியங்கல்ல
5. எம்.ஆர்.ஏ. ஹப்ஸா - கடுகஸ்தொட்ட
6. எம்.எம். ஸைனுதீன் - காவத்தமுனை
7. என்.பி. முஹம்மத் நளீர் - புத்தளம்
8. எம்.என். நிஸ்மி அஹமத் - மீயெல்ல
9. என். ஹஷ்மத் ஹிக்மா - ஏறாவூர்
10. எம்.ஏ.எப். சல்வா - கொச்சிக்கடை

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.

# உத்தமத் தோழர்களின் வாழ்வினிலே...

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வரைந்த கோடுகளில் தமது வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள்தான் அவர்களின் அருமைத் தோழர்கள். அந்த அருமைத் தோழர்களுள் ஒருவர்தான் அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்.

பேரீச்ச மரங்கள், திராட்சைக் கொடிகள் நிரம்பிய அழகான தோட்டம் ஒன்று அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் இருந்தது. மதீனாவிலேயே உயர்ந்த மரங்களும் மிகச் சிறந்த கனிகளும் இனிமையான நீரும் அத்தோட்டத்தின் சிறப்பு.

ஒரு நாள் அந்தத் தோட்டத்தின் மரநிழலில் அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அப்பொழுது எங்கிருந்தோ பறந்து வந்த பச்சை நிறமும் சிவப்பு அலகும் கொண்ட அழகிய பறவையொன்று தொழுது கொண்டிருந்த அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கண்களை ஈர்த்து விட்டது. கீச்சிட்டுக் கொண்டு, கிளைக்குக் கிளை உல்லாசமாகத் தாவிப் பறந்து கொண்டிருந்தது அந்தப் பறவை. அவரை அறியாமல் அதையே கண்கள் தொடர தொழுகையிலிருந்த அவருடைய கவனம் சிதறிவிட்டது.

சட்டென்று அந்த எண்ணம் அவரைத் தாக்க தான் எத்தனை ரக்அத்துகள் தொழுதோம் என்பதைக் கூட நிர்ணயிக்க முடியாது இருந்தார். இரண்டா? மூன்றா? குழப்பம் ஏற்பட்டு விட்டது.

விக்கித்துப் போனார் அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். தொழுது முடித்த பின் விரைந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைச் சந்தித்து, தமது தோட்டத்தின் மரங்களும் கூவும் பறவைகளும் என்னுடைய தொழுகையை பாதித்தன; கவனத்தைக் குலைத்தன; எனது ஆன்மாவை சஞ்சலத்திற்குள்ளாக்கின என்று உலகமே கவிழ்ந்தது போல் கவலைப்பட்டு கூனிக் குறுகி நின்றார்.

அது உள்ளார்ந்த கவலை. உள்ளம் நடுங்கிய கவலை. என்னவாவது செய்து தன்னுடைய தவறுக்குப் பரிகாரம் செய்து விட வேண்டுமே என்று துடித்தார். அதனால் "அல்லாஹ்வின் தூதரே! நீங்களே சாட்சி. நான் எனது இந்தத் தோட்டத்தை அல்லாஹ்வுக்காக தானமளிக்கிறேன். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எது உவப்பளிக்குமோ அவ்வகையில் இதனைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறினார்.

தொழுகையில் மறதி ஏற்பட்டதற்கு மொத்தத் தோட்டத்தையும் அள்ளிக் கொடுத்து விட்டார் அபூ தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். அந்தத் தோட்டதின் அழகுதானே இறைவனைத் தொழுவதில் சங்கடம் ஏற்படுத்தியது? எனில், அப்படிப்பட்ட அந்தத் தோட்டமே வேண்டாம் அவ்வளவுதான். மிக எளிதான தீர்மானம்.



இந்த உதாரணத்தை நாம் செயல்படுத்தினால் நமக்கெல்லாம் சொத்தொன்று மிஞ்சுமா? ஒவ்வொரு நாளும் நன்கு அனுபவித்து வாழ்ந்தது போக எஞ்சிய கொஞ்சம் நேரத்தில் குனிந்து, நிமிர்வதல்ல தொழுகை. அதுவே வாழ்க்கை என்று வாழ்ந்து காட்டியவர்கள் ஸஹாபாக்கள்.

இதனால்தான் "சுவர்க்கம் நுழைவோர் யாரென கேட்கப்பட்டதற்கு நானும் எனது தோழர்களும் அவர்கள் சென்றவழியில் நடப்போரும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாமும் அவ்வழியில் செல்பவர்களா? சிந்திப்போம்!

**ரமீஸா மன்ஸுர் - ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா**

## வினா-விடைப் போட்டி-71

01. தொழுகையில் மறதி ஏற்பட்டதற்காக முழு தோட்டத்தையும் தர்மம் செய்த நபித் தோழர் யார்?
02. சோமாலியாவில் இஸ்தான்பூல் மாநாடு எப்போது நடைபெற்றது?
03. மதீனாவில் முனாபிக்களின் தலைவனாக செயற்பட்டவன் யார்?
04. உயிர்த் தியாகியின் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும், ஒன்றைத் தவிர. அது எது?
05. இந்தியாவின் புதிய பிரதமர் யார்?

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி ஜுன் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**

**அல்ஹஸனாத்**
**77, தெமடகொட வீதி, கொழும்பு-09**

**வருகிறது ரமழான்...** *(35ஆம் பக்கத் தொடர்)*

ரமழான் பொறுமையின் மாதம் (ஷஹ்ருஸ் ஸப்ர்). ஆசைகளை அடக்கி பொறுமையுடன் நடந்து கொள்கின்ற பயிற்சியையும் பக்குவத்தையும் தருகின்ற மாதம்.

❖ பொறுமையிழக்கும் சந்தர்ப்பங்களை அடையாளப்படுத்தி அதற்கான காரணம் குறித்து இப்போதே சிந்தித்தால் ரமழானில் பயிற்சி எடுக்கலாமே.

ரமழான் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த லைலதுல் கத்ரை தன்னகத்தே கொண்ட மாதம்.

குறித்த ஓர் இரவில் வேலை செய்தால் 12 மாதங்களின் ஊதியம் கிடைக்கும் என்று எந்த நிறுவனமாவது அறிவித்தால் அதனை அடைய என்னவெல்லாம் செய்வோம், அதற்கு எப்படியெல்லாம் தயாராகுவோம் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் புரிய வேண்டிய அவசியமில்லை. ஆனால், வருடாந்தம் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த ஓர் இரவு வருகிறதே! அதற்கு எப்போதாவது திட்டமிட்டு தயாராகியிருக்கின்றோமா?

❖ அந்தப் பாக்கியம் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென இப்போதிருந்தே பிரார்த்தியுங்கள். அந்த இரவு கிடைத்து விட்டால் நீங்கள் பாக்கியசாலிதான்.

❖ உங்களது வாழ்வொழுங்கை இப்போதிருந்தே மாற்றிக் கொள்ளுங்கள்.

❖ இரவில் நீண்ட நேரம் நின்று வணங்க வேண்டுமல்லவா? இப்போதே மனோநிலையைத் தயார்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

❖ உங்கள் குடும்பத்தில் என்னென்ன மாற்றம் வர வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களோ அது குறித்து இப்போதே உங்களது மனைவி, பிள்ளைகளுடன் கலந்துரையாட நேரம் ஒதுக்குங்கள்.

❖ ரமழானில் பிள்ளைளுக்கு பாடசாலை விடுமுறை. அக்காலப் பகுதியிலும் காலையிலும் மாலையிலும் மேலதிக வகுப்புகளுக்கு (டியூசன்) அனுப்பி அவர்களை இயந்திரமயமாக்கி விடாதீர்கள். முன்னுரிமையின் அடிப்படையில் மிகவும் அவசியமான மேலதிக வகுப்புக்கு மாத்திரம் அனுப்புவதென இப்போதே முடிவெடுத்து விடுங்கள்.

❖ எல்லாவற்றுக்கும் மேலாக ரமழானில் நீங்கள் அடையவிருக்கும் இலக்குகளைப் பட்டியலிட்டு (Check List) அதனை உங்களது பார்வைக்கு தெரியும் இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அடிக்கடி எடுத்துப் பாருங்கள். உங்களை நீங்களே மதிப்பீடு செய்து கொள்ளலாம்.

❖ பெருநாளுக்கான ஆடை, அணிகலன்களை இப்போதே வாங்கி வைத்து விட்டால் ரமழானிய பொழுதுகள் பஸார்களில் கழிவதை தவிர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

❖ பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுகின்ற மாதம் ரமழான். உங்களுக்காக, உங்களது குடும்பத்தினர், உறவினர், அயலவர், உங்களது ஊர், சமூகம், நாடு... என்று எல்லோருக்காகவும் பிரார்த்தியுங்கள். அது மிகப் பெரும் ஆயுதம். ரமழானில் அது மிகவும் கூர்மையாக இருக்கும். சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

இந்த ஆயுதத்தை ஏந்தும் முன் ஒரு விடயம். ரமழானுக்கு முன் உங்களது சம்பாத்தியத்தை, வருமானத்தை ஒரு முறை மீள்பரிசீலனை செய்து கொள்ளுங்கள். இரத்த உறவினர்களின் உறவைத் துண்டித்து வாழ்பவர்கள் அவர்களோடு சேர்ந்து நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். பரஸ்பரம் மன்னியுங்கள்; மன்னிக்கப்படுவீர்கள். இரத்த உறவை முறித்த நிலையில் நீங்கள் துஆ எனும் அந்த ஆயுதத்தைக் கையிலெடுப்பதனால் ஆகப் போவது ஒன்றுமில்லை.

❖ மார்க்கத்தில் கருத்து வேறுபாடுள்ள அம்சங்களை ஆராய்வதில் உங்களது கால நேரத்தைக் கழித்து, பிறரின் நல்லமல்களை விமர்சித்துத் திரிந்து வங்குரோத் துக்காரர்களாகி விடாதீர்கள்.

நற்காரியங்களுக்கு பல மடங்கு நன்மைகளைப் பெற்றுத் தரும் பருவ காலம் ரமழான். பருவ கால வியாபாரத்தில் அதிக இலாபமீட்டுவதற்காக என்னவெல்லாம் செய்கிறோம்?

குடும்பத்தை, மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து, நாடு கடந்து, கண் விழித்து, பசி, தாகம் மறந்து என்று உலக இலாபத்தில் குறியாய் இருக்கின்றோமே! பருவ காலம் வருவதற்கு முன்பே திட்டமிட்டு அதிக இலாபமீட்ட முயற்சிக்கின்றோமே!

முஃமின்களின் பருவ காலமாகிய ரமழானில் மறுமை இலாபத்தை அடைவது குறித்து இப்போதிருந்தே திட்டமிட்டு தயாராகுவோமா?

வேகமாக வந்து விடும் ரமழான். ஒரு நிமிடமும் தாமதிக்க வேண்டாம்!



# இத்தாவைத் தீர்மானிப்பது தாம்பத்திய உறவு அல்ல என்பது பற்றிய விளக்கம்
# ஸஜதா திலாவத் செய்ய வேண்டிய சரியான முறை எது?
# ஹரத்துடைய எல்லை எதிலிருந்து ஆரம்பிக்கின்றது?

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர். இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி. மாதம்பை. mufeer96@gmail.com

*01. கேள்வி: அல்ஹஸனாத் மே மாத இதழில் தலாக் தொடர்பான விளக்கத்தில் இத்தாவைத் தீர்மானிப்பது தாம்பத்திய உறவு அல்ல என்று குறிப்பிடப்பட்டிருந்தது. என்றாலும், ஒரு கட்டத்தில் தலாக்குடைய இத்தாவை தாம்பத்திய உறவு தீர்மானிக்கிறது. அஹ்ஸாப் 49ஆவது வசனத்தில் ஒரு பெண் உடலுறவுக்கு முன்னால் தலாக் சொல்லப்பட்டால் அவள் இத்தா இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் எப்படி தாம்பத்திய உறவு இத்தாவைத் தீர்மானிப்பதில்லை என்று சொல்ல முடியும்?*

பதில்: ஆரம்பமாக தலாக்குடன் தொடர்புபட்ட இந்த நுணுக்கமான கேள்வியைச் சுட்டிக்காட்டிய சகோதரருக்கு அல்லாஹ் அருள் புரிய வேண்டும். ஜஸாகல்லாஹு கைரா.

பிக்ஹு பாடத்தில் தலாக்குடைய சட்டதிட்டங்கள் சிக்கல்கள் நிறைந்த பகுதியாகும். தலாக் பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் பேசியிருப்பது போன்று பல ஹதீஸ்களும் இது குறித்து பேசியிருக்கின்றன.

அந்த வகையில் ஸூரதுல் அஹ்ஸாபின் 49வது வசனம் இவ்வாறு கூறுகின்றது:

"ஈமான் கொண்டவர்களே! முஃமினான பெண்களை நீங்கள் மணந்த பிறகு நீங்கள் அவர்களைத் தொடுவதற்கு முன்னமேயே தலாக் செய்து விட்டீர்களானால், அவர்கள் விஷயத்தில் நீங்கள் கணக்கிடக் கூடிய (இத்தாத்) தவணை ஒன்றும் உங்களுக்கு இல்லை. ஆகவே, அவர்களுக்குத் (தக்கதாக) ஏதேனும் கொடுத்து அழகான முறையில் அவர்களை விடுவித்து விடுங்கள்."

இதேபோன்று மற்றுமொரு வசனம் ஸூரதுல் பகராவிலும் இடம்பெற்றுள்ளது.

"பெண்களை நீங்கள் தீண்டுவதற்கு முன், அல்லது அவர்களுடைய மஹரை நிச்சயம் செய்வதற்கு முன், தலாக் சொன்னால் உங்கள் மீது குற்றமில்லை. ஆயினும் அவர்களுக்குப் பலனுள்ள பொருட்களைக் கொடு(த்து உதவு)ங்கள். அதாவது, செல்வம் படைத்தவன் அவனுக்குத் தக்க அளவும், ஏழை அவனுக்குத் தக்க அளவும் கொடுத்து, நியாயமான முறையில் உதவி செய்தல் வேண்டும். இது நல்லோர் மீது கடமையாகும்." (2: 236)

இவ்விரண்டு வசனங்களும் சுட்டிக்காட்டுகின்ற சட்டம் யாதெனில், ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காக திருமண ஒப்பந்தம் செய்து, இரண்டு பேரும் சேர்ந்து வாழ்வதற்கு முன்பு ஏதோ ஒரு காரணத்தால் தலாக் நடைபெற்றால் அச்சந்தர்ப்பத்தில் தலாக்கிற்கான இத்தா இருக்க வேண்டியதில்லை என்பதாகும். அதாவது, திருமண ஒப்பந்தம் செய்து ஒருமுறையேனும் உறவு கொள்ளாமலே பிரிந்து விட்டால் அந்நிலையில் இத்தா கடமையாகாது என்பதாகும்.

மே மாத இதழின் கேள்வியில் இரண்டடு பேரும் திருமண ஒப்பந்தம் செய்து கணவன்- மனைவியாக பல காலம் வாழ்ந்துவிட்டு பின்னர் ஏற்பட்ட தகராறின் காரணமாக உறவு கொள்ளாமல் இருந்துவிட்டு தலாக் கூறப்பட்டுள்ளது தொடர்பாகவே பேசுகிறது. அதாவது, திருமண ஒப்பந்தத்தின் பின்னர் ஒரு முறையேனும் உறவு கொண்டு விட்டு சில காலம் உறவு கொள்ளாமல் தலாக் கூறப்பட்டுள்ளது. எனவே, இங்கு சில காலம் உறவு கொள்ளாமல் இருந்தது கருத்தில் கொள்ளப்படாமல், கணவன் கூறுகின்ற தலாக்கை மையமாக வைத்தே இத்தா தீர்மானிக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட தலாக்குடைய இரண்டு கட்டங்களிலும் முதலாவது கட்டத்தில் இத்தா இருக்க வேண்டியதில்லை. காரணம், திருமண ஒப்பந்தம் செய்து மனைவியுடன் ஒரு முறையேனும் உறவு கொள்ளவில்லை. இரண்டாவது கட்டத்தில் கட்டாயம் இத்தா இருக்க வேண்டும். காரணம், திருமண ஒப்பந்தம் செய்து இரண்டு பேரும் கணவன்-மனைவியாக வாழ்ந்து ஒரு தகராறின் பின்னர் உறவு கொள்ளாமல் இருந்து விட்டு தலாக் கூறியமையாகும்.

அதேபோன்று சரியான முறையில் திருமண ஒப்பந்தம் நடைபெற்று இரண்டு பேரும் தனியாக ஓர் அறையில் இருந்து உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் கூறப்பட்டால் அது முழுமையான மஹர் தொகையையும் இத்தாவையும் கடமையாக்கி விடும் என்பது நான்கு கலீபாக்களினதும் பெரும்பாலான புகஹாக்களினதும் கருத்தாகும். ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த புகஹாக்களின் கருத்து

இத்தா கடமை யாகுவதற்கு உடலுறவு நடைபெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

*02. கேள்வி: புனித அல்குர்ஆனில் ஸஜதாவுடைய ஆயத்துகள் ஓதப்படும்போது அதற்கான ஸஜதா திலாவத் செய்ய வேண்டிய சரியான முறையை விளக்க முடியுமா?*

பதில்: ஸஜதாவுடைய வசனங்களை தொழுகையின் போதும் தொழுகை அல்லாத நேரங்களிலும் ஓதினால் ஸஜதா செய்வது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வழிமுறையாகும்.

ஸஜதா திலாவத் செய்யும்போது தக்பீர் கூறி தொழுகையில் ஸுஜூத் செய்வது போன்று (ஏழு உறுப்புக்களும் நிலத்தில் பட்ட நிலையில்) ஸுஜூது செய்ய வேண்டும். பின்னர்,

سبحان ربي الأعلى

سبحانك اللهم ربنا وبحمدك، اللهم اغفر لي

اللهم لك سجدت وبك آمنت ولك أسلمت

سجد وجهي للذي خلقه فشق سمعه، وبصره، بحوله وقوته

اَللَّهُمَّ احْطُطْ عَنِّيْ بِهَا وِزْرًا، وَاكْتُبْ لِيْ بِهَا أَجْرًا، وَاجْعَلْهَا لِيْ عِنْدَكَ ذُخْرًا

என்ற துஆக்களை ஓதிவிட்டு தக்பீர், ஸலாம் இல்லாமல் எழும்ப வேண்டும். ஏனென்றால், ஸுஜூதுக்கு செல்லும்போது தக்பீர் கூற வேண்டும் என ஹதீஸ்களில் வந்திருப்பது போன்று ஸுஜூதிலிருந்து எழும்பும்போது தக்பீர் கூறி எழுந்து ஸலாம் கொடுக்க வேண்டும் என இடம்பெறவில்லை.

இந்த ஸுஜூதை செய்வதற்கு தொழுகையில் போன்று அவ்ரத்தை மறைத்து, வுழூச் செய்து கிப்லாவை முன்னோக்குவது நிபந்தனைகளாகும் என இமாம்கள் கூறியுள்ளபோதிலும், இமாம் அஷ்ஷவ்கானி, இமாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) போன்றோர் இதற்கு நிபந்தனையில்லை என்கின்றனர். இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வுழூ இல்லாத நிலையில் ஸஜதா திலாவத்துக்கான ஸுஜூதைச் செய்வார்கள் என இமாம் புகாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

*03. கேள்வி: புனித ஹஜ், உம்ரா கிரியைகளை நிறைவேற்றுவதற்காக மக்கா முகர்ரமாவிற்கு செல்லும் ஒருவருக்கு ஹரம் ஷரீபுடைய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அவர் எந்த ஆண் மீதோ பெண் மீதோ தொடுகையுற்றால் அவருடைய வுழூ முறியாது என்று கூறப்படுகிறது. இந்த ஹரத்துடைய எல்லை எதிலிருந்து ஆரம்பிக்கின்றது என்பதை கூற முடியுமா? (முழு மக்கா நகரிலும் வுழூ முறியாது என்பதாக சிலர் கூறுகின்றார்கள்)*

பதில்: புனிதமிக்க கஃபாவைச் சூழ இருக்கின்ற பகுதிகள் அனைத்தும் ஹரமாக இருக்கின்றது. ஹரத்தின் எல்லைகள் கஃபாவின் நான்கு திசைகளிலிருந்தும் வரையறுக்கப்பட்டுள்ளது. வடக்குத் திசையில் மதீனாவிலிருந்து வரும்பொழுது அத்தன்ஈம் அல்லது ஆஇஷாப் பள்ளிவாசலிலிருந்து ஆரம்பமாகின்றது. மஸ்ஜிதுல் ஹரத்துக்கும் இவ்விடத்துக்குமிடையிலான தூரம் 7 கி.மீற்றர்களாகும். மேற்குத் திசையில் ஜித்தாவிலிருந்து வரும்போது அல்ஹுதைபிய்யா எனுமிடத்திலிருந்து ஆரம்பமாகின்றது. இவ்விடத்திலிருந்து மஸ்ஜிதுல் ஹரமுக்குள்ள தூரம் 18 கி.மீற்றர்களாகும். கிழக்குத் திசையில் அல்ஜுஃரானா எனுமிடத்திலிருந்து ஆரம்பமாகின்றது. இவ்விடத்திலிருந்து மஸ்ஜிதுல் ஹரமுக்குள்ள தூரம் 14.5 கி.மீற்றர்களாகும். தெற்குத் திசையில் நமிறா எனுமிடத்திலிருந்து ஆரம்பமாகின்றது. இவ்விடத்திலிருந்து மஸ்ஜிதுல் ஹரமுக்குள்ள தூரம் 20 கி.மீற்றர்களாகும்.

இன்று ஹரத்தின் எல்லைகளைத் தெளிவுபடுத்துவதற்காக 1104 அடையாளக் கற்கள் நடப்பட்டுள்ளன. எனவே, இவ் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளே ஹரமுல் மக்கியாகக் கருதப்படுகின்றது.

ஹரம் ஷரீஃபுடைய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் ஆண் பெண் மீதோ அல்லது பெண் ஆண் மீதோ தொடுகையுற்றால் வுழூ முறிவது பற்றி கருத்து முரண்பாடுகள் காணப்பட்டபோதிலும் அதனால் வுழூவுக்கோ அல்லது தவாபுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது என்பதே சரியான கருத்தாகும்.


**தபால் மூலக் கல்வி**

பின்வரும் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள்.

1. Dip. in Social Science – சமூக விஞ்ஞானம்.
2. Dip. in Disaster Mgt – அனர்த்த முகாமை
3. Dip. in Psychology – உளவியல்
4. Dip. in Library Mgt – நூலக முகாமைத்துவம்
5. Dip. in Human Recourse Management – மனித வள முகாமைத்துவம்
6. Dip. in Educational Mgt – கல்வி முகாமைத்துவம்.
7. Dip. in Montessori – ஆரம்ப பாடசாலை (English Medium Available)
8. Dip. in Marketing – சந்தைப்படுத்தல்
9. Dip. in Business Mgt – வியாபார முகாமை
10. Dip. in Office Mgt – அலுவலக நிர்வாகம்
11. Dip in Spoken English – ஆங்கிலப் பயிற்சி

மொழி மூலம்: தமிழ்

அனைத்து பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும். இறுதியில் சர்வதேச அங்கீகார Certificate வளங்கப்படும். காலம் 6 மாதம். கட்டணம் 4800.00 (மாதாந்தம் Rs. 800) Application Form, மேலதிக விபரங்கள் பெற கீழ்வரும் கையடக்க தொலைபேசிக்கு பெயர், முகவரியை SMS செய்யுங்கள். 0713144536

INSTITUTE OF SOCIAL & TECHNICAL STUDIES
400 First Floor, Main Street, Maruthamunai 3, Kalmunai. http://istsedu.net84.net
வெளிநாட்டில் உள்ளோர்: ists999@gmail.com
Accredited by: IAO - U.S.A

10. Dip. in Internationally Recognized Certificate



அரபு மூலம்: அம்ர் காலித்
தமிழில்: அஷ்கர் அரூஸ் (நளீமி)

# நபிகளாரின் ஸீராவிலிருந்து...

தொடர் - 21

## அகழி யுத்தம்

மதீனாவில் சுமார் 700 முனாபிக்கள் இருந்தனர். இவர்களின் தலைவனாக அப்துல்லாஹ் இப்னு ஸலூல் செயற்பட்டான். இவர்களது தந்திரங்கள், சூழ்ச்சிகள் அஹ்ஸாப் வரை தொடர்ந்தது. அதைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தை சீர்குலைக்க ஊடக யுத்தமொன்றை கட்டவிழ்த்து விட்டார்கள்.

03. அவதூறு நிகழ்வு... மறுமை வரை எமக்கு ஒளி

முஸ்லிம்கள் மக்காவில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார்கள். மதீனாவில் யுத்தங்களைக் கொண்டு வதைக்கப்பட்டார்கள். பின்னர் முனாபிக்களின் சதிவலையால் சமூகவியல், ஒழுக்கப் பெறுமானங்களுக்கெதிராகவும் முஸ்லிம்கள் சோதிக்கப்பட்டார்கள்... அதுவே பத்தினித் தாய் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கெதிராக புனையப்பட்ட அவதூறு நிகழ்வு...

மதீனாவில் சுமார் 700 முனாபிக்கள் இருந்தனர். இவர்களின் தலைவனாக அப்துல்லாஹ் இப்னு ஸலூல் செயற்பட்டான். இவர்களது தந்திரங்கள், சூழ்ச்சிகள் அஹ்ஸாப் வரை தொடர்ந்தது. அதைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தை சீர்குலைக்க ஊடக யுத்தமொன்றை கட்டவிழ்த்து விட்டார்கள். உண்மையில் அப்துல்லாஹ் இப்னு ஸலூல் அபூஸுப்யான், அபூஜஹ்ல் ஆகியோரை விட அதிகமாக நபியவர்களை நோவினைப்படுத்தியுள்ளான்.

அது பனூமுஸ்தலக் போராட்டம். முஸ்லிம்கள் வெற்றிக்களிப்புடன் திரும்பிக் கொண்டிருந்தார்கள். திரும்பும் வழியில் உமரின் கூலியாளர் ஒருவருக்கும் ஹஸ்ரஜ் கோத்திரத்தார் ஒருவருக்கும் இடையில் ஒரு கிணறு தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை முற்றி கோத்திர வெறி அவர்களுக்குள் தலைதூக்கப் பார்த்தது. இதனை முனாபிக்கள் பூதாகரப்படுத்த முயற்சித்தபோதும் நபியவர்கள் தலையிட்டு "நான் உங்களுக்கு மத்தியில் இருக்கும் நிலையில் மீண்டும் ஜாஹிலிய்ய வாதத்தில் ஈடுபடுவதா? அதை விட்டு விடுங்கள். அது துர்நாற்றமடிக்கின்றது" எனக் கூறினார்கள். அப்போது அப்துல்லாஹ் இப்னு ஸலூல் "நாம் விருந்தளித்து உபசரித்த இவர்களே எம்மை இழிவுபடுத்துவதா...?" என பித்னாவை தூண்டிக் கொண்டிருந்தான். இச்செய்தி நபியவர்களையும் எட்டியது. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆவேசம் கொண்டு "நான் அவனது கழுத்தை வெட்டிவிடவா?" என அனுமதி கேட்டார்கள். "இல்லை, முஹம்மத் தனது தோழர்களைக் கொலை செய்ய மாட்டார்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பதிலளித்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது படையினர்களுக்கு ஓய்வளிக்காது இரவு பகலாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இதற்குக் காரணம் வினவப்பட்டபோது "உங்களது தோழர் கூறுகின்றவற்றை செவியேற்கவில்லையா?" நான் உங்களுக்கு ஓய்வளித்து பித்னாக்கள் எழாதிருக்கவே பயணத்தைத் தொடர்ந்தேன்" எனக் கூறினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் யுத்த களத்திலிருந்து திரும்பும் வழியில் நடந்தவற்றை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

"நாம் மதீனாவுக்கு அண்மையில் ஓர் இடத்தில் இரவைக் கழித்தோம். பின்னர் எமது பயணம் ஆரம்பித்தது. அவ்வேளையில் நான் எனது படையைவிட்டு இயற்கைத் தேவையை நிறைவேற்றுவதற்காக ஓர் ஒதுக்குப்புறத்துக்குச் சென்று வந்தேன். எனது கழுத்தில் சகோதரி ஒருவரின் மாலையை அணிந்திருந்தேன். ஆனால், அது என்னையறியாமலேயே அவ்விடத்தில் விழுந்திருந்தது. நான் அதனைத் தேடி மீண்டும் அவ்விடத்துக்கே சென்று எடுத்துக் கொண்டு வந்தேன். (அது ஓர் அமானிதப் பொருள் அதனை திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்ற உணர்வு ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் இருந்தது) அங்கே முஸ்லிம் படை புறப்பட்டு விட்டது. எனது பல்லக்கை அவர்கள் சுமந்து சென்று விட்டார்கள். நான் அதனுள் இருப்பதாக அவர்கள் நினைத்து விட்டார்கள் போலும். அவர்கள் பல்லக்கில் நான் இல்லாததை அறிந்து கொண்டால் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கை

யுடன் அவ்விடத்திலேயே தங்கினேன். அல்லாஹ்வை துதிசெய்து, இஸ்திஃபார் செய்து கொண்டு ஹிஜாப் அணிந்தவளாக நான் அமர்ந்திருந்தேன். என்னைத் தூக்கம் மிகைத்து விட்டது. அப்போது பத்ர் போர்க்களத்தில் கலந்து கொண்ட ஸப்வான் இப்னு முஅத்தல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அவ்விடத்துக்கு வந்தார்கள். (இந்த ஸஹாபி ஜாஹிலிய்யாக் காலத்திலும் இஸ்லாத்திலும் ஹராமான எந்தவொரு பெண்ணினதும் முந்தானையை தான் விலக்கியதில்லை என பிற்காலத்தில் குறிப்பிடுகிறார்) அவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் என்னுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை. எனக்கு ஸலாம் கூடக் கூறவில்லை. அவர் கூறிய ஒரே வார்த்தை ''இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்'' பிறகு அவரது ஒட்டகத்தை என்னருகில் கொண்டுவந்தார். நான் அதன் மேல் ஏறினேன். அவர் ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு முன்னால் சென்றார். என்னுடன் பேசவுமில்லை. என்னைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. அவர் தஸ்பீஹ் செய்துகொண்டு வருவதை என்னால் செவிமடுக்க முடிந்தது. அவர் ழுஹருடைய வேளையில் என்னை மதீனாவிற்கு அழைத்து வந்தார். முனாபிக்கள் என்னைப் பற்றி தப்பெண்ணம் கொண்டனர். முஃமின்கள் நல்லெண்ணம் கொண்டனர். எனினும்...''

சந்தர்ப்பம் பார்த்திருந்த முனாபிக்கள் அவதூறு பரப்பினார்கள். ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் தனக்கெதிராக இட்டுக்கட்டப்பட்டுள்ள செய்தியை இறுதி மூன்று நாட்களிலேயே அறிந்திருந்தார்கள். அந்த மூன்று நாட்களும் அழுகையே அவர்களுக்கு ஆறுதலாக அமைந்திருந்தது. ஏனெனில், மதீனாவுக்கு வந்து ஆரம்ப நாட்களில் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கடுமையாக சுகவீனமுற்றிருந்தார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் இச்செய்தியில் உளவியல் ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு மாதகால அளவு பெரும் கஷ்டத்தை எதிர்கொண்டார்கள். இச்செய்தி தொடர்பில் மக்கள் மத்தியில் நான்கு வகையான நிலைப்பாடுகள் காணப்பட்டன.

01. பெரும்பான்மையானோர் இதனை உண்மைப்படுத்தவுமில்லை; பொய்ப்பிக்கவுமில்லை. மௌனமாக இருந்தனர்.

02. சிறிய தொகையினர் இதனைப் பொய்ப்பித்தனர். (அபூ அய்யூப் அன்சாரி (ரழியல்லாஹு அன்ஹு), அவரது மனைவி...)

03. இவர்கள் பொய்ப்பிக்கவுமில்லை; உண்மைப்படுத்தவுமில்லை. ஆனால், செய்தியை பரப்பித் திரிந்தார்கள். (ஹஸ்ஸான் இப்னு ஸாபித், ஹம்னா பின்த் ஜஹ்ஷ்)

04. இச்செய்தியை இட்டுக்கட்டித் திரிந்தவர்கள் (முனாபிக்கள்)

(தொடரும்...)




Join us for the intro session on 15th June 2014
9.00 am - 11.00 am

IFQ
BANKER ISLAMIC BANKER

Building 'a new breed of professional Islamic Bankers & Islamic Finance Specialist'

The World's Economy is Shifting Towards Islamic Finance

Why Not You ...?




"Do you want to become an ethical solution provider with values in an industry which is growing leaps and bounds?Do Islamic Finance! The best place to do is FGA with their practical and telented lecture panel"

Mohamed Azan
Consultant - Brandix I3
One of the Highest marks holder for IFQ - UK exam (94%)

Reserve Your Seat NOW!

077-7703567
077-4616710

First Global Academy
#4, Level 1, Collingwood Place, Colombo 06.
www.firstglobalacademy.com



# அருள் மழையில் நனைந்தபடி - 02

—ஷாறா—

மாண்பு மிக்கவனே! நீ படைப்பாளன். உனது விருப்பத்தின்படி நீ யாவற்றையும் படைத்தாய். அந்தக் கோடிக்கணக்கான படைப்புகளில் எம்மை மேலாக்கி வைத்தாய். நீ மகாத் தூயவன். உன் படைப்புகளை எமக்கு வசப்படுத்தித் தந்தாய். ஆனாலும் இறைவா, உனக்கு அடிபணிவதில் அந்தப் படைப்புகளை விட மிகக் கீழான நிலையில் நாம் இருக்கிறோம்.

காற்று உனக்குக் கட்டுப்படுகிறது; அலைகள் உனக்கு அடிபணிகின்றன; பூமி உன் ஆணைப்படி சுழன்றுகொண்டே இருக்கின்றது. பச்சைத் தாவரங்கள் நீ விதித்தபடி பூத்துக் காய்த்து, கனிந்து, நிழல் தந்து இயங்கிக் கொண்டேயிருக்கின்றன. படை படையாய் மேகங்கள் வானில் உலாப் போகின்றன. அவை கீழே விழுந்ததாய் வரலாறு இல்லை. உனக்கு முழுமையாய் அடிபணிந்ததால் இந்தப் படைப்புகளின் இயக்கத்தில் எந்தக் கோளாறும் உருவாகவில்லை.

இறைவா எல்லாப் படைப்புகளிலும் எம்மை மேலான படைப்பென்றாய். செயற் சுதந்திரத்தைத் தந்து எமக்கு அருள் புரிந்தாய். சலுகைகளையெல்லாம் தவறாய்ப் பயன்படுத்தும் இழிந்த பண்பே எம்மில் மேலோங்கி நிற்கிறது. செயற் சுதந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. நாம் வழிமாறிப் போகிறோம். எம்மைப் படைக்குமுன்பே எமது வாழ்வு பற்றி அறிந்தவன் நீ. நாம் வரையறைக்குள் வாழ்ந்தால் வெகுமதி தருவதாய் ஆசை காட்டினாய். சுவனத்தைப் பற்றி திருமறையில் வர்ணித்தாய். உன் தூதரின் மொழிகளில் விளக்கமளித்தாய்.

சுவனம் எப்படியிருக்கும் என்று தெரிந்தால் அல்லவா அதற்காய் மனம் ஏங்கத் தொடங்கும். அழகழகாய்ப் பெண்களைப் படைத்துவிட்டு சுவனத்துக் கண்ணழகிகளைப் பற்றிச் சொன்னாய். பூமியில் நதிகளை ஓடவிட்டு, அங்கு பாலாறும் தேனாறும் உண்டென்றாய். வித விதமாய்க் கனிகளைச் சுவைக்கத் தந்து சுவனத்தில் இதைவிடச் சிறந்ததை சுவைக்கலாம் என்றாய். தூண்களில்லா வானம், அலைகளால் அலங்கரிக்கப்பட்ட கடல், விழிகளுக்கு விருந்தளிக்கும் தாவரங்கள், ஊர்ந்தோடும் நதிகள், பொங்கிப் பாயும் நீர்வீழ்ச்சிகள், விதவிதமான பறவைகள், கால்நடைகள் என எல்லாவற்றிலும் அழகுகளையெல்லாம் அள்ளித் தெளித்து சித்திரம் தீட்டிவிட்டு நம் கண்கள் கண்டிராத, செவிகள் கேட்டிராத, கற்பனைக்கே எட்டாத பேரழகு அங்கு இருப்பதாய்ச் சொன்னாய். பல விதமான இன்பங்களை இங்கு அனுபவிக்கத் தந்து, சுவனத்தில் உள்ள சலிக்காத இன்பம் பற்றிச் சொன்னாய்.

**தூண்களில்லா வானம், அலைகளால் அலங்கரிக்கப்பட்ட கடல், விழிகளுக்கு விருந்தளிக்கும் தாவரங்கள், ஊர்ந்தோடும் நதிகள், பொங்கிப் பாயும் நீர்வீழ்ச்சிகள், விதவிதமான பறவைகள், கால்நடைகள் என எல்லாவற்றிலும் அழகுகளையெல்லாம் அள்ளித் தெளித்து சித்திரம் தீட்டிவிட்டு நம் கண்கள் கண்டிராத, செவிகள் கேட்டிராத, கற்பனைக்கே எட்டாத பேரழகு அங்கு இருப்பதாய்ச் சொன்னாய்.**

உன்னருளை என்னவென்போம். இவற்றையெல்லாம் இங்கு படைக்காது நீ சுவனம் பற்றிச் சொல்லியிருந்தால் அது என்னவென்று எமக்குப் புரிந்தே இருக்காது. மாளிகைகளை அமைக்கும் அறிவை நீ மனிதனுக்கு வழங்கியதால்தானே சுவனத்து மாளிகைகளைப் பற்றிச் சிந்திக்க முடிகிறது.

பெரும் கொடையாளனே! இந்த உலகத்தின் அழிந்து போகும் இன்பங்களோடு எமது வாழ்வை நீ முடிக்கவில்லை. உனக்கு முழுமையாகக் கட்டுப்பட்ட அனைத்துப் படைப்புகளையும் விட்டுவிட்டு, எம்மை நிலையான சுவனங்களில் வாழவைக்க நீ ஆசைப்படுகிறாய். 'எனக்குக் கட்டுப்படு' என ஒரேயொரு நிபந்தனைதான் விதித்தாய. தன் பொறுப்பில் உள்ளவர்கள், சிலவேளைகளில் தன் பொறுப்பில் இல்லாதவர்கள்கூட தனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என விரும்புவதுதானே மனித இயல்பு. ஆனால், உனக்கு முற்றிலும் அடிபணிய வேண்டும் என்பதில் மட்டும் நாம் பொடுபோக்காய் இருக்கிறோம். உன் வெகுமதிகள் பற்றி உன் வேதமும் தூதரும் மீண்டும் மீண்டும் சொன்னபோதிலும் நாம் தொடர்ந்தும் அசிரத்தையாய் இருக்கிறோம்.

எல்லையில்லாக் கருணையாளனே! நீ எம்மீது என்னென்ன அருள்களைப் புரிந்திருக்கிறாய். சிந்தித்துப் பார்க்கிறோம், விழிகள் கசிகின்றன. ஒவ்வொரு கணமும் உன் அருளில் நனைந்து கொண்டிருக்கிறோம். உன் அருள் வெறும் தூறலல்ல; பெரு மழை. அதில் குளித்துக் கொண்டிருக்கிறோம். அதை உணரும் திராணிதான் எமக்கில்லை நாயனே! எம்மை மன்னித்துவிடு!



# இஸ்லாம் அடிமைத்துவத்தை அங்கீகரிக்கின்றதா?

மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரக்குன்னு ▸ தமிழில்: ஜே. இஸ்ஹாக்

> உங்களில் யாரும் இந்த ஆண் எனது அடிமை என்றோ இந்தப் பெண் எனது அடிமை என்றோ கூறக் கூடாது. ஏனென்றால், அவர்களை உங்களது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்த அல்லாஹ், உங்களையும் அவர்களின் அடிமையாக மாற்றி வைத்து விடுவதற்கும் ஆற்றலுடையவனாக இருக்கின்றான் என்று நபியவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.

*வினா: இஸ்லாம் அடிமைத்துவத்தை தடைசெய்ய வில்லை என நான் விளங்கிக் கொள்கின்றேன். அப்படி இருக்கும்போது சமத்துவம், சமூக நீதி குறித்துப் பேசுவதற்கு இஸ்லாத்துக்கு என்ன அருகதை இருக்கின்றது?*

மறுமொழி: மனிதர்கள் அனைவரும் ஒரே இறைவனின் சிருஷ்டிகள் எனவும் ஒரே தாய்- தந்தையின் பிள்ளைகள் என்றும் இஸ்லாம் கூறுகிறது. இதனால்தான் மனிதர்களிடையே எந்த வேறுபாடும் காட்டக் கூடாது என்று பணிக்கிறது இஸ்லாம்.

“மனிதர்களே! ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்துமே நாம் உங்களைப் படைத்திருக்கின்றோம். பின்னர் நாம் நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்வதற்காக, உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம்.” (49: 13)

நபியவர்கள் நவின்றார்கள். “நிச்சயமாக உங்களது இறைவன் ஒரே ஒருவன்தான். உங்களனைவரினதும் தந்தையும் ஒருவரே. எல்லோரும் ஆதமின் சந்ததிகளே. ஆதமோ மண்ணினால் படைக்கப்பட்டுள்ளார். எனவே, அரபிக்கு அரபியல்லாதவரை விடவோ வெள்ளை நிறத்தவருக்கு கறுப்பு நிறத்தவரை விடவோ எந்த மேன்மையும் கிடையாது. இறையச்சத்தினடிப்படையிலேயே தவிர.” (முஸ்லிம், அபூ தாவூத்)

‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ என்பது இஸ்லாமியக் கோட்பாடாகும். எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான உரிமையே உண்டு. செல்வம், அந்தஸ்த்தின் அடிப்படையில் எவருக்கும் எந்த சலுகையையும் இஸ்லாம் வழங்குவதில்லை. இந்த வகையிலான சகல வேறுபாடுகளையும் இஸ்லாம் அடியோடு நிராகரிக்கின்றது.

இவ்வாறிருக்கும்போது இஸ்லாம் ஏன் அடிமைத்தனத்தை அடியோடு நிராகரிக்கவில்லை? இவ்வினாவிற்கு விடை காண்பதற்கு இந்த விடயத்தை சற்று அலசி ஆராய வேண்டியுள்ளது.

01. முஹம்மத் நபியவர்களின் வருகையின்போது உலகம் முழுவதும் மிகக் கொடூரமான அடிமைத்துவம் நடைமுறையில் இருந்தது. அன்றைய ரோம சாம்ராஜ்யத்தில் அடிமைகள் வெறுமனே ஆடு, மாடுகளைப் போன்று விற்கப்படும் பொருட்களாக இருந்தனர். ஓடிப் போவதைத் தடுப்பதற்காகக் கால்கள் சங்கிலிகளால் கட்டி வைக்கப்பட்ட நிலையிலேயே அவர்களிடம் பாரிய வேலைகள் வாங்கப்பட்டன. மாட்டுத் தொழுவங்களுக்குச் சமமான இடங்களிலேயே அவர்கள் வசிக்க வைக்கப்பட்டனர். எஜமானரின் எஞ்சிய எச்சில்களை உண்ணும் உரிமையைத் தவிர வேறு எந்த உரிமையும் அவர்களுக்கு இருக்கவில்லை. வேலை செய்யும்போது எஜமானரின் பொழுதுபோக்குச் சாட்டை அடிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் தமது முதுகைத் திறந்து கொடுக்க வேண்டும்!

எஜமானர்களை மகிழ்விப்பதற்காக காளை மாடுகளுக்கிடையே சண்டையிட வைப்பது போல அடிமைகளும் சண்டையிட வைக்கப்பட்டனர். சண்டைகளில் இந்த அப்பாவி அடிமைகள் ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டு துடிதுடித்து மாண்டுபோவதை ரசித்து மகிழ்வது எஜமானர்களின் பிரதான பொழுதுபோக்காக இருந்தது. இந்தியாவின் நிலையும் இதற்கு மாற்றமாக இருக்கவில்லை. இந்தியாவில் சாதியின் பெயரால் அடிமைத்துவம் அரங்கேற்றப்பட்டது. மேலும் அது கடவுளின் பெயரால் விதிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் மிக அண்மைக் காலம் வரையிலும் கொடூரமான அடிமைத்துவமும் நிறவேறுபாடுகளும் நடைமுறை

யிலிருந்தன. ஏனைய மேற்கத்தேய நாடுகளின் நிலையும் இதுதான்.

இத்தகைய நிலையில்தான் இஸ்லாம் இதில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. முதலில் அடிமைகளுடனான மனப்பாங்கிலும் அணுகுமுறையிலும் அது சீர்திருத்தத்தை ஏற்படுத்தியது. அவர்களும் மற்றவர்களைப் போன்ற மனிதர்களே என்று இஸ்லாம் பிரகடனம் செய்தது. இந்த விழிப்புணர்வை மற்றவர்களிடத்திலும் வளரச் செய்தது.

அல்லாஹ் ஆணையிடுகின்றான்:

“தாய் தந்தையரிடம் நல்லவிதமாக அன்புடன் நடந்து கொள்ளுங்கள்! மேலும் உறவினர்கள், அநாதைகள், வறியவர்கள் ஆகியோருடனும் நல்லவிதமாக நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினரான அண்டை வீட்டார், அந்நியரான அண்டை வீட்டார், பக்கத்திலிருக்கும் நண்பர், மற்றும் வழிப்போக்கர், உங்கள் கைவசத்திலுள்ள அடிமைகள் ஆகியோருடனும் நயமாக நடந்து கொள்ளுங்கள்! திண்ணமாக அறிந்து கொள்ளுங்கள். வீண் பெருமையிலும் கர்வத்திலும் உழல்பவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை.” (4:36)

நபியவர்கள் நவின்றார்கள்: “அவர்கள் உங்களுடைய சகோதரர்களும் உறவினர்களும் ஆவார்கள். தனக்கு கீழ் உள்ள சகோதரனுக்கு தான் உண்ணுவது போல உணவும் தான் உடுப்பது போல உடையும் நல்குதல் வேண்டும். அவர்களால் செய்ய முடியாத கடினமான வேலைகளை அவர்களுக்கு ஏவக் கூடாது. அப்படி கடினமான பணிகளில் நீங்களும் சேர்ந்து ஈடுபடுங்கள்.” (அல்புகாரி)

உங்களில் யாரும் இந்த ஆண் எனது அடிமை என்றோ இந்தப் பெண் எனது அடிமை என்றோ கூறக் கூடாது. ஏனென்றால், அவர்களை உங்களது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்த அல்லாஹ், உங்களையும் அவர்களின் அடிமையாக மாற்றி வைத்து விடுவதற்கும் ஆற்றலுடையவனாக இருக்கின்றான் என்று நபியவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.

மேலும் நபியவர்கள் சொன்னார்கள்: “யாராவது தனது அடிமையைக் கொலை செய்தால் அவனை நாமும் கொலை செய்வோம். யாராவது தனது அடிமையின் உறுப்புக்களை சிதைத்தால் நாமும் அவனின் உறுப்புக்களைச் சிதைப்போம். யாராவது தனது அடிமைக்கு விதையடித்தால் நாமும் அவனை அவ்வாறே செய்வோம்.” (அல்புகாரி, முஸ்லிம்).

இவ்வாறு நல்ல உணவு, நல்ல உடை, நல்ல வசிப்பிடம் ஆகியவற்றை இஸ்லாம் அவர்களுக்கு உறுதி செய்ததன் மூலம் அடிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. சுதந்திரமான பெண்களுக்குப் போலவே அடிமைப் பெண்களுக்கும் மஹர் என்னும் விவாக நன்கொடை வழங்கியே அவர்களைத் திருமணம் செய்ய வேண்டும் என்றும் இஸ்லாம் கட்டளை பிறப்பித்தது.

அல்குர்ஆன் போதிக்கின்றது.

“உங்களில் எவர் சுதந்திரமான பெண்களைத் திருமணம் செய்யும் வசதி வாய்ப்புப் பெறவில்லையோ அவர்கள் தமது ஆதிக்கத்தின் கீழ் உள்ள இறை நம்பிக்கை கொண்ட அடிமைப் பெண்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளட்டும்! அல்லாஹ் உங்கள் நம்பிக்கையை நன்கறியக் கூடியவன். நீங்கள் ஒருவர் இன்னொருவரிலிருந்து தோன்றியிருக்கின்றீர்கள். எனவே அவ்வடிமைப் பெண்களை அவர்களின் பராமரிப்போரின் அனுமதியுடன் திருமணம் செய்து கொள்ளுங்கள்! மேலும் அவர்களுக்குரிய மஹரை நல்ல முறையில் அவர்களுக்கு கொடுத்து விடுங்கள்.” (4:25)

நபியவர்கள் சொன்னார்கள். “நீங்கள் உங்கள் தலைவருக்கு செவிசாய்த்து கீழ்ப்படிந்து நடவுங்கள். தலைவராக வருபவர் திராட்சை போல சுருண்ட முடி கொண்ட ஒரு கறுப்பு நீக்ரோ அடிமையாக இருந்தாலும் சரியே!”

கலீஃபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) தனது மரணப் படுக்கையில் இருக்கும்போது அடுத்த கலீஃபா யார் என்று ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கும்போது தனது உணர்வைப் பின்வருமாறு வெளிப்படுத்தினார்கள்:

“அபூ ஹுதைபாவினால் விடுதலை செய்யப்பட்ட அடிமை சாலிம் உயிருடன் இருந்திருப்பாரேயானால் அவரையே எனக்குப் பின் கலீஃபாவாக நான் நியமித்திருப்பேன்.”

“அபூ ஹுதைபாவினால் விடுதலை செய்யப்பட்ட அடிமை சாலிம் உயிருடன் இருந்திருப் பாரேயானால் அவரையே எனக்குப் பின் கலீஃபாவாக நான் நியமித்திருப்பேன்.”

அபூ பக்ர் ஸித்தீக், உமர் பாறூக் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்ற பெரும் பிரமுகர்களான தோழர்களைக் கொண்ட பெரும் படைக்குத் தலைமை வகிப்பதற்கு தனது விடுதலை செய்யப்பட்ட அடிமை ஸைதின் மகன் உஸாமாவை நபியவர்கள் நியமித்தார்கள். அது மட்டுமல்ல, தனது மாமியின் மகள் ஸைனபை தன்னால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஸைதுக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள்.

நபியவர்கள் சுதந்திரவான்களான அரபிகளுக்கும்

அடிமைகளுக்கும் இடையே சகோதரத்துவத்தை ஏற்ப டுத்தினார்கள். நீக்ரோ அடிமை பிலாலும் கஷ்அமி கோத் திரத்தைச் சேர்ந்த காலித் இப்னு றுவைஹாவும் தம்முள் சகோதரர்களாகினார்கள். அடிமையாய் இருந்த ஸைதை யும் தனது சிறிய தந்தை ஹம்ஸாவையும் சகோதரராக்கி னார்கள். அடிமையாய் இருந்த காரிஜ் இப்னு ஸைதும் பின்னர் இஸ்லாத்தின் முதலாவது கலீஃபாவாக வந்த அபூ பக்ர் ஸித்தீக்கும் சகோதரப் பிணைப்பில் இணைக் கப்பட்டார்கள்.

அடிமைகளைப் புறக்கணிப்பதற்கோ துன்புறுத்துவதற்கோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை. தனது அடிமையை நடந்து வர விட்டு குதிரையின் மேல் அமர்ந்து சென்று கொண் டிருந்த மனிதரைக் கண்ட அபூ ஹுரைரா (ரழியல் லாஹு அன்ஹு) சொன்னார்: "நீங்கள் அவரையும் உங்கள் பின்னால் அமரச் செய்வீர்களாக. அவர் உங்களது சகோ தரர் ஆவார். அவருக்கும் உங்களைப் போன்ற ஆன்மாவே இருக்கிறது."

இந்த வகையில் இஸ்லாம் அடிமைகளுக்கு கண்ணி யத்தையும் சமூக அங்கீகாரத்தையும் வழங்கி அவர்க ளையும் கவனயீர்ப்புள்ள பிரஜைகளாக மாற்றியது. மேலும் அவர்களது உரிமைகளைப் பாதுகாத்ததுடன் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களையும் அநியா யங்களையும் கடும் குற்றங்களாகக் கருதி அவற்றுக்கு தண்டனைகளையும் நிர்ணயித்துள்ளது. அத்துடன் கட மைகளில் கூட அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டு தண்டனைகளிலும் தளர்ச்சி அளிக்கப்பட்டுள்ளது.

*02.* இஸ்லாம் அடிமை முறையை ஓர் அடிப்படை முறைமையாக தொடர்ந்து நிலைத்திருப்பதை அங்கீ கரிக்கவில்லை. இஸ்லாம் எடுத்த நடவடிக்கைகள் அடிமைத்துவத்தை இறுதியில் முற்றாக ஒழிப்பதற்கான திட்டமிட்ட படிமுறைகளாக அமைந்துள்ளதைக் காண முடியும். அடிமைகளை விடுதலை செய்வது மிகப் பிரதா னமான நற்செயலாக இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்டது. அல்லாஹ் பின்வருமாறு வினவுகின்றான்:

*"மனிதன் ஏன் கடினமான அந்த மலைப் பாதையைக் கடந்து செல்லவில்லை? அந்தக் கடினமான மலைப் பாதை என்னவென்று உமக்குத் தெரியுமா? ஒருவனை அடிமைத்த ளையிலிருந்து விடுவிப்பதே அது." (90: 11-13)*

இஸ்லாம் அடிமைகளை விடுதலை செய்வதற்காக ஸகாத் என்னும் கட்டாய வரியில் ஒரு பங்கையே ஒதுக்கியது. (பார்க்க- 9: 60)

ஒருவருக்கு தமது சொந்த அடிமைகளையோ அல்லது மற்றவர்களின் அடிமைகளை விலைக்கு வாங்கியோ விடு விக்க முடியும். இவை இஸ்லாம் அடிமைகளை விடுதலை செய்வதற்கு ஏற்படுத்திய வழிமுறைகளாகும். இந்த அடிப்படையில்தான் நபியவர்களும் அவர்தம் தோழர் களும் அடிமைகளை விடுதலை செய்தார்கள். தயாள குணம் கொண்ட அபூ பக்ர் ஸித்தீக் (ரழியல்லாஹு அன்ஹு) தமது செல்வத்தில் பெரும் பகுதியை அடிமைகளை வாங்கி விடுதலை செய்வதற்காகவே செலவிட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் பத்து பேர்களுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுப்பதை விடுதலைக்குரிய விலையாக நிர்ணயித்தார்கள்.

பல பாவங்களுக்குரிய பிராயசித்தமாக அடிமைகளை விடுதலை செய்வதை இஸ்லாம் பிரதானமானதாகவும் முன்னுரிமையானதாகவும் விதித்தது. ஒரு முஃமினை இன்னுமொரு முஃமின் கொலை செய்யக் கூடாது. அவ்வாறு யாராவது தவறுதலாக ஒரு நம்பிக்கையாளரைக் கொலை செய்து விட்டால் அதற்குப் பிராயச்சித்தமாக அவர் ஒரு முஃமினான அடிமையை விடுதலை செய்வதுடன் கொலையுண்டவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்கு தலும் வேண்டும். கொலையுண்டவரின் குடும்பத்தினர் நஷ்டப் பரிகாரத்தை விட்டுக் கொடுத்தாலே தவிர. (பார்க்க- 4: 92)

பல பாரதூரமான பாவங்களுக்குப் பரிகாரமாக அடி மைகளை விடுதலை செய்யுமாறு இஸ்லாம் பணிக்கிறது. சத்தியத்தை முறித்தல், ரமழான் நோன்பில் பகற்பொழு தில் மனைவியுடன் கூடுதல் போன்ற குற்றங்களுக்கு பிரா யச்சித்தமாக அடிமையை விடுதலை செய்வதையும் ஒரு தீர்வாக முன்வைக்கிறது. இவ்வாறு அடிமைத்துவத்தை ஒழிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை இஸ்லாம் மேற் கொண்டது. அடிமைகளை விடுதலை செய்பவர்களுக்கு மறுமையில் மகத்தான கூலி உண்டு என வாக்குறுதி அளித்தது. இஸ்லாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணத்தால் வரலாற்றில் வேறு எங்கும் காண முடியாத அளவுக்கு பெருந்தொகையில், புரட்சிகரமான முறையில் அடிமைகள் விடுதலை செய்யப்பட்டதை இஸ்லாமிய சமூகத்தில் பார்க்கின்றோம்.

அடிமைகள் விடுதலைப் பத்திரம் எழுதுவதன் மூலம் தமது விடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கும் இஸ்லாம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. தனது எஜமா னருடன் குறித்த ஒரு தொகையைக் கொஞ்சம் கொஞ்ச மாகச் செலுத்துவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு அவ்வாறு அதனைச் செலுத்துவதன் மூலம் விடுதலைப் பெற்றுக் கொள்வதாகும். இவ்வாறான கட்டங்களில் எஜமான் கட்டாயம் விடுதலைக்கு சம்மதிக்க வேண்டும். இதனை நிராகரிப்பதற்கோ அதனைத் தாமதப்படுத்துவதற்கோ எஜமானனுக்கு முடியாது. விடுதலைப் பத்திரம் எழுதப் பட்ட அடுத்த நிமிடம் முதலே அடிமைத்துவத்திலிருந்து அவன் விடுபட்டு விடுகின்றான். அதன் பின்னர் அவன் தொழிலாளி என்ற அந்தஸ்தை அடைந்து விடுகின்றான். அவனுக்கு தான் செய்யும் வேலைக்கும் தனது எஜமான னிடமிருந்து சம்பளம் கிடைக்கும்.

(56ஆம் பக்கம் பார்க்க)



ஹிந்தி மூலம்:
மௌலானா வஹீதுத்தீன் கான்
தமிழில்:
ஸீயெம்மே அமீன்

# தற்கொலை வேண்டாம்!

வெற்றிக்கான வழிமுறைகள் - 03

பாகிஸ்தானின் ஓய்வுபெற்ற ஜெனரல் அதீகுர் ரஹ்மான் பாகிஸ்தான் பெடரல் ஸாவிஸின் தலைவராக ஒரு சமயம் இருந்தார். அவர் ஒரு முஹாஜிர் (அதாவது, சுதந்திரத்துக்குப் பிறகு நாட்டுப் பிரிவினை நடைபெற்ற சமயத்தில் பாகிஸ்தானுக்கு வந்தவர்). இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பீல்ட் மார்ஷல் மாணிக் ஷாவுடன் அவர் பர்மாவில் பணியாற்றியிருக்கிறார்.

1984இல் ஜெனரல் ரஹ்மான், நிர்வாகம் சம்பந்தமான ஒரு வேலைக்காக டில்லிக்கு வந்தார். அப்போது ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில், தான் பர்மாவில் இருந்தபோது, மாணிக் ஷா கடும் காயங்களுக்கு உள்ளானார். வேதனை தாங்க முடியாமல், தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொள்வதென அவர் தீர்மானித்தார். அதற்காக ஜெனரல் ரஹ்மானிடம் கைத்துப்பாக்கியைக் கேட்டார். ஜெனரல் ரஹ்மான் கைத்துப்பாக்கியைக் கொடுக்க மறுத்து விட்டார். ஜெனரல் ரஹ்மான் சிரித்தபடி, மாணிக் ஷா 1971இல் நடைபெற்ற யுத்தத்தின்போது எங்களோடு சேர்ந்து எவ்வளவோ செய்தார். நான் அவரை அந்த நேரத்தில் அறிந்திருந்தால், நிச்சயமாக அவருக்கு என்னுடைய கைத்துப்பாக்கியைக் கொடுத்திருப்பேன் என்று சொன்னார்." (டைம்ஸ் ஒப் இந்தியா, 20 பெப்ரவரி, 1984)

மாணிக் ஷா இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, நம்பிக்கை இழந்த நிலையில் தற்கொலை செய்து கொள்ள நாடினார். இருந்தபோதிலும், அதற்கு 25 வருடங்களுக்குப் பிறகு, 1971ஆம் ஆண்டு யுத்தத்திலே அவர் வெற்றி வீரராக மிளிர்ந்தார்.

இஸ்லாத்தில் தற்கொலை ஹராமாக்கப்பட்டுள்ளமைக்கான காரணம், தற்கொலை செய்வது இறைவன் மீது முற்றிலும் நம்பிக்கை இழந்து விடுவதைக் குறிக்கும். அத்தோடு, அவன் மறுமையை மறுப்பது போன்றதுமாகும். மரணத்துக்குப் பிறகு அவன் அழிந்துவிட மாட்டான். மாறாக, மறுமுறை உயிர் வாழ்ந்து ஆகிரத் என்ற உலகத்தைச் சென்றடைவான் என்பதில் அவனுக்கு நம்பிக்கை இருக்குமானால், அவன் ஒருபோதும் தற்கொலை செய்துகொள்ள மாட்டான். எந்த மனிதனிடம் மறுமைப் பிரச்சினையின் பயங்கரம் மனதில் எழுமோ, அவனுக்குத் தன் முன்னாலுள்ள பெரும் பெரும் பிரச்சினைகள் எல்லாம் அற்பமானவையாகவே தெரியும்.

இதனோடு இன்னுமோர் அம்சமும் இருக்கின்றது. தற்கொலை செய்வது ஹராமாக்கப்பட்டிருப்பது, ஒரு மனிதன் தற்காலிகமான துன்பங்களால் மனம் தடுமாறி, தன்னுடைய எதிர்காலத்தை மறந்துவிடலாகாது என்ற செய்தியைத் தெரிவிப்பதாகவும் இருக்கின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் துன்பம், வேதனை என்பவற்றை அனுபவிக்கின்ற காலம் வரக்கூடிய இடமே உலகமாகும். ஆனால், அந்தக் காலப்பகுதி எப்போதும் தற்காலிகமானதே. மனிதன் இந்தக் காலப்பகுதியைச் சகித்துக் கொண்டால் இருண்ட நிகழ்காலத்தில் அவனுக்காக ஓர் ஒளிமயமான எதிர்காலம் மறைந்திருக்கிறது என்பது அவனுக்கு வெகுவிரைவில் தெரியவந்து விடுகிறது. ஆனால், ஒருவன் தோல்வியுற்றுத் தன்னைத் தானே அழித்துக் கொள்ள விரும்பியிருக்கும் நிலையில், எதிர்காலமோ அவனுடைய பெயரை வெற்றியாளனாக உலக வரலாற்றிலே பதியவைக்கும் எதிர்பார்ப்பில் இருந்தது!

# நன்மை செய்யும் சமூகமே வெற்றி பெறும் சமூகம்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தனி மனித, குடும்ப, சமூகத்தை மையப்படுத்தியதான பல்வேறு சீர்த்திருத்தப் பணிகளையும் சமூக நலத் திட்டங்களையும் முன்னெடுத்து வருவதை அறிவீர்கள். நாளாந்த, வாராந்த, மாதாந்த செயற் திட்டங்களைப் போலவே வருடாந்த செயற் திட்டங்களையும் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தி வருகிறது. முஸ்லிம் சமூகத்தை அறிவு, ஆன்மிக ரீதியில் தயார்படுத்துவதன் ஒரு பிரதான செயற்பாடாகவே வருடாந்த இஜ்திமா அமைந்திருக்கிறது.

அந்த வகையில் இம்முறையும் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற இஜ்திமாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. "நன்மை செய்யும் சமூகமே வெற்றி பெறும் சமூகம்" என்ற கருப்பொருளில் நடைபெறும் இஜ்திமா தொடர்களில் "இணக்கமான வாழ்வு; இனிய சுவனம்", "மனித சமூகத்தின் ஆக்கமும் அழிவும்" ஆகிய இரு தலைப்புகளில் பிரதான உரைகள் இடம்பெறுகின்றன.

நன்மை உண்மையானது; இலகுவானது; இயல்பானது; அனைவரும் விரும்பக் கூடியது. தீமை பிழையானது; சிரமத்தையும் மன அழுத்தத்தையும் தரக் கூடியது; உள்ளத்தை உறுத்தக் கூடியது; அனைவரும் வெறுக்கக் கூடியது.

என்றாலும் மனிதர்கள் தீமை செய்கிறார்கள். எப்படிச் செய்கிறார்கள்? தீமை செய்பவர்கள் தீமையை நன்மை என்று கருதி அதில் ஈடுபடுவதில்லை. தாம் செய்வது பாவமான காரியம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். என்றாலும், அவர்கள் தீமை செய் கிறார்கள். காரணம், அவர்கள் பல்வேறு காரணிகளால் தீமை செய்வதற்கு தூண்டப்படுகிறார்கள். எனினும், ஏனையோர் தங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றே அவர்கள் நினைக்கிறார்கள். தீமை செய்கின்றவர்கள் கூட ஏனையோர் தங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் எனின், நன்மை தானே ஒரு மனிதனின் உள்ளத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அத்தகைய நன்மை உலகில் வளர வேண்டும்; வாழவேண்டும். இஸ்லாம் அனைத்து நன்மைகளினதும் இருப்பிடமாகும்.

தனி மனிதன் செய்ய வேண்டிய நன்மைகள், குடும்பங்கள் செய்ய வேண்டிய நன்மைகள், சமூகம் செய்ய வேண்டிய நன்மைகள், நிறுவனங்களால் நடக்க வேண்டிய நன்மைகள், அறிவு, ஆற்றல், திறன் என்பவற்றால் நடக்க வேண்டிய நன்மைகள், ஆட்சி, அதிகாரத்தினால் செய்ய வேண்டிய நன்மைகள் முதலான அனைத்து நன்மைகளதும் இருப்பிடமாகவே இஸ்லாம் இருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்தையும் அல்லாஹ் நன்மை செய்யும் சமூகமாகவே சித்திரிக்கிறான்.

"நீங்கள்தான் மனித சமூகத்திற்கெனத் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமூகம். (காரணம்) நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள்; தீமையைத் தடுக்கின்றீர்கள். அல்லாஹ்வை ஈமான் கொள்கின்றீர்கள்." (ஆலு இம்ரான்: 104)

நன்மையை வாழவைத்து தீமைகளை இல்லாமல் செய்கின்ற சமூகம்தான் சிறந்த சமூகம் என அல்லாஹ் பிரஸ்தாபிக்கின்றான்.

அத்தகையதொரு சமூகம் தனது அந்தஸ்தை உணர வேண்டும். உலகில் அதிகம் நன்மை செய்யும் சமூகமாக மாற வேண்டும். இந்த நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ஒரு சிறப்பான ஒன்றுகூடல். இந்த ஒன்றுகூடலில் பங்குபற்றிப் பயனடைய உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**இஜ்திமா நடைபெறும் திகதிகளும் இடங்களும்:**

| | |
|---|---|
| 13.06.2014 - | பலாங்கொட கொரகஹமட ஜுமுஆப் பள்ளிவாசல் |
| 14.06.2014 - | திஹாரிய |
| 15.06.2014 - | பேருவளை ஹுமைஸரா கேட்போர்கூடம் |
| 08.06.2014 - | ஜுமுஆ மஸ்ஜித், 7ஆம் கட்டை, அக்குரணை (நேரம்: காலை 08.30 மணி முதல் பகல் 12.00 மணி வரை) |

நேரம்: மாலை 04.15 மணி முதல் இரவு 08.30 மணி வரை

BIT

# UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING

# BACHELOR OF INFORMATION TECHNOLOGY

*Kick start your Degree at the One & Only Institute with remarkable achievements in recent BIT Graduations*

2 Batch Tops 2 First Class Degrees
4 Gold Medals 8 Second Class Degrees

**New Intake 2014**

**in just 2 years : 2013 & 2014 Convocations**

*Entry Requirement :* *A/L 3 Passes/ FIT*

## Semester 1 - Batches Commencing

### Part Time Degree Programme

Lectures conducted on a single day per week basis.

Batch 1 : Tue Just Commenced 9.30am - 3.30pm
Batch 2 : Sat 07th June 2014 8.15am - 6.00pm
Batch 3 : Sun 29th June 2014 8.15am - 6.00pm

After 2014 A/L Batches

More Batches will start in month of September & October.

Can Apply with Pending A/L Results.

If you do not have A/L 3 Passes, start BIT with FIT
FIT new Batch commencing on Sat 14th June 08:30 – 03:30

Standard Course Fee : Rs. 26,000/=
(5,000/= X 5 + Reg Fee 1,000/=)

University student : Rs. 21,000/=
(5,000/= X 4 + Reg Fee 1,000/=

### FullTime Degree Programme

BIT Xclusive (Full time)

Full time Degree programme covers the entire BIT Degree while including Industry Oriented Training Programmes and comprehensive guidance for the final year project.

Java Microsoft .net MySQL php Joomla!

Day : Mon to Fri [3 days]
Time : 9.30am - 4.00pm
Registrations Closing : 15th June 2014
Commencing on : Tuesday, 17th June 2014

**Payable in installments**

Registration Fee : Rs. 25,000/=
+
Yr 1 - 8 Inst * 10,000/=
Yr 2 - 8 Inst * 10,000/=
Yr 3 - 4 Inst * 10,000/=

Total Cost :Rs. 225,000/=

IDM PREMIER CAMPUS

# IDM Premier Campus (Pvt) Ltd.

No. 15, Lauries Place, Duplication Road, Colombo-04.
011 30 40 507 , 0112 50 85 30 | info@idmcampus.lk

**0777 795 334 | www.idmcampus.lk**

**இஸ்லாம்...** (52ஆம் பக்கத் தொடர்)

மேலும் அவனுக்கு வேறு இடத்திலும் இனிமேல் தொழிலாளி என்ற நிலையில் வேலை செய்ய முடியும். தனது விடுதலைக்கான பணத்தை விரைவில் சேர்த்துக் கொள்ளவும் முடியும். இஸ்லாம் அறிமுகம் செய்த இந்த முறையை 14ஆம் நூற்றாண்டில் தான் சில ஐரோப்பிய நாடுகள் நடைமுறைப்படுத்தியதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட இந்த வழிமுறைகளினூடாக விடுதலை அடைந்த பலர் பல முக்கியமான பதவிகளையும் அரசியல், நிர்வாக அந்தஸ்துகளையும் அடைந்துள்ளனர். பிலால் இப்னு ரவாஹா போன்று மிகவும் தனித்துவமான இடத்தை வகித்தவர்களும் அவர்களில் உண்டு.

*03.* தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்த அடிமைப் பரம்பரைக்கு இஸ்லாம் முற்றுப்புள்ளி வைத்தது. எஜமானனுக்கு அடிமைப் பெண்களின் மூலம் பிறந்த பிள்ளைகள் பூரண சுதந்திரவான்களாகக் கருதப்பட்டனர். அவர்களின் தாய் எஜமானனின் மரணத்தின் பின்னர் சுதந்திரம் பெற்றவளாக மாறினாள். அடிமைகளை விபசாரத்தில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிப்பதையும் இஸ்லாம் தடைசெய்தது.

*04.* அடிமைத்துவத்தைப் படிப்படியாக இல்லாமல் செய்யும் முறையையே இஸ்லாம் அமுல்நடத்தியது. ஒரேயடியாகத் தடை செய்யாததற்குப் பல தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தன. யுத்தம் மூலம் தவிர, அடிமைத்தனம் ஏற்படும் மற்ற எல்லா வழிகளையும் இஸ்லாம் தடை செய்தது. நபியவர்கள் காலத்தில் யுத்தமொன்றில் பிடிக்கப்படும் கைதிகள் ஒன்றில் அடிமைகளாக்கப்படுவர் அல்லது கொல்லப்படுவர். இஸ்லாம் விரும்பாத போதிலும் இதே சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்பட்டது. யுத்தமொன்றில் முஸ்லிம்கள் கைதிகளாகப் பிடிபடும்போது அவர்கள் கொலை செய்யப்படும் அல்லது அடிமையாக்கப்படும் நிலை இருந்ததனால் எதிரிகளை முஸ்லிம்கள் மட்டும் ஒருதலைப்பட்சமாக விடுதலை செய்வது நடைமுறைச் சாத்தியமாக இருக்கவில்லை. ஆயினும், கைதிகளை கொலை செய்வதை இஸ்லாம் தடை செய்தது. கைதிகளை ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டோ அல்லது அவ்வாறு பெறாமலோ விடுதலை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. (பார்க்க- 47: 04)

யுத்தத்தில் பிடிக்கப்பட்ட கைதிகளைத் தனியாக வைத்துப் பராமரிப்பதற்கு வசதியற்றிருந்ததனால் கைதிகளை அடிமையாக்குவது அல்லது கொலை செய்வது அக்கால வழமையாக இருந்தது. இஸ்லாம் கொலை செய்வதைத் தடுத்து அடிமையாக்குவதை தற்காலிகமாக அனுமதித்தது. இஸ்லாம் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு என்ன காரணம் என்பதை பிரபல அறிஞரான பேராசிரியர் முஹம்மத் குத்ப் (ரஹிமஹுல்லாஹ்) பின்வருமாறு விளக்குகின்றார்:

“யுத்தக் கைதிகள் குறித்த நிலைப்பாட்டில் எதிரி சமூகம் வேறொரு முறையை ஏற்றுக் கொள்ளும் வரையில் இஸ்லாமும் கைதிகளை அடிமையாக்கும் நடைமுறையையே பின்பற்ற வேண்டியதாயிற்று. இதற்குக் காரணம், முஸ்லிம் கைதிகளை எதிரிகள் அடிமையாக்கும் நிலையில் இஸ்லாம் மாத்திரம் இதற்கு மாற்றமான நிலைப்பாட்டை எடுப்பது முஸ்லிம் கைதிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என்பதனாலாகும். இங்கே குறிப்பாக விளக்க வேண்டிய ஒரு முக்கியமான அம்சம் உண்டு. “வெறுமனேயோ அல்லது பிரதியீடு பெற்றுக் கொண்டோ விட்டு விடுக” என்ற வசனத்தில் கைதிகளை அடிமையாக்குவது குறித்து குறிப்பிடப்படவில்லை.

இதற்குக் காரணம் இதனை யுத்தம் சம்பந்தமான ஒரு நிரந்தரமான சட்டமாக்காமல் இருப்பதற்காகும். பிரதியீடு பெற்றுக் கொண்டு கைதிகளை விடுதலை செய்வது பற்றியும் பிரதியீடு பெறாமல் கைதிகளை விடுதலை செய்வது பற்றியும் இங்கு குறிப்பிடப்படுகிறது. இதற்குக் காரணம் மனித சமூகத்திற்கு இவை இரண்டுமே அண்மிய எதிர்காலத்தில் அல்லது நீண்ட எதிர்காலத்தில் யுத்தக் கைதிகள் குறித்த சட்டங்களாக வரவேண்டும் என்று இஸ்லாம் எதிர்பார்த் தமையாகும். அடிமைத்துவ முறையை முஸ்லிம்கள் நடைமுறைப்படுத்தியது நிர்ப்பந்த சூழலின் கட்டாயத்தினாலாகும். தவிர இஸ்லாம் விதித்த கட்டாய சட்டங்களின் அடிப்படையிலன்று.” (நூல்: இஸ்லாம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மதம், பக்கம்: 62 மலையாளப் பதிப்பு)

(தொடரும்)

**அல்இஸ்ரா...** (33ஆம் பக்கத் தொடர்)

எனவேதான், முஸ்லிம்கள் ஆட்சி செய்தபோதெல்லாம் அதனைத் தங்கள் பாதுகாப்பின் கீழ் இருப்பதை உறுதி செய்து கொண்டார்கள். இஸ்ரா- மிஃராஜ் பற்றி நினைவு கூறும்போது ஒரு முஸ்லிமின் சிந்தனையை ஆட்கொள்ள வேண்டிய முதல் அம்சம் இதுவாகும். மஸ்ஜிதுல் அக்ஸாவையும் ஜெருஸலத்தையும் மீட்டெடுப்பதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் தன்னாலான பங்கை ஆற்றியாக வேண்டும். அந்தப் புனித பூமியை ஆக்கிரமித்து குடியிருப்புக்களை நிறுவக் கனவு கண்ட யூதர்கள் இன்று தாங்கள் நினைத்தவாறு அத்துமீறியுள்ளார்கள். இமாம் அஹ்மத் மற்றும் இமாம் அத்தபராணி (ரஹிமுஹுல்லாஹ்) ஆகியோர் பதிவுசெய்துள்ள “ஜெருஸலத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்திலும் எனது உம்மத்தில் ஒரு குழுவினர் போராடி வெற்றி பெறுவர்” என்ற அண்ணலாரின் நற்செய்தி இங்கு நோக்கத்தக்கது.

## பாடசாலை மாணவர்களுக்கான புனித ரமழான் மாத ஆன்மீக வதிவிடப் பயிற்சி முகாம்

வருடாந்தம் ரமழான் மாதத்தில் **பராஇமுல் ஈமான்** கலாசார நிலையம் நடத்தி வருகின்ற மேற்படி பயிற்சி நெறியை இம்முறையும் நடத்த திட்டமிட்டுள்ளது.

**கற்பிக்கப்படும் பாடங்கள்:** - இஸ்லாமிய வரலாறு, ஒழுக்க நெறிகள், தஜ்வீத், குர்ஆன் மனனம், சந்தர்ப்பது ஆக்கள்.

**பயிற்சிகள்:** – இபாதத்துகளை முறையாக செய்தல்,நேரத்துக்கு இயங்குதல், ஆளுமை விருத்திக்கான பயிற்சிகள்.

**வழிகாட்டல்கள்:** – வாழ்வின் இலக்கை தீர்மானித்தல், உளவள ஆலோசனைகள் மற்றும் கற்றல், பரீட்சைக்குத் தயாராதல், பெற்றோர், ஆசியர்கள் மற்றும் சமூக உறவு என்பவற்றுக்கான வழிகாட்டல்கள்.

**உங்கள் விண்ணப்பங்களை 20.06.2014 முன் கிடைக்கக் கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:**

### BARA-IMUL IMAN CULTURAL CENTER

No,40/7, Ambagaha Juction, Gothatuwa.

ஆரம்பம்: *02.07.2014 முதல் 24.07.2014*

இடம்: பராஇமுல் ஈமான் கலாசார நிலையம்.

வயதெல்லை: *10 முதல் 13 வரை*



மேலதிக விபரங்களுக்கு: **0777 56 50 51, 011-2685415, 0773 59 55 53**

Be absolutely Clear about Your Future!

# Join asps

**Free** Admission for *first 10 students* and awards.

## Steer your own success

### International Degree Foundation Programmer
- Computer Studies
- Management
- English Skills

### Diploma in Management & Marketing
- Business Management
- Human Resource Management
- Financial Accountant

### Montessori Teacher Training
- Unique opportunity For Girls ambitious to Peruse a teaching Career

### Banking & Finance
- Certificate in Banking & Finance (CBF)
- Diploma in Banking Finance (DBF)

### Quantity Surveying Leading to BSc (Hon) UK
- Diploma level (entry GCE O/L)
- Advance Diploma level (entry NDT, NCT, OUSL)

**For Application & course information**

**077-3347332**

**ACADEMY OF SKY PROFESSIONAL STUDIES**

No: 500, Galle Road, Colombo - 06.

Tel: 0114575043 | 0773347332

## மணமகன் தேவை

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவமான குடும்பப் பின்னணியுடைய யூனானி மருத்துவத் துறையில் கல்வி பயிலும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 22, உயரம் 5' 4") பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள, 30 வயதுக் குட்பட்ட மணமகனை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0777437091**

குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர் தரம் வரை கற்ற அஹதிய்யா பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 37, உயரம் 5' 3") பொருத்தமான 44 வயதுக்குட்பட்ட மணமகனை பெற்றோர் எதிர்பாக்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0712884436, 0776658400**

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தகுந்த காரணங்களுக் காக பஸ்ஹ் முறைப்படி விவாகரத்துப் பெற்ற, கௌரவமான குடும்பப் பின்னணியுடைய மார்க்கப்பற்றுள்ள பட்டதாரி ஆசிரியைக்கு (குழந்தைகள் இல்லை, வயது 31) 37 வயதுக்குட்பட்ட அரசாங்க அல்லது தனியார் துறையில் பணியாற்றுகின்ற மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 0755588775, 0718015821**

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பை முடித்த, தொழில் சார் தகைமையுடன் தற்போது தொழில் புரிகின்ற மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 28, உயரம் 5'2" பொது நிறம்) பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின் றனர்.

**தொடர்புகளுக்கு: 0773143799**

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 36 வயதுடைய மார்க் கப்பற்றுள்ள மணமகளுக்கு (உயரம் 5' 2" பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் மணமகனை எதிர்பார்க்கின்றனர். தகுந்த காரணத்திற்காக விவாகரத்துப் பெற்றவர்க ளும் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: 0777491613**

கண்டி மாவட்டத்ததைச் சேர்ந்த அரசாங்கப்பாடசாலை யில் ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றும் நல்லொழுக்கமும் மார்க்கப்பற்றும் உள்ள அழகிய மணமகளுக்கு (வயது 29, உயரம் 5' 2") 35 வயதிற்குற்பட்ட மார்க்கப்பற்றுள்ள துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 0719771688 9**

**மோடி...** *(19ஆம் பக்கத் தொடர்)*

கணிக்கப்படுகிறனர். முஸ்லிம் அல்லாத சிறுபான்மை யினரும் பலர் இந்திய சமூகக் கட்டமைப்பில் வாழ்கின் றனர். மறுபுறத்தில், இந்தியாவில் அதிகம் ஒரங்கட்டப்படும் சமூகமாகவும் முஸ்லிம்கள் கருதப்படுகின்றனர். இந்தி யாவின் பொரு ளாதாரம் ஸ்திரத்தன்மையை நிறைவாக அடைய வேண்டுமாக இருந்தால், இந்திய முஸ்லிம்களை பொருளாதாரத்திலும் வேலைவாய்ப்பிலும் உள்வாங்கு வது அத்திய வசியமானது என அரசின் உயர் மட்ட அறிக்கை குறிப் பிடுகிறது.


இன்னும், ஆசியாவிலேயே சமூகக் கட்டமைப்பில் அதிகம் பாதிப்புச் செலுத்திய நாடு இந்தியாவாகும். நாவ லாசிரியர் இராதிரேவேதி இந்து முஸ்லிம் பாகு பாட்டை விட ஆண், பெண் வேறுபாடு இந்தியாவை பாதித்திருக் கிறது என்கிறார். இந்தியாவின் மனித அபிவி ருத்திச் சுட்டி குறிகாட்டிகளுக்கு அமைய, ஒவ்வொரு பத்து பெண்களில் நான்கு பேர் வலுக் கட்டாயமாக திரு மணம் செய்து வைக்கப்படுவதாக கணிப்பிடப்படுகின்றது. மேலும், ஒரு பெண் தனது திருமணத்திற்காகா சராசரியாக 30 ஆயிரம் இந்திய ரூபாய்களை சீதனமாக கொடுக்கிறாள் என மனித அபிவிருத்திச் சுட்டி மேலும் குறிப்பிடுகிறது. நாட்டில் 70 வீதமான பெண்கள் ஏதோ ஒரு வகையில் தமது வாழ் நாளில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத் தப்படு வதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதனை விட ஆச்சரியமான அம்சம், உலகில் 136 நாடுகளில் ஆண், பெண் சமத்துவ கணிப்பீடுகளில் 101 ஆவது இடத்தை இந்தியா பெற்றுள்ளது. பெண்களை வலு வூட்டும் எத்த கைய செயற்திட்டங்களையும் முன்வைக்கா மல் இந்தியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இறுதியாக, வெறுமனே நரேந்திர மோடி அளித்தி ருக்கும் அபார பொருளதார அபிவிருத்தித் திட்டங்கள் அல்லது இந்திய அரசியல் கட்டமைப்பு மாத்திரமன்றி, இந்தியா நாளுக்கு நாள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சி னைகளும் புதிய பிரதமரின் அரசியல் காய்நகாத்தல் களின் சுதந்தி ரத்தை வரையறை செய்யலாம் என அரசி யல் பகுப்பாய் வாளாகள் கருதுகின்றனர்.

**நிகாஹ் விளம்பரங்களை தகுந்த ஆவணங்களைப் பெற்று சேவை நோக்கிலேயே பிரசுரம் செய்கின்றோம். இரு தரப்பாரும் விளம்பரங்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர்)**

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

# FAST TRACK PROGRAMMES
Enrol now for new batches
## @ KANDY BRANCH




- **AutoCAD 2D & 3D** with Manual Drafting Practice
- **MEP Drafting**
- **MEP QS Practice**
- **Public Relations** for Moulavis
- **3D Studio Max**

the aCADDemy
College of Architectural Engineering Technology
www.acaddemy.lk

340/1,D.S.Senanayake Road,Kandy
No: 22, Kaburady Road,Kattankudy-01
No:34, Main Street,Sainthamaruthu-05
Email: theacaddemy@gmail.com

**HOTLINES:**
0773 66 58 38
0776 32 34 34
0778 444 110

Registered under:
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION
Ministry of Youth Affairs and Skills Development-Reg. No: P20/0037

துரித தொழில்சார் பாடநெறிகள் IBSல் ஆரம்பமாகின்றன!!

# SYSTEM ENGINEER

## FIRST TIME IN SRI LANKA

- Sonicwall security
- Door access controlling
- CCTV Camera
- Networking
- Hardware
- skill development
- CCNA
- MCSA
- Linux
- PBX
- IT
- WEB

**ATTRACTIVE JOB OPPORTUNITIES BOTH LOCALLY & OVERSEAS**

ஆசிரியப் பயிற்சி நெறியில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுடன்
ஆசிரியராகும் உங்கள் கனவைப் பூர்த்தி செய்யுங்கள்!

**Diploma in Training Skills**

**National Certificate in Pre-School Teaching**

**Diploma in Montessori Training (AMI)**

**Diploma in Child Psychology**

பெண்களுக்கு மட்டுமேயான விஷேட வகுப்புக்கள்

O/L பரீட்சையை எழுதிய மாணவர்களுக்காக விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி

**Degree Foundation Studies in Business & IT**

- Information Technology
- Web Designing
- Graphic Designing
- & English
- Business Management
- Accounting & Book Keeping
- Hardware with Networking

ஒவ்வொரு கற்கை நெறிக்கும் தனித்தனியான சான்றிதழோடு,
கற்கை நெறியைப் பூர்த்தி செய்த சான்றிதழும் வழங்கப்படும்.

# IBS Campus (Pvt) Ltd

67, Kawdana Road, Dehiwala
Tel: 011 2712149, 077 427 1384

89, Mulgampola Road, Kandy
Tel: 081 223 2282, 077 165 8678

Email: info@ibslanka.com, Web: www.ibslanka.com

UNIVERSITY OF WOLVERHAMPTON



கட்டிட நிர்மாணத் துறையில்
மாத வருமானம்
ரூபா **150,000/=** இனை
உறுதி செய்யும்
18 மாத பாட நெறி

# BTEC HND in
# Quantity Surveying

**Leading to BSc (Hons) From UK**

## Why Choose BCAS for Quantity Surveying?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்.
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.
- தற்போது இலங்கையிலேயே Top-Up கற்கைநெறியினை University of Wolverhampton அல்லது London South Bank University உடன் இணைந்து பூர்த்தி செய்யும் அறிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது.
- தற்போது இலங்கையிலேயே MSc கற்கைநெறியினை பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்பு.

5 MSc in Construction Project Management From University of Wolverhampton

4 BSc (Hons) in Quantity Surveying Top-Up From University of Wolverhampton or London South Bank University

3 BTEC HND in Quantity Surveying

2 Foundation Course

1 After O/L

After A/L

www.MacroAdz.com

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For Details : **077 283 4595**

**Corporate Office :**
32, Dharmarama Road, Colombo 6, Sri Lanka.
011 255 9255 info@bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

Registered as a News Paper in GPO/QD/12/NEWS/2014 Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.

ISO 9001 : 2008 CERTIFIED IT INSTITUTE

TURNKEY IT CAMPUS — Join the No. 1

# இலங்கையின் மிகப்பெரிய ஹாட்வெயார் நெட்வர்க் பயிற்சி நிலையம்

IT துறையில் அதிகூடிய ஊதியம் பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

**Great offer for CISCO & Microsoft exam takers at TURNKEY Test Center**

PEARSON VUE-Authorised Test Centre

PROMETRIC TEST CENTER

## Do You Want to be an Internationally Recognized Network Engineer!!

### DACHNP

**Diploma in Advanced Certified Hardware & Network Professional**

Six Recognized Certifications

- **Cisco Certified Network Associate** — CCNA 200 - 120 New Syllabus
- **Microsoft Certified Solution Associate** — MCSA 70 - 410
- **DLNA** — Diploma in Linux Network Administration with Security
- **DWNA** — Diploma in Windows Network Administration — Server 2012
- **DHEN** — Diploma in Hardware Engineering with Networking — PC & Laptop

**MCSA** — Windows 8

**MCSA** — Server 2012

**MCSE** — Server 2012

**CCNA** — Voice, Security

**CCNP** — IP Routing, IP Switch, IP Tshoot

**CCIE** — Routing & Swithing written Exam 350 - 001

CompTIA A+ N+

CEH

## TURNKEY
ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware & Network துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Centre for CISCO & Microsoft Examinations
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- CISCO, Microsoft & Network பாடநெறிகளுக்கு உயரதரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

*Our Accreditations*

Microsoft Partner

ISO 9001: 2008 CERTIFIED COMPANY

**10% SPECIAL DISCOUNT** on any Microsoft Online Exams for TURNKEY students

TURNKEY IT TRAINING
*Dedicated for Professional Coaching*
2 581581

**COLOMBO**
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side) Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

**KANDY**
504/1, Peradeniya Road, Kandy. Tel: 081 2205678, 077 5077456

Email: info@turnkey.lk

**HOTLINE 0772 286 988**
Now register for any course online @ www.turnkey.lk

An Institution registered with Tertiary and Vocation Education Commission of Sri Lanka. Reg No. PO1/200